# வருகிறேன்... ராஜகுமாரி

சுகமான முடிவு கொண்ட சுவையான நாவல்



அகிலா கோவிந்த்

வருகிறேன் ராஜகுமாரி • அகிலா கோவிந்த்

AKI
Y AK
NLB

## பதிப்புரை

இதுவரை ஆசிரியர் அகிலா கோவிந்த் அவர்களின் பத்துக்கு மேற்பட்ட நாவல்களை வெளியிட்டிருக்கிறோம்.

இது மாதிரி தரமான நாவல்களை வெளியிடுவதில் நாங்கள் பெருமை அடைகிறோம். நாவல்களை சிறப்பாக அமைப்பதில் அவருக்கு நிகர் அவரே. அந்த வகையில் இந்நாவல் ஆசிரியர் தன் முத்திரையைப் பதிக்கிறார். 'வருகிறேன்... ராஜகுமாரி...!' இந்நாவலும் தனி சிறப்பை பெறுகிறது.

வாசகர்களே படியுங்கள் இதன் இன்பத்தை அனுபவியுங்கள்.

**- பதிப்பகத்தார்**

# வருகிறேன்... ராஜகுமாரி...!

## 1

வழக்கம்போல் வழிமேல் விழி வைத்து தந்தைக்காக காத்திருந்தாள் மதுரா.

அந்த சிறு ஓட்டு வீட்டின் சிறிய அறையில், ஜன்னலைத் திறந்து வைத்தவாறு, கிடுகிடுவென ஆடும் பழைய மர நாற்காலியில் உட்கார்ந்து மோவாயில் கை வைத்துக் கொண்டு, கண்களால் வெறித்தபடி இருக்கும் அவள் நிலைமையைப் பார்த்தால், யாருக்கும் அப்படித் தான் தோன்றும்.

ஆனால் அவள் சூழ்நிலை அப்படி. பதினாறு வயதில் ப்ளஸ் டூ முடித்த கையோடு வீட்டிலேயே முடங்க வேண்டிய நிர்ப்பந்தம். ''மேல் படிப்பிற்கு நிறைய செலவாகும். நம்மால் முடியாதே கண்மணி...'' என்று தந்தை கலங்கியபோது, ''மேல் படிப்பு வேண்டாம். படித்தால் மட்டும் வேலையா கிடைக்கப் போகிறது. இதுவே போதும்...!'' என சமாதானம் சொல்லி தந்தையின் மனக்குறையை நீக்கினாள்.

ஆனால் அவளுடன் படித்தவர்கள் எல்லாம் துள்ளிக் குதித்தபடி கல்லூரிகளுக்குச் செல்வதை வழியில் பார்க்கும்போது... அந்த ஏக்கம் எழாமல் இல்லை. நிறையப் படித்து கல்லூரி விரிவுரையாளராய் ஆக வேண்டும், நிறைய பேச்சுப் போட்டிகளில், பட்டி மன்றங்களில் கலந்து கொள்ள வேண்டும் என்றெல்லாம் கனவு வைத்திருந்தாள்.

ஆனால் எல்லாமே அவள் ப்ளஸ் டூ முடித்து ரிசல்ட் வரும் சமயமாய் பார்த்து சதி செய்தது. ஒழுங்காய் மில் வேலைக்குப் போய் சம்பாதித்துக் கொண்டிருந்த அப்பாவிற்கு திடீரென வேலை போனது.

மில்லில் ஆள் குறைப்பு செய்கிறோம். நிறையப் பேர் தேவையில்லை, என மில் நிர்வாகம் அறிவித்தது. அடுத்த ஒரே வாரத்தில் பத்தாயிரம் ரூபாயுடன் கணக்கு முடித்து வீட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டார் அப்பா.

மதுராவின் தந்தை சதாசிவம் கொஞ்சம் தைரியமானவர்தான். ஆட்களை சேர்த்துக் கொண்டு மில் நிர்வாகத்திடம் சண்டை போட்டும் பார்த்தார். உண்ணாவிரதம், போராட்டம் என்றெல்லாம் இருந்து பார்த்தார்.



ஆனால் மில் நிர்வாகம் சில அரசியல் தலைவர்களை கைக்குள் போட்டுக் கொண்டு பிரச்சினையை அப்படியே அமுக்கி விட்டது. இனி மில்லில் வேலை கிடைக்காது என்பது சதாசிவத்துக்கு தெரிந்து போயிற்று.

வேறு வேலை தேடுவோம்.. என ஐம்பத்து மூன்று வயதில் இளைஞர் போல் வேலைக்கு அலைந்து பார்த்தார். தடித்த அவர் உடல் பருமனையும் தள்ளாட்டமான அவரது நடையையும் பார்த்த யாரும் அவருக்கு இரக்கப்படவில்லை. வேலை தர முன் வரவில்லை.

அப்படியே தற்செயலாய் வேலை கிடைத்தாலும் இரண்டு மூன்று நாளில் பறி போய்விடும். ஏதேதோ காரணங்கள் சொல்லி நிறுத்தி விடுவர்.

சரி.. சொந்தமாய் ஏதாவது தொழில் செய்வோம் என சிறு பெட்டிக்கடை போல் தொடங்கி காய்கறி வியாபாரம் செய்து பார்த்தார். அதிகாலையில் சைக்கிளைத் தள்ளிக் கொண்டு மார்க்கெட் சென்று பெரிய சாக்கு மூட்டையில் காய்கறிகளை வாங்கி வருவார்.

அவருக்கு ஒத்தாசையாய் மதுராவும் கூட இருந்து காய்கறிகளை பிரித்து அடுக்குவாள். ஒரு மாதம் அப்படி வியாபாரம் செய்து கணக்குப் பார்த்ததில் முந்நூறு ரூபாய் நஷ்டமே ஏற்பட்டது.

வியாபார நெளிவு சுளிவு தெரியாததால், சிலருக்கு இரக்கப்பட்டு கடன் கொடுத்ததால் அது திரும்பி வராக் கடனாப் போய் இந்த நிலை ஏற்பட காய்கறிக் கடையையும் ஒரே மாதத்தில் மூட வேண்டியதாய் போயிற்று.

மதுராவும் சும்மா இருக்காமல் யோசித்து தன் தோழிகள் மூலமாக கற்ற வயர் கூடைகள் பின்னும் முறையை

தொழிலாக்கி கூடைகள் பின்னினாள். இரவு பகல் கண் விழித்து பல நிறங்களில் கூடைகளை உருவாக்கினாள்.

அதை சதாசிவம் கொண்டு போய் சந்தைப் பகுதி கடைகளில் விற்க ஆரம்பித்தார். ஆரம்பத்தில் அவரது கூடைகளுக்கு உரிய விலையை கொடுத்துக் கொண்டிருந்த ஒரு சில கடைக்காரர்கள் அவரது அப்பாவித்தனத்தையும், அதட்டி பேசத் திராணியில்லாத சுபாவத்தையும் கண்டு பணத்தைக் கொடுக்காமல்.. இழுத்தடிக்க.. அந்தத் தொழிலிலும் நஷ்டம் ஏற்பட்டது.

வயர் கூடை பின்னும் தொழிலுக்கும் மூடு விழா நடத்தப்பட்டது. அடுத்து என்ன செய்ய...? என்று யோசித்த போது வீட்டுக்கார பெண்மணி மதுராவிடம், ''பஜாரில் பேன்ஸி கடைக்கு ஆள் தேடுகிறார்கள். நீ போகிறாயா? இரண்டாயிரம் ரூபாய் சம்பளம்..!'' என்றபோது, என்ன இரண்டாயிரம் ரூபாயா? என அதிசயத்துத்தான் போனார்கள்.

சதாசிவம் உடனே சம்மதம் சொல்லிவிட மதுராவும் இரண்டு நாள் அந்த பேன்ஸி கடை வேலைக்குச் சென்று தான் பார்த்தாள். இரண்டு நாள் பிரச்சினையில்லாமல் சென்ற வேலையில் மூன்றாம் நாள் பேன்ஸி கடைக்காரரும் அவளை கூப்பிடும் சாக்கில் பேச்சு சாக்கில் முதுகில் தட்ட கைகளை பிடித்துக் கொள்ள பயத்தில் நடுங்கித்தான் போனாள் மதுரா.

அன்று இரவு அந்த விஷயத்தை சதாசிவத்திடம் சொன்னதும் அந்த பேன்ஸி கடை வேலைக்கும் மூடு விழா நடத்தப்பட்டது.

''இனி நீ வேலைக்குப் போகிற பேச்சே வேண்டாம். உடம்பில் தெம்பிருக்கிற வரை நானே போகிறேன்...'' என உறுதியாய் சொல்லி விட்டார் சதாசிவம்.



அதன்படியே இரண்டு நாட்கள் விடாமல் அலைந்து ஒரு வேலையைத் தேடிக் கொண்டார். அலுவலகம் ஒன்றில் செக்யூரிட்டி என்று சொல்லப்படும் நைட் வாட்ச்மேன் வேலை. மாதம் இரண்டாயிரத்து ஐநூறு சம்பளம்.

வீட்டு வாடகை ஐநூறு போக இரண்டாயிரம் ரூபாயை வைத்து நல்ல விதமாக குடும்பம் நடத்தி விடலாம் என சந்தோஷமாய் கணக்கு போட்டு இருவரும் குஷியாகி விட்டனர்.

சதாசிவத்திற்கும் அந்த வேலை பிடித்துப் போயிற்று. காக்கி உடுப்புடன் சும்மா உட்கார்ந்து விட்டு வருவதற்கு சம்பளமா? என்று தான் நினைத்தார்.

ஆனால் வேலை பார்க்கையில் தான் அது எவ்வளவு கஷ்டம் என்பது புரிந்தது. ஊரே தூங்குகிற வேளையில் அவர் மட்டும் தாயில்லாப் பெண் மதுராவை வீட்டில் தனியே விட்டு விட்டு.. இப்படி கிடக்கிறோமே...? என மனது அல்லாட ஆரம்பித்தது.

அவருக்கு மட்டுமா? மதுராவுக்கும் அதே நிலைதான். அவளுக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து, சிறு வயதிலே தாயை பறி கொடுத்ததிலிருந்து அவளுக்கு எல்லாமே தந்தை தான்! ஒட்டுப் புல்லாய் சிறு வயதிலிருந்து அவரையே சுற்றி வந்த பழக்கம் இப்போதும் தொடர்ந்தது.

அதனாலே இரவு வாட்ச்மேன் வேலைக்காக அவர் சென்றதும், அவரைப் பிரிந்த கவலையில், அவர் தூங்காமல் இரவு முழுவதும் விழித்திருப்பாரே... என்ற நினைவில் அவளும் கொட்டக் கொட்ட விழித்திருப்பாள்.

இப்படி தந்தைக்காக அவளும், அவளுக்காக தந்தையும் ஒருவரையொருவர் பிரிந்து வாடியதாலே இருவருக்கும் அந்த 'செக்யூரிட்டி வாட்ச்மேன்' வேலையும்

பிடிக்காமல் போயிற்று. அதனாலே இருவரும் முடிவெடுத்து அதற்கும் ஒரு நாள் மூடுவிழா நடத்தினர்.

அந்த நேரத்தில்தான் ஆபத்பாந்தவராய் சதாசிவத்தின் பழைய நண்பர் ஒருவர் தேடி வந்தார். அவர் பணத்தை வட்டிக்கு விட்டு சம்பாதிக்கும் தொழிலை செய்து நல்ல லாபம் பெற்றுக் கொண்டிருக்க சதாசிவத்திற்கும் அத் தொழிலைச் செய்ய ஆசையாயிற்று. அவர் கையில் மில் வேலை மூலம் கிடைத்த பணத்தில் ஏழாயிரம் ரூபாய் மிச்சம் இருந்தது.

நண்பர் தைரியம் கொடுக்க சதாசிவம் துணிந்து அந்த ஏழாயிரம் ரூபாயை முதலாய் போட்டு வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழிலை ஆரம்பித்தார்.

ஓரிரு மாதங்கள் எவ்விதப் பிரச்சினையுமில்லாமல் நல்ல விதமாக தொழிலும் ஓடியது. கடன் வாங்கியவர்கள் தேடி வந்து வட்டியைக் கொடுத்து விட்டுப் போக... சதாசிவம் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவில்லை.

இவ்வளவு நாள் இந்தத் தொழிலில் இறங்காமல் போய் விட்டோமே? என ஆதங்கப்பட்டு அகமகிழ்ந்தார்.

அவரது சந்தோஷம் ரொம்ப நாள் நீடிக்கவில்லை. அதிக வட்டி தருவதாக ஒரு வியாபார நண்பர் கேட்க மொத்த பணத்தையும் தூக்கி அவருக்கே கடனாய் கொடுத்தார் சதாசிவம்.

அப்படிக் கொடுத்தால் வந்தது வினை. வியாபார நண்பர் பணத்தை தொழிலில் போட... தொழிலில் பெரும் நஷ்டம். அந்த வியாபார நண்பர் சொல்லாமல் கொள்ளாமல் இரவோடிரவாய் ஊரை விட்டு ஓடி விட்டார்.

விதி மறுபடியும் விளையாடியது போல் செய்தி கேள்விப்பட்டு சதாசிவம் இடிந்து போனார். ஒன்றல்ல.. இரண்டல்ல.. அவர் சேமிப்பாய், சொத்தாய் இருந்த ஏழாயிரம் ரூபாய் பணமும் ஒரே நாளில் நிர்கதியாய் போயிற்று!



இரண்டு மூன்று நாட்கள் தந்தையும் மகளும் வெளியே எங்கும் போகாமல் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தபடி முடங்கிக் கிடந்தார்கள். மதுராதான் இருக்கிற அரிசியைக் கொண்டு சோறு பொங்கினாள்.

மறுநாள் அதுவும் இல்லாமல் போய் அரை வயிறு கஞ்சிதான் மிஞ்சியது. அன்று கஞ்சியையும் ஊறுகாயையும் கடித்துச் சாப்பிட்ட சதாசிவம் ஏதோ யோசனை தோன்றியவராய் பிரகாசத்துடன் நிமிர்ந்தார்.

''நான் வெளியில் ஒரு எட்டு நடந்து விட்டு வருகிறேன்...'' என்று சொல்லியபடி கிளம்பிப் போனார்.

மதுராவும் தந்தை யாரும் தெரிந்தவர்களை, நண்பரைப் பார்த்து எதுவும் உதவி கேட்பார் நல்ல வழி கிடைக்கும் என நினைத்தாள்.

சதாசிவம் போனவர் போனவர்தான். மதியம் மணி மூன்றைத் தாண்டியும் திரும்பிய பாடில்லை.

இதோ.. அவருக்காகத்தான் மதுரா வழிமேல் விழி வைத்து அந்த பழைய கிடுகிடு நாற்காலியில் உட்கார்ந்தபடி ரொம்ப நேரமாய் காத்திருந்தாள்!

ஆயிற்று. ஒரு வழியாய் மணி நான்கை நெருங்கும் போது... முன்புறமாய் தந்தை வரும் அரவம் கேட்டு உற்சாகமாய் நிமிர்ந்தாள்.

அவளது மை விழிக் கண்கள் அகல விரிந்து தந்தையையே ஆவலாய்ப் பார்த்தன.

சதாசிவமும் தனது இடுங்கிய கண்களை விரித்தபடி அவளையே பார்த்தார்.

''இன்னும் ஒரே.. ஒரு வழிதான் இருக்கிறது. கண் மணி...!'' என்றார் அவர்.

## 2

''ஒரு வழி இருக்கிறது கண்மணி..'' என தந்தை சொன்னதும் மதுராவுக்கு முதலில் ஒன்றும் புரியவில்லை.

தந்தை ஒரு மாதிரியாக பார்த்து விரக்தியாய்ச் சொல்வது போல் இருக்கக் கண்டுதான் புரியாமல் குழம்பினாள்.

ஆனால் தந்தை சட்டென அதுவரை தன் கையில் மறைத்து வைத்திருந்த சிறு பாட்டிலைக் காட்டியதும் அவளுக்கு சகலமும் புரிந்து போயிற்று.

மூட்டைப் பூச்சி மருந்து பாட்டில்!

கடவுளே! கடைசியில் தந்தை தேர்ந்தெடுத்தது இந்த வழியைத் தானா? பேப்பரில் தற்கொலைச் செய்தி களைப் பார்த்துவிட்டு, 'அச்சச்சோ' என உச் கொட்டிய வளே இப்போது பேப்பர் செய்தியாய் ஆகப் போகிறாளா?

அப்படியானால் அவர்கள் வாழ உலகில் வழியே இல்லையா?

''வேறு வழி இல்லைதான் அம்மா..!'' என கையை விரித்தார் சதாசிவம். ''நானும் எத்தனையோ பேரிடம் போய் கேட்டுப் பார்த்து விட்டேன். குறைந்த சம்பளம் கிடைத்தால் கூட பரவாயில்லை.. என கெஞ்சிப் பார்த்து விட்டேன். யாரும் நமக்காக இரக்கப்படக் காணோம். எல்லோரும் கை விரித்து விட்டார்கள்...''



''அதற்காக தற்கொலை செய்ய வேண்டுமா?''

சதாசிவம் அதற்கும் வேதனையோடு தலையை ஆட்டினார்.

''எனக்கு இப்படிச் செய்வது பிடிக்கவில்லைதான். ஆனால் பாரம்மா... இந்த உலகில் என்னை விடு.. எனக்கு திடீரென்று ஏதாவது ஆகிவிட்டால்.. கொஞ்சம் உன் நிலையை யோசித்துப் பார்... அறியாச் சிறுமி போல் இருக்கும் நீ இந்த இரக்கமில்லாத உலகத்தில் தன்னந் தனியாய் என்ன செய்வாய்? என்னதான் செய்யக் கூடும்? அதனாலே.. பார்த்தேன். பஸ்ஸில் ஏறுவது போல் நாம் இருவரும் சேர்ந்தே மேலே சென்று விட்டால்.. பிரச் சினையிராது அல்லவா.. அதான் இப்படி ஒரு முடிவெடுத் தேன்.''

சதாசிவம் சொல்லி முடிக்க மதுராவுக்கு எங்கிருந்து தான் அவ்வளவு தைரியம் வந்ததோ, எழுந்தவள் சட்டென அவர் கையிலிருந்த மூட்டைப் பூச்சி பாட்டிலை பிடுங் கினாள். ஜன்னல் வழியே வேகமாய் தூர எறிந்தாள்.

''என்னம்மா.. செய்கிறாய்..?'' என திகைத்து அதிர்ந்த வரிடம், ''அப்பா, இது வடிகட்டிய கோழைத்தனம்! இதற் காகவா, இப்படிச் சாவதற்காகவா பிறந்து வளர்ந்து இவ் வளவு நாள் உடம்பை வளர்த்தோம்? என் பள்ளிக்கூட டீச்சர் ஒருவர் சொன்னதுதான் எனக்கு ஞாபகத்திற்கு வருகிறது. உடல் ஊனமுற்றோர், கண் பார்வை தெரியாத வர்கள் எல்லாம் கூட தைரியமாய் எதிர் நீச்சல் போட்டு வாழ்க்கையை வாழ நினைக்கும்போது.. நல்ல திடகாத்திர உடம்புடன் இருக்கும் நாம் வெறும் ஏழ்மைக்காக அஞ்சி வாழ்க்கையை முடித்துக் கொள்ள நினைப்பது.. முட்டாள் தனம் அல்லவா?''

மதுரா குரல் உயரச் சொன்னது சதாசிவத்தை ஒரு கணம் தடுமாறச் செய்தது. எதிர்கால வாழ்வைக் கண்டு அஞ்சாமல் துணிச்சலாய் அவள் இருக்கிறாளே.. நாம்தான் கோழைத்தனமாய் யோசித்து விட்டோமோ..? என அவரை சிந்திக்க வைத்தது.

ஓரிரு நிமிடம் கண்களை அப்படியே மூடிக் கொண் டார்.

மதுராவுக்கே தானா இப்படியெல்லாம் பேசுகிறோம் என்ற ஆச்சரியமும் ஏற்பட்டது. சாவைக் கண்டு அவள் பயந்ததில்லை. ஆனால் சிறுவயது முதலே... தற்கொலை செய்வது மிகவும் கோழைத்தனமான செயல். என அவள் மனதில் ஆழமாய் பதிந்து போய் இருந்தது. அதனாலே தந்தை அப்படியொரு முடிவைச் சொன்னதும் வீறு கொண்ட வேங்கை போல எழுந்து விட்டாள்.

ஆனால் உண்மையில் வேறொரு விஷயத்தை நினைத்து உள்ளுக்குள் அவளுக்கு கலக்கமாயும் இருந்தது. தந்தை பலவிதமான திறமைகளை, அனுபவங்களை கொண் டவர். அவரே, 'இனி வேறு வழியில்லை. நாம் வாழ முடி யாது..' என்ற முடிவுக்கு வந்து விட்டதை உணரும்போது பயம் கிலியாய் அவள் உடம்பில் பரவியது.

உண்மையிலே.. வாழ வேறு வழி இல்லையா? வாழ்க்கையின் எல்லாக் கதவுகளும் அவர்கள் இருவருக் கும் மூடிக் கொண்டதா?

ஒரு கணம் நினைத்துப் பார்த்த அவளுக்கு வேதனை கூரான கத்தியாய் மனதைக் கிழித்தது.

பணம். வாழ்க்கையில் எவ்வளவு முக்கியமான விஷயம்.. அதைச் சம்பாதிக்க... முடியாதா? இல்லை அவர்களுக்கு வழிகள்தான் தெரியவில்லையா?



தந்தையாவது.. சரி... வயோதிகப் பருவம். அவரால் முடிந்த அளவு முயற்சி பண்ணுகிறார்.

ஆனால் அவள்..?

ஒழுங்காய் படித்திருக்கலாமே? தந்தையிடம் பிடி வாதம் பிடித்து மேலே படித்திருந்தால் இன்று உருப்படி யாய் ஒரு வேலையைத் தேடியிருக்கலாம். தந்தையை உட்கார வைத்து காப்பாற்றலாம்.

ஒரு கணம் தான் படிக்காமல் படிப்பை அப்படி பாதியிலே நிறுத்தியதை நினைத்து வருந்தவும் செய்தாள்.

ஓரளவு படித்திருந்தாலாவது ஏதாவது உருப்படியான வேலைக்குப் போய் சம்பாதித்திருக்கலாம். அவரை உட்கார வைத்து சாப்பாடு போட்டு காப்பாற்றி இருக்கலாம்.

ஆனால் இப்போது..?

வயோதிகத்தில் முதுமையின் பிடிகளில் தந்தை.

அந்தச் சூழலினுள் அவருக்கு உழைக்க வேண்டிய கட்டாயம்!

யோசித்த மதுரா பயந்தபடியே நிமிர்ந்து தந்தையைப் பார்த்தாள்.

அவர் சோர்ந்து போய் அப்படியே கைகளில் முகத்தை தொங்கப் போட்டபடி பரிதாபமாய்த் தெரிந்தார்.

அவரது ஒளியிழந்த கண்களைக் கண்ட அவள் காலை யில் இருந்து அவர் எதுவும் சாப்பிடவில்லை என்பதைப் புரிந்து கொண்டாள்.

முதலில் ஏதாவது வாங்கிக் கொண்டு வருவோம் என எழுந்தவள் தனது சின்னப் புளி டப்பா ஒன்றைத் திறந்து அதில் பத்திரப்படுத்தியிருந்த இருபது ரூபாய் பணத்தை எடுத்துக் கொண்டு வெளியே நடந்தாள்.

பக்கத்து நாயர் டீக்கடையில் இரண்டு பன்னும் டீயும் வாங்கிக் கொண்டு நுழைந்தபோது அப்பா நிமிர்ந்து உட்கார்ந்திருப்பது தெரிந்தது.

''முதலில் இதைச் சாப்பிடுங்கள்...'' என்று நீட்டினாள்.

சதாசிவம் ஒரு பன்னை வாங்கி மெல்ல பிட்டு பிட்டு தின்னபடி அவளையும் சாப்பிடச் சொன்னார்.

அவளுக்கும் பயங்கர பசிதான். இருந்தாலும் தந்தையின் சோர்வான நிலைமையை உணர்ந்து அவரையே வற்புறுத்தி சாப்பிட வைத்தாள்.

சதாசிவம் சாப்பிட்டு டீயையும் குடித்த பிறகுதான் அவரால் சகஜ நிலைக்கு வர முடிந்தது.

மூட்டைப்பூச்சி பாட்டில் வாங்கி வந்த தன் முட்டாள் தனத்தை நினைத்தபடி மதுராவின் தலையை பரிவாய் வருடியவர் மறுபடியும் மருகினார்.

''என்னை.. மன்னித்து விடு கண்மணி நான் கோழைத் தனமாய் யோசித்து விட்டேன். நீ வாழ வேண்டிய பெண். உனக்கு இன்னும் வாழ்க்கை இருக்கிறது...''

மதுராவும் அவரது கைகளைப் பிடித்து அழுத்தி அவர் சொல்வதை ஆமோதித்தாள்.

''நீ.. சாப்பிட்டாயா அம்மா?'' என்றார் சதாசிவம் ஞாபகம் வந்தவராய்.

''நேற்றைய பழைய சாதம் இருந்தது. சாப்பிட்டேன். நீங்கள் வருந்தாதீர்கள்..!'' துணிச்சலான பொய் சட்டென வார்த்தைகளாய் வெளிவந்தது.

பசியை அடக்க ஐந்தாறு டம்ளர் நீரை மொண்டுக் குடித்தது, கஷ்டப்பட்டு அந்தக் கிள்ளல் உணர்வை அடக்கியது அவளுக்குத்தான் தெரியும்!



சதாசிவத்தின் நடுங்கும் கை விரல்கள் மறுபடியும் அவளது நீளக் கூந்தலை வாஞ்சையாய் வருடியது. தந்தையின் பரிவில் அப்படியே கண்களை மூடி ஒரு கணம் மெய் மறந்தவள் சட்டென முன்புற கதவுப் பக்கம் அரவம் கேட்டு நிமிர்ந்தாள்.

முன்னே.. வாசல் கதவுப் பக்கம் ஒருவன் நின்று கொண்டிருந்தான்.

முப்பது வயது மதிக்கத்தக்க திடகாத்திரமான உருவத்துடன் உள்ளே அவன் நுழையவும் செய்ய.. இருவரும் பயத்தோடு திடுக்கிடத்தான் செய்தார்கள்.

''மூட்டைப் பூச்சு மருந்து வாங்கியாயிற்று. இன்னும் தற்கொலை செய்யவில்லை?''

அவனது கேள்வி அவர்களை அதிர வைத்தது.

## 3

திடும்மென ஒருவன் வாட்ட சாட்டமாய் வீட்டின் முன்புறம் நுழைந்து சொன்னதைக் கேட்டு இருவரும் அதிரத்தான் செய்தார்கள்.

அதிலும் அவன் மிகத் தெளிவாய் 'மூட்டைப் பூச்சி மருந்து...' எனக் குறிப்பிட்டது தங்களது போதாத சூழ்நிலையை அவன் தெரிந்திருக்கிறான் என்பதை உணர்த்திற்று.

சதாசிவம்தான் சுதாரித்து கண்களை இடுக்கி குரலை உயர்த்தினார்.

''தம்பி நீங்க யாரு?''

அவர் பயம் பொங்க கேட்டதற்கு, ''நானா..? சொல்கிறேன்...'' என்றபடி உள்ளே உரிமையாய் வந்து அந்த கிடுகிடு நாற்காலியில் பதட்டமில்லாமல் அமர்ந்தான்.

இருவரையும் கண்களால் ஆழமான பார்வை பார்த்தான்.

''நான்.. அந்தப் பெட்டிக்கடையில்.. இப்படி பூச்சி மருந்தை நீங்கள் வாங்கும்போதே கவனித்தேன். உங்களது சோர்ந்த முகமும் தளர்ந்த நடையும் எதையோ விபரீதமாய் உணர்த்திற்று. அதனாலேயே சந்தேகத்துடன் பின் தொடர்ந்தேன். நான் நினைத்தது சரியாய் போயிற்று...''

அதற்கு மேல் சதாசிவத்தாலும் மதுராவாலும் எதுவும் பேசமுடியவில்லை. வாய் திறக்காதவர்களாய் தலையைத் தொங்கப் போட்டபடி அப்படியே நின்று கொண்டிருந்தார்கள்.

அவன் முகத்தை திருப்பி சுற்றும் முற்றும் பார்த்தான். வீட்டை அளவெடுத்தான்.

பரணில்.. பழைய தகர டிரங்குப் பெட்டி, சட்டங்கள் தேய்ந்து மங்கலாய் தொங்கும் இரண்டு மூன்று புகைப் படங்கள், மூலையில் அழுக்குக் கூடை... அதில் பழைய துணிமணிகள், சுவரோரமாய் உமி அடுப்பு, அதன் பக்கமாய் கவிழ்த்து வைக்கப்பட்டிருக்கும் ஒரு சில பாத்திரங்கள், ஒரு மரக் கட்டில், அந்தக் கிடுகிடு நாற்காலி...

அவனுக்கு எல்லாம் புரிந்து விட்டது.

பணமில்லை. ஏழ்மை.. வறுமை. தற்கொலை பண்ணும் அளவுக்கு விரக்தி.



''ஆமாம்.. என்னாயிற்று? ஆரம்பித்தாயிற்றா... இல்லை நல்ல நேரத்திற்காக காத்துக் கொண்டிருக்கிறீர்களா?''

அவன் கேலிப் பார்வையுடன் கேட்டாலும் சதாசிவம் கரகரப்புக் குரலில் பதில் சொன்னார்.

''இல்லை. நாங்கள் முடிவை மாற்றி விட்டோம். வாழ தீர்மானித்திருக்கிறோம்...''

''அப்படியா.. நிஜமாகவா..?''

அவன் நம்ப முடியாதவனாய் மதுரா மேல் பார்வையை பதிக்க மதுரா ஆமோதிப்பவளாய் தலையை சிறிது ஆட்டினாள்.

அவன் விடவில்லை.

''நல்ல முடிவுதான். ஆனால் எப்படி வாழப் போகிறீர்கள்?''

அவனது கேள்விக்கு அவர்களிடம் பதில் இல்லாமல் போக அடுத்த கேள்வியை வீசினான்.

''இதுவரை வாழக் கிடைக்காத.. வழி.. இப்போது என்ன திடும்மென கண்ணுக்குள் தோன்றி விட்டதா?''

பேந்தப் பேந்த இருவரும் விழிக்கத்தான் செய்தார்கள். அவன் இருவரையும் ஆழமான பார்வை பார்த்து விட்டு, ''வழியை... நான் சொல்லட்டுமா?'' என்றான்.

அவர்களுக்கு இப்போது எல்லாம் புரிய ஆரம்பித்தது. பெட்டிக் கடையில் மருந்து வாங்குவதைப் பார்த்து பின் தொடர்ந்தவன் மனதில் ஏதோ திட்டத்துடன்தான் வந்திருக்கிறான் என்பது உரைத்தது.

அப்படி என்ன வழியை இவன் சொல்லிவிடப் போகிறான்? என்பது போல் இருவரும் அவனை விழித்துப் பார்க்க நிதானமாய் பேச ஆரம்பித்தான் அவன்.

''என் பெயர் மோகன். சொந்தமாய் கன்ஸ்ட்ரக்ஷன் நிறுவனம் ஒன்று நடத்தி வருகிறேன். கார், பங்களா.. என சொகுசாய் வாழ்க்கை நடத்தும் அளவுக்கு பணக்காரன். எனது வயதான தாயார் வீட்டில் நோய்வாய்ப்பட்டு இருக்கிறார்கள். அவர்களை கவனிக்க, மருந்து மாத்திரைகளை கொடுத்து உதவ ஒரு சரியான பணியாள் தேவை. மாதம் இரண்டாயிரம் ரூபாய் சம்பளம்... நான் சொல்லும் வழி இதுதான். புரிகிறதா?''

நேரிடையாய் கேள்வியைக் கேட்டபடி பார்வையை மதுரா மீது வந்து நிறுத்தினான் அவன்.

அவன் கேட்டது மதுராவை மறுபடியும் திகைப்படையச் செய்தது. முன்பின் தெரியாமல் திடீரென வீட்டிற்குள் நுழைந்து தங்கள் சூழ்நிலையை உணர்ந்து கேட்கிறான். யாரிவன்? எப்படி இவனை நம்புவது?

அதே சிந்தனை சதாசிவத்திற்கும் ஓடியிருக்க வேண்டும்.

''தம்பி.. நீங்கள்.. யார் என்றே தெரியாது.. திடீரென்று வேலை தருகிறேன் என்கிறீர்கள். எனக்கு ஒன்றும் புரியவில்லை..!'' என்றார்.

அவரது கேள்விக்கு பலமாய் தலையசைத்தான் அவன்.

''அதான் சொன்னேனே.. என் பெயர் மோகன். நகரின் பிரபலமாய் விளங்கும் மோகன் கன்ஸ்ட்ரக்ஸின் உரிமையாளர். இன்னும் சொல்லப் போனால்.. லயன்ஸ் கிளப் உறுப்பினரும் கூட. என்னை நீங்கள் தாராளமாய் நம்பலாம்...''

மதுரா இன்னமும் பயப் பார்வையை விலக்காமல் இருப்பது போல அவனுக்குத் தெரியவே பைக்குள் கை விட்டு விசிட்டிங் கார்டு ஒன்றை எடுத்தபடி எழுந்து கொண்டான்.



''இதோ.. இதில் எனது அலுவலகம் மட்டும் வீட்டு முகவரி இருக்கிறது. உங்களுக்கு விருப்பமிருந்தால் நேரில் வந்து என் தாயாருடன் பேசிப் பாருங்கள். அப்புறம்..'' என்றபடி ஒரு நிமிடம் நிறுத்தியவன், ''நான் இங்கு வந்ததே... விபரீதமாய் நீங்கள் எடுக்க இருந்த முடிவை தடுக்கத்தான். நல்லவேளை, நீங்களே மனம் மாறி விட்டீர்கள்.. அதனால் இனி பயமில்லை. நீங்கள் தற்கொலை செய்ய மாட்டீர்கள். அப்படித்தானே?''

திரும்பவும் உறுதிப்படுத்துவது போல் அவன் கேட்க... இருவரும் படபடப்பாய் தலையை அசைத்தனர்.

''அப்படியானால்.. சரி.. நான் கிளம்புகிறேன். உங்களுக்கு விருப்பமிருந்தால் இந்த முகவரியில் தொடர்பு கொள்ளுங்கள். நான் வருகிறேன்..'' பதிலுக்கு காத்திராமல் சொல்லிவிட்டு விறுவிறுவென நடக்க ஆரம்பித்தான் அவன்.

அவன் போவதையே வெறித்தபடி நம்ப முடியாத ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருந்தவர்கள் மெல்லத் திரும்பி ஒருவரையொருவர் பார்த்தனர்.

கொஞ்ச நேரம் அமைதியாய்க் கழிந்தது.

''என்னம்மா யோசிக்கிறாய்?'' என்றார் அப்பா.

''யோசித்து விட்டேன்...'' என்றாள் மதுரா உறுதியான குரலில்.

# 4

மதுரா மறுநாளே தன் தந்தையுடன் மோகனின் வீடு நோக்கிக் கிளம்பி விட்டாள்.

அவன் கொடுத்த விசிட்டிங் கார்டு மூலம் அட்ரஸ்ஸைத் தேடிக் கண்டு பிடித்தாள். லயன்ஸ் டவுண் எனப்படும் பணக்காரர்கள் வசிக்கும் பகுதியில்தான் அவனது பங்களா இருந்தது.

பங்களாவின் முன்புறம் விஸ்தாரமாய் புல் தரைகள் ஆக்கிரமித்திருக்க... அழகான வடிவமைப்புடன் பிரமிக்கும்படி இருந்தது.

பெரிய கேட்டைத் திறந்து உள்ளே நுழையும்போதே கூர்க்கா ஒருவன் ஓடி வந்தான். மதுரா விசிட்டிங் கார்டை காண்பித்து விஷயத்தைச் சொன்னதும் பவ்யம் காட்டி கூட்டிப் போனவன் முன்புற வரவேற்பறையில் உட்காரச் சொன்னான்.

இருவரும் விலையுயர்ந்த அந்த பொதுமும் நுரை இருக்கையில் தயங்கியபடியே அமர்ந்தார்கள்.

சதாசிவம் சுற்றும் முற்றும் நோட்டமிட்டவர், ''இது பெரிய இடம்தான். பெரிய பணக்காரராய் தெரிகிறது. ஆனாலும் அவருக்கு நல்ல குணம்தான். என்னைப் பார்த்து.. என் பின்னாலேயே அல்லவா உதவி பண்ண வந்திருக்கிறார். நல்ல மனசு அம்மா அவருக்கு...'' என்றார்.

தந்தை சொல்வது நியாயமாகவும் மதுராவுக்குத் தோன்றியது. இவ்வளவு பணம் வைத்திருப்பவன் தந்தை பெட்டிக்கடையில் மூட்டைப் பூச்சி மருந்து வாங்குவதை கவனித்து கவலைப்பட்டிருக்கிறானே! விபரீதமாய் எதுவும் முடிவு எடுத்துவிடக் கூடாது என பின் தொடர்ந்தும் வந்து பார்த்திருக்கிறானே! இப்படியொரு இரக்க குணம் இந்தக் கலியுகத்தில் யாருக்கு வரும்? என்று நினைத்தாள் அவள்.



அவர்கள் இப்படி யோசித்துக் கொண்டிருக்கும்போதே மாடிப்படி வழியாக இறங்கி வந்து கொண்டிருந்தான் மோகன்.

அதே.. உற்சாகம்.. அதே வசீகரச் சிரிப்பு. விறுவிறுவென அவர்களைக் கண்டதும் நடையில் வேகம் காட்டியவன், ''வந்து விட்டீர்களா? உங்களை நான் எதிர்பார்த்தேன்...'' என்றபடி புன்னகை ததும்ப எதிரில் வந்து நின்றான்.

சதாசிவமும் மதுராவும் பவ்யமாய் கைகூப்பி வணங்கினார்கள்.

பதிலுக்கு நமஸ்கரித்து உட்கார்ந்தவன் அவர்களையும் உட்காரச் சொன்னான்.

அதற்குள் பணியாள் சூடான தேநீர் கொண்டு வர மதுரா மறுத்தும் பிடிவாதமாய் குடிக்கச் செய்தான்.

அதன்பின் மோகன் தன் தொழில் பற்றி, தொழிலில்தான் செய்து வரும் புதுமைகள் விரிவாக்கம் பற்றியெல்லாம் ஒரு அரை மணி நேரம் லெக்சர் அடித்தான் என்றுதான் சொல்ல வேண்டும்.

ஆனால் வெளியுலகம் தெரியாமல் குண்டு சட்டியில் குதிரை ஓட்டியது போல இருக்கும் மதுராவுக்கும் சதாசிவத்துக்கும் அவனது தொழில் பற்றிய பேச்சு புரியாததாய், விளங்காத பிரமிப்பாகவே இருந்தது.

இருந்தும் அவன் சொல்வதற்கெல்லாம் அக்கறை காட்டி தலையாட்டிக் கொண்டிருந்தனர். ஒரு வழியாய் தன் தொழில் புராணத்தை முடித்த மோகன் அவர்களை, ''வாருங்கள் என் தாயாரை அறிமுகப்படுத்துகிறேன்...'' என கீழ்ப் போர்ஷனில் இருந்த உள்ளறை ஒன்றிற்கு அழைத்துச் சென்றான்.

அங்கு கட்டிலில் இடுங்கிய கண்களுடன் அறுபது வயது மதிக்கத்தக்க பெண்மணி படுத்திருந்தாள். அதுதான மோகனின் தாயார் போலும். அவர்கள் வருவதைப் பார்த்ததும் மெல்ல கண் விழித்தாள்.

மோகன் தாயாருக்கு அவர்களை அறிமுகப்படுத் தினான். ''என் தாயார் ராஜாமணி அம்மாள். சர்க்கரை நோயாலும் அதிக ரத்தக் கொதிப்பு தொல்லையாலும் பெரிதும் பாதிக்கப்பட்டு படுத்த படுக்கையாகி விட் டார்கள். இவர்களை காலை ஒன்பது மணியிலிருந்து மாலை ஆறு மணி வரை உடன் இருந்து பார்க்க வேண் டும். வேளா வேளைக்கு உரிய மாத்திரை மருந்துகளை கொடுத்து நன்கு கவனித்துக் கொள்ள வேண்டும். மாதம் இரண்டாயிரம் ரூபாய் சம்பளமாய் கொடுத்து விடுகிறேன். உங்களுக்குச் சம்மதம்தானே?''

மோகன் தெளிவாய் வேலை பற்றி விளக்கிச் சொல்லி கேட்டான். மதுராவுக்கு அந்தச் சூழ்நிலை, வயதான தாயா ருக்கு உடன் இருந்து உதவுவது எல்லாமே பிடித்திருந் தது. இருந்தாலும் நிமிர்ந்து தந்தையின் முகக் குறிப்பைப் பார்த்தாள்.

சதாசிவத்திற்கும் பூரண திருப்திதான். ஒரு வயதான பெண்மணிக்கு சேவை செய்தது போலவும் ஆயிற்று. இரண்டாயிரம் ரூபாய் சம்பளத்தால் அபாயகரமான நிலை யில் இருக்கும் அவர்களது வாழ்க்கை நிம்மதியான கரை யொன்றை சேர்ந்தது போலவும் ஆயிற்று.

இருவரும் சம்மதிக்க அன்றைய தினமே மதுராவும் வேலையில் சேர்ந்து கொண்டாள். சதாசிவமும் மாலை ஆறு மணி வாக்கில் வந்து கூட்டிச் செல்வதாய்க் கூறி விடைபெற்றுச் சென்றார்.



மதுரா உடனடியாய் பணிவிடைகளிலும் இறங்கினாள். ராஜாமணி அம்மாளை பல் துலக்கி குளிக்க உதவி செய்தாள். கைத்தாங்கலாய் பிடித்துக் கொண்டு அவர்கள் விரும்பும் எல்லா வேலைகளையும் செய்ய வைத்தாள். மருந்து, மாத்திரைகளின் குறிப்புகளை படித்து உரிய நேரத்தில் எடுத்துக் கொடுத்து உட்கொள்ளச் செய்தாள்.

அன்றைய தினம் ராஜாமணி அம்மாளிடம் பேசுவ திலும் வீட்டைச் சுற்றிப் பார்ப்பதிலும் கழிந்து விட்டது.

மாலை சரியாய் ஆறு மணிக்கு சதாசிவம் அழைத்துப் போக வந்து விட வேலை முடிந்து கிளம்பினாள். ''வேலை சுலபம்தானே..? ஒன்றும் பிரச்சினை இல்லையே அம்மா..?'' என சதாசிவம் அக்கறையாய் கேட்டார்.

''ஒன்றும் பிரச்சினையில்லை. பிடித்திருக்கிறது...'' என்றாள் மதுரா.

அவள் நினைத்தது போலவே அடுத்து வந்த இரண்டு மூன்று நாட்களும் எவ்வித சங்கடமும் இல்லாமல் வேலை இலகுவாகவே இருந்தது. அவள் குடும்ப நிலையை உணர்ந்தது போல் மோகனும் முதல் மாத சம்பளப் பணம் இரண்டாயிரம் ரூபாயை வேலைக்கு வந்த இரண்டாம் நாளே அவள் கையில் கொடுத்து விட்டான்.

அதைக் கொண்டு போய் அப்படியே அவள் தந்தையின் கைகளில் கொடுத்தபோது சதாசிவத்திற்கு கண் எல்லாம் கலங்கி விட்டது. நாத்தழுதழுத்தவராய், ''நான் சம்பாதித்து உன்னைக் காப்பாற்ற வேண்டிய வேளையில் நீ சம்பாதித்து என்னைக் காப்பாற்றுகிறாயே அம்மா..'' என தேம்பினார்.

அவரை சமாதானப்படுத்தினாள் மதுரா. இரண்டாயிரம் ரூபாய் பேருதவியாய், குடும்ப பொருளாதார நிலைமையை

சரிப்படுத்தும் பெரும் தொகையாய் அவர்களுக்கு விளங்கியது.

தினம் மதுராவை காலையில் வேலைக்கு அழைத்துச் சென்று விடுவதும் மாலை ஆறு மணிக்கு டாண் என்று சென்று கூட்டி வருவதும் சதாசிவத்தின் வேலையாயிற்று.

மதுராவுக்கு கூட இது சங்கடமாய்த் தெரிந்தது.

''என்னப்பா... இது.. சிறு பிள்ளை போல்.. நீங்கள் என்னை கூட்டிக் கொண்டு..? நானே வேலைக்குப் போய் திரும்ப வந்து விடுவேன்...'' என சிணுங்கத்தான் செய்தாள்.

''இல்லை.. கண்மணி. உனக்கு வெளி உலகம் தெரியாது. உன்னை அப்படி வளர்த்து விட்டேன். மேலும் உனது அபாரமான அழகு. உனக்கு ஆபத்தும் கூட. பெரிய மனிதனாய் நான் கூட வந்தால் உனக்கு எப்பவும் எவ்வித தொல்லைகளும் வராது...'' எனக் கூறி வாயையும் அடைத்து விடுவார்.

தந்தை சொல்வது மதுராவுக்கு புரிந்தது. ஆனாலும் தனக்காக குடையை இடுக்கிக் கொண்டு, நொடிக்கொரு தரம் மூக்குக் கண்ணாடியை சரி பண்ணிக் கொண்டு அந்த தளர்ந்த வயதிலும் விரைவான நடை போடும் அவரைப் பார்க்க பாவமாகத்தான் இருக்கும்.

தனக்காக தந்தை இப்படியெல்லாம் சிரமப்பட வேண்டியிருக்கிறதே.. என வருந்துவாள். ஆனாலும் பெட்டிக் கடை ஓரமாய் அவள் தந்தையுடன் நடக்கும்போதே சில தெருவோர 'விடலை'கள், 'இதப் பாருடா. ஓட்டைக் குடையும்.. பட்டுக் குஞ்சமும்' என அவள் காதுபடவே கிண்டல் செய்து வெடிச் சிரிப்பு சிரிப்பதை கவனித்திருக்கிறாள்.



தான் கூந்தலை இன்னமும் குஞ்சம் வைத்துப் பின்னுவதை அவர்கள் கேலி செய்தாலும் அது என்னவோ.. பழகிய ஒன்றை பழக்கமாகி விட்ட ஒன்றை அவளால் சில சமயங்களில் மாற்றிக் கொள்ள முடிவதில்லை.

உடை விஷயத்திலும் அவளது சுபாவம் அப்படித்தான். இருப்பது இரண்டு மூன்று கோட்டா சேலைகளே ஆனாலும்... அவையும் பெரும்பாலும் இரண்டு கலர்களில் தான். அவளுக்குப் பிடித்தமான பச்சை மற்றும் ஊதா நிறங்கள்தான். அதையே தான் மாற்றி மாற்றி கட்டுவாள்.

தந்தையும் அவளது பிடித்தம் தெரிந்தே அதே கலர்ச் சேலையை எடுத்து அவளது பிறந்த நாளுக்கு பரிசளிப்பார்.

ஆயிற்று. அன்றும் மதுரா வழக்கம் போல் பச்சை நிற கோட்டா சேலையை உடுத்திக் கொண்டு வேலைக்கும் வந்தாயிற்று. ராஜாமணி அம்மாளுக்குத் தேவையான பணிவிடைகளை மளமளவெனச் செய்ய ஆரம்பித்தாள்.

அவளுக்கு ஒரு விஷயம் ரொம்பவும் உறுத்திற்று. மோகன் அவளிடம் அதீத மரியாதை கொடுத்து பழகும் விதமும்.. தனக்காக ரொம்பவும் பரிவு காட்டுவதையும் கண்டு வியக்கத்தான் செய்தாள்.

பெரிய பணக்காரன், பெரிய தொழிலதிபர் எனப்படுபவன் அடிக்கடி அவளை மேடம், மதுரா மேடம் என்றெல்லாம் கூறி அழைத்துப் பேசும்போது திகைக்கத்தான் செய்தாள்.

ஒருவேளை அவன் தன்னை கேலி செய்யும் பாணியில் சொல்கிறானோ எனக் கூர்ந்து கவனித்தால்... அதுவும் இல்லை.. நிஜமாகவே அப்படி மரியாதை கொடுத்து சொல்லிக் கொண்டிருக்கிறான்.

தினம் இடையிடையே வீட்டிற்கு வரும்போது ஏதாவது பேச்சு கொடுத்துக் கொண்டிருப்பவன் அவள் வேலை முடிந்து கிளம்பும்போது காரில் கொண்டு அவளை ட்ராப் செய்து விட துடிக்கத்தான் செய்வான்.

மதுரா தான் பிடிவாதமாய் மறுத்து தனக்காக வந்து காத் திருக்கும் தந்தையைக் காட்டி அவருடனே கிளம்புவாள்.

அப்படி அவள் மறுத்துச் சொன்னதையும் அப்படியே முகம் கோணாமல் ஏற்றுக் கொண்டு, ''அது.. சரிதான்.. சரிதான்..'' என தலையை பலமாய் ஆட்டுவான்.

தந்தை சதாசிவம்தான் அடிக்கடி மதுராவிடம் ''அம்மா வேலையில் ஒன்றும் பிரச்சினை இல்லையே..? அந்தத் தம்பி.. எப்படி.. நல்ல குணம் தானே?'' எனக் கேட்டு வந்தார்.

''ஒன்றும் பிரச்சினையில்லை. அவர் மிக நல்லவ ராகவே தெரிகிறாரப்பா...'' என்று மனங்குளிர சொல்லத் தான் செய்தாள்.

ஆனால் அந்த மிக நல்லவர் அடுத்த வாரம் மதுரா விடம் கேட்ட கேள்வியொன்று அவளை பலத்த அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

## 5

மதுரா வழக்கம்போல் தான் தினம் சென்று வேலை பார்த்து வர.. அன்றொரு நாள் மாலை அவள் வேலை முடிந்து கிளம்பும் சமயமாய் மோகன் பால்கனிப் பக்கம் நின்று கொண்டிருந்தவன் அவளை வருமாறு சைகை செய்தான்.



வழக்கமாய் பால்கனிப் பக்கம் சிகரெட்டை புகைத்த படியோ.. ஏதாவது புத்தகத்தை புரட்டிக் கொண்டோ.. வாக்கிங் போல் தனிமையில் நடந்து கொண்டிருப்பது மோகனின் வழக்கம்.

பெரும் தொழிலில் ஈடுபட்டு உழைக்கிறவன் தனது டென்ஷனை ரிலாக்ஸ் செய்ய இப்படிச் செய்கிறான் போலும் என அவள் எண்ணிக் கொள்வாள்.

அன்று தன்னைக் கூப்பிட்டதும் எதற்குக் கூப்பிடு கிறான் என்று புரியாமல் தான் போனாள்.

மோகன் என்றுமில்லாததாய் அவளைப் பார்த்து தயங்குவதும்.. புதிராய் ஒருவித வெட்கத்தைக் காட்டு வதையும் பார்த்து அதிசயிக்கத்தான் செய்தாள்.

''என்ன விஷயம் சார்...?'' என்றாள்.

மோகன் ஏதோ மணப் பெண்ணைப் பார்ப்பது போல நிமிர்ந்து வெட்கப்பட்டு பார்த்தான்.

''அதாவது... மேடம்...'' என்று அவன் ஆரம்பித்ததும் பதறத்தான் செய்தாள் மதுரா.

''ஐயோ.. மேடம் என்றெல்லாம் சொல்லாதீர்கள். நான் உங்களிடம் வேலை பார்ப்பவள். என்னை மதுரா என்றே அழையுங்கள்...''

மோகன் பவ்யமாய் தலையாட்டினான்.

''சரி.. மதுரா என்றே கூப்பிடுகிறேன். சரிதானே?'' என்றவன் நேராய் நிமிர்ந்து முகம் உயர்த்தி அவளைப் பார்த்தான்.

''மதுரா உங்களிடம் ஒரு விஷயம் பேச வேண்டும். பேசலாமா..?'' என்றான்.

''ம்ம்...'' என்றாள் மதுரா.

''திடீரென கேட்கிறேன் என்று நினைக்கக் கூடாது. ரொம்பவும் யோசித்து தான் கேட்கிறேன். அது தவறா சரியா என்று கூட எனக்குப் புரியவில்லை...''

அவன் பீடிகை போட்டு பேசுவது அவன் எதையோ சொல்ல வருகிறான் என மதுராவைப் பயமுறுத்தத் தான் செய்தது.

''அதை எப்படி ஆரம்பிப்பது என்று தெரியவில்லை. இருந்தும் நான் கேட்டுத்தான் ஆக வேண்டும். கேட்டு விடட்டுமா?'' என்றான் மறுபடியும்.

அப்படி என்ன கேட்டு விடப் போகிறான்? என மதுரா கண்கள் விரியப் பார்த்தவள், ''ம்ம்.. கேளுங்கள்... ஸார்..'' என்றாள்.

''மதுரா பேசாமல் என்னை மணந்து கொள்கிறாயா? எனது மனைவி ஆகி விடுகிறாயா?'' என்றான் மோகன் அவளை முற்றிலும் அதிர வைத்தவாறு.

மதுரா அவனிடமிருந்து இப்படியொரு கேள்வியை எதிர்பார்க்காததால் அப்படியே வாயடைத்துப் போனாள். ஏதோ.. என்னுடன் ஹோட்டலுக்கு வருகிறாயா.. ஒரு கப் காபி சாப்பிடுகிறாயா? என்பது போல் அல்லவா எவ்வளவு பெரிய விஷயத்தை ஒரு பெண்ணிடம் இவ்வளவு அசால்ட்டாய் கேட்கிறான் என எண்ணினாள்.

அவளது நிலை.. பெரும் தவிப்பாய் இருந்தது. கேட்பது முதலாளி!

முகத்திலடித்தது போல் பதில் சொல்லி விட முடியாது. பக்குவமாய்த்தான் சொல்ல வேண்டும்?



முதலில் எப்படிச் சொல்வது?

கைகளைப் பிசைந்தபடி மேலும் கீழும் அவனையே திகைப்பாய் பார்க்க அவன் மெல்ல கைகளைப் பிசைந்த படி பக்கத்தில் வந்தான்.

அவனது கணைப்பு சப்தம் அவளை மறுபடியும் நினைவுக்கு கொண்டு வந்தது.

''மதுரா எனக்கு சுற்றி வளைத்துப் பேசத் தெரியாது. அதனால் தான் திடீரென்று என் மனதில் தோன்றியதை திடீரென்றே உன்னிடம் கேட்கிறேன்...''

''திடீரென்றா...?''

''ஆம்... மதுரா நீ.. என் தாயாருக்கு செய்யும் பணிவிடைகளை எல்லாம் நானும் கவனித்துதான் வருகிறேன். ஏதோ வேலைக்காக செய்கிறது போல் கூலிக்காக மாரடிக்கிறது போல் இல்லாமல் உறுத்தாக செய்கிறாய். உன் சொந்தத் தாயாரை கவனிப்பது போல் கவனித்துக் கொள்கிறாய். இதெல்லாம் எனக்கு ரொம்பவும் பிடித்து உன் மீது ஈடுபாடு கொள்ள வைத்து விட்டது. அதனாலே.. உன்னையே.. என் துணையாக்கிக் கொண்டால், நீயே.. எனது மனைவியாக வந்து விட்டால் நன்றாய் இருக்கும் அல்லவா? என்ன சொல்கிறாய்.. நான் நினைப்பது. கேட்பது சரிதானே?''

''நா.. நான்.. யோசிக்க வேண்டும்.. ஸார்...''

அவளையறியாமல் சட்டென வார்த்தைகள் வெளி வந்து விழுந்தது.

''தாராளமாய் யோசி.. மதுரா உன்னுடைய தந்தையுடன் இது பற்றி கலந்து பேசு...'' என்றவன்,

''வேண்டுமானால் நானே உன் தந்தையிடம் இதுபற்றி விளக்கமாய் கூறட்டுமா?'' என கேட்கவும் மதுரா அவசர மாய் தடுத்தாள்.

''வே.. வேண்டாம்.. வேண்டாம்.. ஸார்.. நானே தந்தை யிடம் பேசிவிட்டு ஒரு வாரத்தில் உங்களுக்கு பதில் சொல்கிறேன்...'' எனவும் பெரிதாய் தலையசைத்தான். எப்போதாவதாய் அபூர்வமாய் பற்களைக் காட்டிச் சிரிக்கும் சிரிப்பை அவளை நோக்கி உதிர விட்டான்.

தனது மைவிழிகளால் அவனது முகத்தையே ஆழமாய் உற்றுப் பார்த்தவாறு அங்கிருந்து அகன்றாள் மதுரா.

பொதுவாக... பார்வையிலே.. ஒருவரை ஆள் எப்படி? என கணித்து விடக்கூடிய சுபாவம் அவளுக்கு. ஆனால் இந்த மோகன் அவளுக்கு வினோதமாய் புரிபடாத புதி ராகவே தெரிந்தான். ஒரு சமயம் நிறைய பவ்யம் காட்டி மரியாதை கொடுத்து பணிவானவன் போல் தெரிகிறான். அதையே உற்று கவனித்தால்.. அது நிஜமான அவனது சுபாவமா இல்லை வேண்டுமென்று அப்படியொரு நடிப்பு நடிக்கிறானா என்ற சந்தேகத்தையும் கிளப்பியது.

அப்படியே.. யோசித்துப் பார்த்தாலும் இவ்வளவு பணக்காரனாய், தனக்கு முதலாளியாய் இருக்கிறவன்.. அப்படி தன்னிடம் நடிப்பதற்கு என்ன அவசியம் இருக்கக் கூடும்..? என்ற கேள்வியே எழும்பியது.

பலமுறை சிந்தித்துப் பார்த்தாலும் மற்ற ஆண்கள் போல் அவனது சுபாவம் இதுதான்... இப்படித்தான் அவன் நடந்து கொள்வான் என மதுராவால் கணிக்க முடியாமலே இருந்தது.

அவன்தான் இப்படி என்றால் தாயார் ராஜாமணி அம் மாளோ... பேசவே காசு கேட்பார்கள் போலும். எப்போதும் அளவான பேச்சுத்தான். கேட்கும் கேள்விகளுக்கு மட்டு மான பதில்தான். மற்ற நேரமெல்லாம் ஒரு உதடு பிரியாத அமர்த்தலான புன்னகைதான்.



மதுரா விடாப்பிடியாய் வலிய பேச்சுக் கொடுத்தாலும் அளவாய் செதுக்கி வைத்தாற்போல் ஓரிரு வார்த்தைகளே அவளிடமிருந்து வெளிப்படும்.

சில சமயம் எதுவும் பேசாது சுவரையே வெறித்துக் கொண்டு இருப்பது போல் விட்டேற்றியான பார்வையை ராஜாமணி அம்மாள் பார்த்துக் கொண்டிருப்பாள்.

மதுராவும் சரிதான் இவர்களது குடும்பமே அதிகம் பேசாத சுபாவம்தான் என அடிக்கடி நினைத்து முடிவிற் கும் வந்திருக்கிறாள். இப்போது அதே போல் இவனும் திடுதிப்பென்று ஒன்றைக் கேட்கிறான். யோசிக்க வேண் டும். யோசித்துதான் பதில் சொல்ல வேண்டும்!

மனதிற்குள் திடமாய் ஒரு முடிவிற்கு வந்தாள் மதுரா.

## 6

மதுரா, ''அவகாசம் கொடுங்கள். யோசித்துச் சொல் கிறேன்...'' என்றபடி மோகனிடம் சொல்லிவிட்டு கிளம்பி வந்து விட்டாள்.

மோகனும் கைகளை விரித்து பெரிய பரோபகாரி போல, ''தாராளமாக மதுரா நீ எப்போது விரும்புகிறாயோ. அப்போது பதில் கூறினால் போதும் எனக் கூறி விட்டான்.

வீட்டிற்கு வந்து தந்தையிடம் விஷயத்தைச் சொன் னாள். அவ்வளவுதான். அந்த கிடுகிடு நாற்காலியிலும், சதாசிவம் அந்த மதுரா, ஈஸி சேரிலுமாய் திக்பிரமை பிடித்தவர்கள் போல் அப்படியே ஆடாமல் அசையாமல் சிந்தனையில் உட்கார்ந்து விட்டனர்.

சதாசிவம்தான் கொஞ்ச நேரத்தில் சுதாரித்து நிமிர்ந்த வராய் பார்த்தார்.

''என்னம்மா.. இது.. நமக்கு சோதனைமேல் சோதனை யாய் அல்லவா வருகிறது? போனோம் வேலை பார்த் தோம்.. என்று இல்லாமல் பிரச்சினை மேல் பிரச்சனை யாக அல்லவா வருகிறது?''

அவரது கேள்விக்கு பலத்த தலையாட்டல் செய்த மதுரா கூடவே, ''பேசாமல்.. விருப்பமில்லை. முடியாது.. என்று மறுத்துச் சொல்லி விடலாமா?'' என்றாள்.

சதாசிவம் அதற்கு உடனே பதில் சொல்லாமல் ஓரிரு நிமிடம் மௌனமானார்.

''என்னப்பா யோசிக்கிறீர்கள். முடியாது என்று சொல்லி விடலாம்தானே..?'' என்றாள் மதுரா திரும்பவும்.

''இல்லை.. அம்மா.. இன்னொரு விதமாகவும் யோசித் துப் பாரு. உன் முதலாளி இந்த மோகனையும் அவனது தாயாரையும் பார்த்தால் நல்லவர்களாய் இரக்க சிந்தனை யுள்ளவர்களாய் தெரிகிறது. ஒரு வேளை இதன் மூலம் ஒரு நல்ல வாழ்க்கை உனக்கு கிடைத்து விட்டால்..?''

''அது எப்படி அப்பா நடக்கும்? சம்பளத்திற்கு வேலை பார்க்கும் நாம் எங்கே? பெரும் பணக்காரர்களும் முத லாளிகளுமான அவர்கள் எங்கே?''

''இருந்தாலும்.. ஏதோ சொல்வார்களே.. அதிர்ஷ்டம் வரும்போது கூரையைப் பிய்த்துக் கொண்டு கொடுக்கும் என்று...''

''இந்தக் குருட்டு அதிர்ஷ்டத்தில் எல்லாம் எனக்கு நம்பிக்கை இல்லையப்பா...''



மதுரா வெகுளிப் பார்வையுடன் கைகளை விரிக்க.. பதிலுக்கு தலையாட்டிவிட்டு சதாசிவமும் அதை ஆமோ தித்தார்.

''எனக்கும் அப்படி நம்பிக்கை இல்லைதான். ஆனால்...

''சொல்லுங்கள்...''

''நாம் இவ்வளவு நாட்கள் ஏழ்மையில் பாடுபட்டு உழன்றதற்கு கடவுள் காட்டும் பரிசாய்க் கூட இருக்க லாமே... கண்மணி..''

இம்முறை மதுராவால் சிரிப்பை அடக்க முடியவில்லை. கலகலவென சிரிக்க ஆரம்பித்து விட்டாள்.

''என்னம்மா சிரிக்கிறாய்?''

''கந்தல் துணிக்கு.. பட்டுக் குஞ்சம் கேட்கிறதோ? எனத் தான் கடவுள் நினைப்பார்.. என்ன.. நான் சொல்வது சரி தானே?'' மதுரா கைகாட்டியபடி பேச சதாசிவம் சீரியஸானார்.

''ஆனால் மோகன் நிஜமாய்த்தானே உன்னிடம் கேட்டிருக்கிறார்?''

மதுராவின் முகம் சட்டென கவலைக்குப் போனது.

''அதுதான் எனக்கு பயத்தைக் கொடுக்கிறது...''

''இதில் பயப்பட என்ன இருக்கிறது..? நாம் நன்கு யோசிப்போம். பிடித்திருந்தால் சரி என்போம். இல்லை யென்றால் மறுத்து விடுவோம்...'

மதுரா எழுந்து கைகட்டியபடி குறுக்கும் நெடுக்கும் யோசிப்பது போல் நடந்தாள். பின் நின்று தந்தையை நோக்கி நிமிர்ந்தாள்.

''நீங்கள் சொல்லுங்கள் அப்பா. உங்கள் அபிப்பிராயம் என்ன? உங்களுக்குப் பிடித்திருக்கிறதா?'' என்றாள்.

சதாசிவமும் யோசிப்புடன் நிமிர்ந்தார்.

''என்னை விடும்மா.. நீதான் நன்கு அறிந்தவள். விபரம் புரிந்தவள். நீயே முடிவெடு...'' என்றார்.

மதுராவால் ஒரு முடிவிற்கும் வர முடியவில்லை.

அவளது நிலை மகாபாரதத்தில் வரும் தருமரின் சூதாட்ட நிலையை ஒத்திருந்தது.

பாண்டவரான தருமர் விதி வசத்தால் சூழ்ச்சியால் சூதாட்டத்தில் கலந்து கொண்டு ஒவ்வொன்றையாக தோற்றுக் கொண்டிருந்தார். வரிசையாக ஒவ்வொரு பொருளாக வைத்து சூதாடிய அவர் கடைசியில் திரௌபதியையே பகடைப் பொருளாய் வைத்து சூதாடும் நிலைமைக்கு வந்து விட்டார். திரௌபதியை வைத்து அப்படி ஆடுவதா.. வேண்டாமா? இதற்கு சம்மதிப்பதா.. கூடாதா..? என ஒரு கணம் தடுமாறினார்.

அவரது தடுமாற்றத்தை உணர்ந்த கௌரவர்கள், அவர் சூதாட்டத்தில் வித்தைகள் தெரியாதவர், எல்லாவற்றையும் தோற்கப் போகிறவர் என்றெல்லாம் வசைபாடும் அளவுக்கு எள்ளி நகையாடினர்.

அவர்களது கேலிச் சீண்டல் தருமரின் வேகத்தைக் கூட்டியது. எப்படியாவது சூதாட்டத்தில் கலந்து இழந்ததை மீட்டு ஜெயித்துக் காட்ட வேண்டும் என்ற சூளுரையை வெறியாய்த் தூண்டியது.

அந்த வெறியினாலே கொஞ்சமும் யோசிக்காமல் திரௌபதியையே பகடைக் காயாய் சூதாட்டத்தில் வைத்து விளையாடத் துணிந்தார் தருமர். எதிரிகளின் சூழ்ச்சிப் பேச்சை உண்மையென நம்பி சட்டென அப்படி ஒரு முடிவை எடுத்திருப்பார். மகா புருஷர்.. தருமர்....



அப்படியொரு நிலையில்தான் மதுராவும் இருந்திருந்தாள் என சொல்ல வேண்டும். திரும்பத் திரும்ப யோசித்தும் எதிர்மறையான காரணங்கள் எதுவும் வராமல் இதற்கு சம்மதிப்பது சரிதான் என்றே மனதில் தோன்றியது.

அவள் நினைப்பில் எல்லாவற்றுக்கும் மேலாக தான் இதற்கு ஒத்துக் கொண்டால் தன் தந்தைக்கு பெரும் பாரம் இறங்கிய நிம்மதியும், நல்லவொரு வாழ்க்கையும் கிடைக்கும் என்றே நம்பினாள்.

வயது காரணமாக தளர்ந்து விட்ட தந்தை இனி நிம்மதியாய் வீட்டில் அமர்ந்து ஓய்வெடுக்கலாம். மோகனைக் கட்டிக் கொண்டால் பொருளாதாரச் சூழ்நிலை மாறி நல்லதொரு வசதியான வாழ்க்கை ஏற்படும். அதில் தந்தையை மகிழ்வாய் சந்தோஷமாய் வைத்துக் காப்பாற்றலாம்.

அந்த அவரது நிம்மதியான மகிழ்ச்சியே அவளுக்கு பெரிதும் உவகையைத் தரும். யோசித்து யோசித்துப் பார்த்தவள் இப்படி ஒரு முடிவு எடுப்பதினால் தந்தைக்கு நிம்மதியான ஒரு வாழ்க்கையை ஏற்படுத்திவிட முடியும் என்பதை அறிந்து உற்சாகமே ஆனாள்.

அதனாலே மறுநாளே தெளிவு கொண்டவளாய், ''அப்பா, நன்றாக யோசித்து விட்டேன். மோகன் கேட்டதற்கு சரியென்று சொல்லி விடவா?'' என்றாள் சதாசிவத்திடம்.

சதாசிவமும் யோசித்து உள்ளுக்குள் அப்படியொரு முடிவு எடுத்திருந்தாரோ... என்னவோ.. அவள் சொல்லியதும், ''மிக.. நல்ல முடிவு.. சரியாக எடுத்திருக்கிறாய்..'' என்றார் பலமாய் தலையாட்டியபடி.

இருவருக்கும் சம்மதம் என ஏற்பட்டு விட்டதால் தாமதிக்காமல் அன்றே மோகனிடமும் விஷயத்தைக் கூறினர்.

மோகனுக்கு நம்ப முடியாத ஆச்சரியம்!

''நிஜமாகவா..? உங்களுக்கு சம்மதம்தானா? அப்படி யானால்.. சந்தேகமில்லை. நான் பெரிய அதிர்ஷ்டசாலி தான்!'' வாய்விட்டு கூவாத குறையாய் பெரிதாய் சொல்லி வாய் பிளந்தான் மோகன்.

அவன் அதிசயித்து ஆச்சரியப்படுவதை ரசித்துப் பார்த்த மதுரா சாதாரண பணியாளாய்... அவனிடம் வேலை பார்க்கும் தன்னை மணப்பதை பெரும் பாக்யமாய் அல்லவா இவன் நினைக்கிறான்...'' என வியக்கவும் செய்தாள்.

ஆனால் மோகன் அப்படி பாக்யமாய் கருதியது எதனால் என்பதை உண்மையாய் அவள் மறுவாரம் அறிய வந்த போது, அப்படியே அதிர்ந்துதான் போனாள் மதுரா.

## 7

**மோ**கன் மதுராவிடம் சம்மதம் வாங்கியதும் மளமள வென கல்யாண வேலைகளில் இறங்கி விட்டான் என்று தான் சொல்ல வேண்டும். அடுத்த நாளே ஒரு பெரிய பைண்ட் செய்த புத்தகத்தை நீட்டினான்.

மதுரா திகைக்க, ''மதுரா, இதில் பல வகையான டிசைன்கள் இருக்கின்றன. நீதான் ஒன்றை செலக்ட் செய்து தர வேண்டும்...'' என்றான்.



''டிசைன்களா... எதற்கு?''

மோகன் அதற்கு முகத்தை அஷ்ட கோணலாக்கி சிரித்தது ரசனைக்குப் பதில் அவளைப் பயமுறுத்தவே செய்தது.

''என்ன மறந்து விட்டாயா? நம் கல்யாண இன்விடேஷன் எப்படி எந்த டிசைனில் இருக்க வேண்டும் என செலக்ட் செய்ய வேண்டாம்? திருமணத்திற்கு நாள் நெருங்கு கிறதே!'' என்றான்.

பதிலுக்கு மதுரா வியப்படைந்து, ''அப்படியானால் ஐயரை வைத்து நல்ல நாள் பார்த்து விட்டீர்களா?'' எனவும் அதற்கும் அதே கோணல் சிரிப்பு சிரித்தவன், ''ஐயர் எதற்கு? நானே.. காலண்டரைப் பார்த்து நல்ல நாளாய் தேர்ந்தெடுத்து விட்டேன். அடுத்த வாரம்.. பத்தாம் தேதி.. திங்கட்கிழமை.. நல்ல நாள்.. போதுமா? அன்று நம் திருமணத்தை வைத்துக் கொள்வோமா?'' என்றான்.

மதுரா அவன் சொல்வதற்கு தலையாட்டவே செய்தாள்.

''அப்படியானால்.. டிசைனை செலக்ட் செய்து கொடு. அழைப்பிதழை அடிக்கக் கொடுக்க வேண்டும்..'' என்றான்.

மதுரா அந்த பெரிய புக்கைப் புரட்டிப் பார்த்தவள் எவ்வித லயிப்புமில்லாமல், ''நீங்களே டிசைனை தேர்வு செய்து கொள்ளுங்கள்...'' என புத்தகத்தை திருப்பி நீட்டி னாள்.

அப்படி புக்கை திரும்பி மோகன் வாங்கும்போது வேண்டுமென்றே அவளது விரல்களை தொட்டு ஸ்பரி சித்தபடி அவன் வாங்கியது போல் அவளுக்குத் தோன்றியது.

அப்படி அவன் தொட்டதும் கட்டிக் கொள்ளப் போகிற வன் என்ற சந்தோஷம் வராமல் எரிச்சல் ஏற்படுவதையும்,

ஸ்பரிசம் பட்டு இனிமை வராமல் அருவையான உணர்வு ஒன்று பரவுவதையும் கண்டு திடுக்கிடவே செய்தாள் மதுரா.

ஆனால் மோகனோ அதையெல்லாம் உணராமல் பெரிதாய் தலையாட்டினான்.

''புரிகிறது... புரிகிறது..! அதாவது எனது விருப்பம் தான்.. உன் விருப்பமும்.. அப்படித்தானே!'' என்றபடி குஷி கொண்டவன் போல் அவன் தோள்களைக் குலுக்கினான்.

மறுநாளே.. இன்விடேஷனை டிசைன் செய்து அடித்து அவள் முன் மோகன் நீட்டியபோது அவனது வேகத்தைக் கண்டு ஆச்சரியப்படவே செய்தாள். ஆனால்.. அதைவிட முதன் முதலாய் தனது கல்யாண இன்விடேஷனைப் பார்க்கும்போது ஏற்பட வேண்டிய பூரிப்பு.. சந்தோஷம்.. என எதுவும் தனக்குத் தோன்றாததைக் கண்டு அவள் ஆச்சரியம் கூடவே செய்தது.

எதனால்..? என ரொம்பவும் யோசித்துப் பார்த்தவள், சூழ்நிலை காரணமாகவே தான் சம்மதம் சொல்லி இந்த ஏற்பாடுகள் நடப்பதினால் இருக்கும் என நினைத்தாள். அதனாலே மோகனிடமும் நடக்கும் கல்யாண ஏற்பாடு களிலும் தனது மனம் ஒட்ட மறுக்கிறது என முடிவிற்கும் வந்தாள்.

லயிப்பில்லாத மனதை அப்படியே விடுவது ஆபத்து என்பதை உணர்ந்து.. மனதை கல்யாண விஷயங்களை நினைக்க வைத்து ஈடுபடுத்திக் கொள்ளவும் முயன்றாள்.

ஆனால் மோகனைப் பார்த்தாலோ, அவன் உருவத்தை நினைத்தாளோ.. அவன்தான் தனது கணவனாய், தனக்கு



மாப்பிள்ளையாய் வரப் போகிறவன் என்பதையெல்லாம் முழுமையாய் கொஞ்சமும் ஏற்றுக் கொள்ள முடியாதது போலவே தோன்றியது.

இந்த விட்டேற்றியான மனநிலையை இப்படியே விட்டால் ஆபத்து என்பதை அவள் உணர்ந்திருந்தாலும் போகப் போக சரியாகிவிடும் என நினைத்துக் கொண்டாள்.

அதனாலே புடவை வாங்க அவன் அழைத்தபோது எவ்வித மறுப்பும் சொல்லாமல் தலையாட்டினாள். மோகன் காரில் அவளை பிரபல ஜவுளிக் கடை ஒன்றிற்கு கூட்டிப் போய் பத்து பதினைந்து சேலைகளை வாங்கிக் கொடுத்தான். இதில் கல்யாணத்திற்காக தனியாய் விலை யுயர்ந்த சேலை ஒன்றையும் அவனே செலக்ட் செய்தான்.

விலைகளைப் பார்த்து மலைத்து மதுரா மறுத்தும் பிடிவாதமாய் வாங்கிக் கொடுத்து கூட்டி வந்தான். அவளுக்குக் கொஞ்சமும் பரிச்சயமில்லாத உயர்ரக ரெஸ்ட்டாரண்டுகளுக்கு கூட்டிப்போய் பல வகையான உணவு வகைகளை அவளுக்கு அறிமுகப்படுத்தினான்.

கட்டுப்பெட்டி போல் வீட்டுக்குள்ளே முடங்கிக் கிடந்தவளுக்கு இப்போதுதான் வெளியுலகம் தெரிவது போல் மதுரா ஒவ்வொன்றையும் அதிசயமாய்த்தான் பார்த்து பிரமித்தாள்.

கூடவே இப்படி மோகனுடன் வெளியிடங்களுக்கு அடிக்கடி சென்று சுற்றுவதால் தனக்கும் அவன் மீது ஒரு வித ஈடுபாடு வந்து விடும் என நம்பினாள். ஆனால் என்னவோ தினம் இரவு படுக்கப் போகையில் அவளை யறியாமல் மனதில் ஒரு கிலியுணர்வு எழும்பியது.

கல்யாணத்திற்கு இன்னும் ஒரு வாரமே இருக்கிறது. இன்னும் மோகனின் சொந்த பந்தங்கள் யாரும் வந்த

பாடில்லை. கேட்டால், ''எல்லோரும் வெளிநாட்டில்தான் இருக்கிறார்கள். கல்யாணத்திற்கு முந்தைய தினம் தவறாது ஆஜராகி விடுவார்கள்...'' என்று சொல்லி விட்டான் மோகன்.

சரி.. இதுதான் இப்படி என்றால் மோகனின் தாயார் ராஜாமணி அம்மாளும் பிள்ளைக்குக் கல்யாணம் என எவ்வித பரபரப்பும் காட்டவில்லை. அவள் முகத்தில் எந்தவொரு குதூகலமோ சந்தோஷமோ தென்படாதது மதுராவை ஆச்சரியப்படுத்தியது.

ஒருவேளை மோகன் தன்னை விரும்பியதில் இவர்களுக்கு இஷ்டமில்லையோ? என நினைத்த மதுரா அதையும் வாய் விட்டே கேட்டு விட்டாள்.

''அட.. அப்படி எல்லாம் இல்லை.. கண்ணு. நானே.. உன்னைப் பார்த்ததும் மருமகளாக்கி கொள்ளத்தான் நினைத்தேன். என்ன மோகன் முந்திக் கொண்டான்..! உன் மகாலட்சுமி.. போன்ற அழகுக்கு நீ... மருமகளாய் வர நாங்கள் அல்லவா கொடுத்து வைத்திருக்க வேண்டும்...'' என்று சொல்லி மதுராவை பெரிதும் திருப்திப் படுத்தினாள்.

அதற்குப் பின் மதுரா தன்னை உம்மென்று இருப்பதாய் எண்ணி விடக்கூடாது என நினைத்தாளோ... என்னவோ.. மோகனைப் பார்க்கும் போதெல்லாம் டூத் பேஸ்ட் விளம்பரம் போல் அடிக்கடி பற்களைக் காட்டி தேவையில்லாமல் இளிக்க ஆரம்பித்தாள்.

மேலும் மதுராவுக்கு ராஜாமணி அம்மாளின் புதிரான நடவடிக்கைகளைப் பார்த்துதான் மெல்ல சந்தேகம் தோன்றியது. இவ்வளவு வசதியுடன் இருப்பவர்கள்.. இப்படி விசித்திரமான குணாதிசயங்களுடன் எப்படி இருக்கிறார்கள்? என வியந்தாள்.



மேலும் கல்யாணத்திற்கு நாள் நெருங்க.. நெருங்கத்தான் மோகன் ஒவ்வொரு விஷயத்தையாய் அவளிடம் சொல்ல ஆரம்பித்தான்.

கல்யாண நாளில் நிறைய முகூர்த்தங்கள் இருப்பதால் நகரில் மண்டபத்திற்கு ஏக கிராக்கியாம். ஒரு திருமண ஹாலும் கிடைக்கவில்லையாம். அதனால் பிரம்மாண்டமாக நடத்த நினைத்த திருமணத்தில் சிம்பிளாக நடத்தி விட தீர்மானிக்கிறானாம்.

எல்லாவற்றையும் மதுராவிடம் சொல்லிவிட்டு, ''உனது அபிப்பிராயம் என்ன?'' என்றான் அக்கறையாய்.

மதுராவுக்கும் வீண் செலவு செய்து பகட்டான பிரும்மாண்டமாய் நடத்துவதில் எவ்வித ஆர்வமும் இல்லாததால், இதுவே.. சரி.. என தலையசைத்தாள்.

எப்படி சிம்பிளாய் நடத்தப் போகிறான், என்பதையும் மோகன் விவரித்தான்.

நகருக்கு வெளியே ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் பிரசித்தி பெற்ற மலையடிவார கோவில் ஒன்று இருக்கிறதாம். அங்குள்ள முருகன் சந்நிதியில் மாலை மாற்றி திருமணம் செய்து கொள்ளலாம். அந்தக் கோயிலின் குருக்கள் மோகனுக்கு ரொம்பவும் வேண்டியவரானதால் அவரே எல்லா ஏற்பாடுகளையும் செய்து விடுவாராம்.

அவன் சொல்லச் சொல்ல அதற்கு பலமாய் தலையாட்டுவதைத் தவிர மதுராவுக்கு வேறு ஒன்றும் சொல்லத் தோன்றவுமில்லை. சொல்லத் தெரியவுமில்லை.

கிளிப்பிள்ளை போல் நடக்கும் திருமண ஏற்பாடுகளுக்கெல்லாம் தலையசைத்துக் கொண்டிருந்தவளுக்கு அன்று மாலை தந்தை சதாசிவம் கவலை பொங்கும் முகத்தோடு வந்ததுதான் பயத்தைக் கொடுத்தது.

என்ன விஷயம்? என மதுரா பயந்து வினவ... மதுரா பயப்படும்படியே சதாசிவம் அந்த விஷயத்தைச் சொன்னார்.

மோகன் வீடு இருக்கும் தெருவோர பெட்டிக்கடை ஒன்றில்தான் அவர் வெற்றிலையும் சீவல் பாக்கும் வாங்குவது வழக்கம். அங்கு வாங்கி கடையோரமாய் இருக்கும் மரப் பெஞ்சில் உட்கார்ந்து நிதானமாய் வெற்றிலையையும் பாதி சுண்ணாம்பையும் சரி பாதியாய் கலந்து பத்து பதினைந்து நிமிடங்கள் அங்கே பெட்டிக்கடைக் காரனுடன் பேசிக் கொண்டிருப்பது அவரது வழக்கம்.

அன்றும் அப்படித்தான் வழக்கம்போல் பெட்டிக்கடைக் காரனிடம் பேசிக் கொண்டிருக்க.. அவன் சொன்ன விஷயம்தான் அவரை உலுக்கி விட்டதாம்.. என்றபடி விஷயத்தை விவரித்தார் சதாசிவம்.

அதாவது மோகன் அவன் சொன்னது போல் பரம்பரையாய் இங்கு குடியிருக்கவில்லையாம். இரண்டு மாதங்களுக்கு முன் தான் புதியதாய் குடி வந்திருக்கிறானாம். அவர்கள் நினைப்பது போல் இது சொந்த வீடு இல்லை. வாடகைக்குத்தான் குடியிருக்கிறானாம்.

மேலும்.. மோகனின் நடவடிக்கைகள் புதிராய் பெட்டிக் கடைக்காரனுக்கு சந்தேகப்படும்படியாய் இருக்கிறதாம். யார்.. யாரோ.. புதுஸாய் ஹிந்திக்காரர்கள் எல்லாம் வந்து அடிக்கடி அவனை சந்தித்து விட்டுச் செல்கிறார்களாம். அதனால்.. உங்கள் மகளை.. வேறு இடத்தில் வேலை பார்க்கச் சொல்லுங்கள். இந்த வேலையை விட்டு விடுங்கள்.. என பெட்டிக் கடைக்காரன் உபதேசம் வேறு செய்திருக்கிறானாம்.

சதாசிவம் சொல்லியவர் பயம் பொங்க தன் கண்களை இடுக்கிக் கொண்டு, ''மோகன் நடவடிக்கைகள் சந்தேகமாய் இருக்கிறது. அவரிடம் வேலை பார்ப்பதையே நிறுத்தி விடுங்கள்.. என்கிறான் பெட்டிக்கடைக் காரன். ஆனால் நாம்தான் எல்லாவற்றுக்கும் சம்மதித்து கல்யாணம் வரை போய் விட்டோமே..! இப்போது என்ன செய்வது? யாரை நம்புவது..?'' என்றார் சதாசிவம் பரிதாபமாய்.



தந்தை சொல்லச் சொல்ல மதுராவுக்கு அடிவயிறு கலங்க பகீரென்றுதான் இருந்தது. ''ஐயோ! அப்பா! என்ன சொல்கிறீர்கள்?'' என்றாள் பதறியவாறு. சதாசிவம் பதறியவளின் தலையை வாஞ்சையாய் வருடி சமாதானப் படுத்தியவர், ''பதறாதே.. கண்மணி.. இன்னமும் நமக்கு அவகாசம் இருக்கிறது...'' என்றார்.

''எப்படி.. அப்பா. இன்னும் கல்யாணத்திற்கு ஐந்து நாட்கள்தானே இருக்கிறது...?'' என்றாள் மதுரா குரல் நடுங்க.

சதாசிவமும் பெரும் கவலை கொண்டவராய் தலையில் கை வைத்து யோசிக்க ஆரம்பித்து விட்டார்.

மதுராவும் யோசித்தவள் பட்டென ஏதோ பொறி தட்டியது போல் நிமிர்ந்தாள்.

''அப்பா ஒரு யோசனை தோன்றுகிறது...''

''என்னம்மா?''

''நான் வேலைக்குச் சேர்ந்த புதியதில் முனியம்மா என்றொரு வேலைக்காரி வீட்டு வேலை பார்த்து நின்று விட்டதாக சொன்னார்கள். நான் கூட அவளை வீட்டில் ஓரிருமுறை பார்த்திருக்கிறேன்...''

மதுரா சொல்ல சதாசிவமும் ஞாபகம் வந்தவராய் நிமிர்ந்தார்.

''ஆமாம்மம்மா. எனக்கும் ஞாபகம் வருகிறது. அவளின் வீடு கூட. பக்கத்து சேரிக் குடியிருப்பில்தான் என கேள்விப்பட்டிருக்கிறேன்...''

மதுரா உற்சாகமானாள்.

''அப்படியானால் அங்கு சென்று அவளிடம் விசாரித்தால் உண்மை என்னவென்று தெரிந்துவிடும். என்ன சொல்கிறீர்கள்?''

மதுராவின் கேள்விக்கு சதாசிவம் சம்மதித்தார். இருவரும் தாமதிக்காமல் அன்று மாலையே சேரிக்குப்பம் சென்று அந்த முனியம்மாவைத் தேடினர்.

ஒரு வழியாய் பலரிடம் விசாரித்து கடைசியில் முனியம்மாவின் குடிசை வீட்டை கண்டு பிடித்து அவளிடம் மோகன் பற்றி கேட்டபோது.. அவள் சொன்ன பதில் அவர்களை அப்படியே ஸ்தம்பிக்க வைத்தது.

## 8

முனியம்மாள் சொன்ன பதிலைக் கேட்டு இருவரும் இடிந்து போனார்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

அப்படியே வெளிறிய முகத்துடன் அவள் குடிசையை விட்டு வெளிவந்தனர். முனியம்மாள் தெளிவாய் விளக்கமாய் சொல்லி விட்டாள்.

''சந்தேகமே படாதீர்கள். அந்த ஆள் மோகன் நல்லவனில்லை. ஒரு பெரிய பிராடுதான். அந்த அம்மாள் ராஜாமணியும் அவனது உண்மைத்தாய் கிடையாது. இருவரும் தாயும் மகனும் போல எதற்காகவோ நடித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். அவர்களது நடவடிக்கையும், முன்னுக்குப் பின் முரணாய் பேசும் அவர்கள் பாங்கும் ரொம்பவும் சந்தேகப்படும்படியாய் விசித்திரமாய் இருக்கிறது. அதனாலே வீட்டு வேலை செய்ய பயந்து நான் வேலையில் இருந்து நின்று விட்டேன். நீங்களும் உடனே விலகி விடுங்கள். இல்லையெனில் ஆபத்து உங்களுக்குத்தான்!''



முனியம்மாள் சொன்ன எல்லாவற்றையும் கேட்டு அதிர்ந்து நடந்தவர்கள் அப்படியே வீட்டுக்கு வந்து தொப்பென உட்கார்ந்தார்கள். ரொம்ப நேரம் திக் பிரமை பிடித்தவர்கள் போல சுவரையே வெறித்தார்கள்.

மதுராவுக்கோ ஏற்கனவே மோகனின் நடவடிக்கைகளை விட அவனது தாயார் ராஜாமணி அம்மாளின் மீது சந்தேகம் இருந்து வந்தது. ஏனெனில் அந்த அம்மாளுக்கு மோகன் சொன்னது போல் எவ்வித உடல்நலக் குறைவும் இருந்தாற்போல் தெரியவில்லை.

நல்ல திடகாத்திரமாய் ஆரோக்கியமாய் இருப்பது போலவே பட்டது. அதிலும் மதுரா வரும் சமயங்களில் மட்டும் நோயாளி போல் பெட்டில் சென்று படுத்து விடுவது போலவும் தோன்றியது.

மேலும் ராஜாமணி அம்மாள் சாப்பிடும் மருந்துகளும் மாத்திரைகளும் வைட்டமின் மருந்துகளாகவே இருப்பதை மதுரா கவனித்தாள். அவற்றையும் அவள் வேளை தவறாமல் கொடுக்கச் செல்லும்போது, ''நானே.. போட்டுக் கொள்கிறேன். உனக்கு ஏன் சிரமம்?'' எனக் கூறியபடி மாத்திரைகளை வாங்கிக் கொண்டு அவளை அனுப்பி விடுவாள் ராஜாமணி அம்மாள்.

சதாசிவம் தொடர்ந்தார்.

''மதும்மா, நான்தான் ஒரு சின்ன விஷயத்திற்காக கோபித்துக் கொண்டு அவர்களது உறவே வேண்டாம் என வந்து விட்டேன். ஆனால் அவள் என்னை மறக்க வில்லை. விடாமல் மூணு மாதத்திற்கு ஒரு முறை கடிதம் போட்டுக் கொண்டுதான் இருப்பாள். இப்போது.. நம் பிரச்சினைக்கு அவள் உதவியைத் தான் கேட்கப் போகிறேன். அவள் ஒருத்தியால் தான் நம்மைக் காப்பாற்றி கரை சேர்க்கவும் முடியும்...''

''என்னப்பா சொல்கிறீர்கள்? அத்தையால் எப்படி நம்மைக் காப்பாற்ற முடியும்?'' அதிசயித்துதான் கேட்டாள் மதுரா.

''அம்மா.. மதுரா ஒன்றை மறந்து விட்டாயா...? உன் அத்தையின் கணவர் உன் மாமா பாண்டியன் போலீஸ் உத்யோகத்தில் பணியாற்றுகிறார் அல்லவா.. ஞாபகம் வருகிறதா?''

மதுரா புருவம் உயர கண்களை விரித்தினாள். அவளுக்கு ஞாபகமும் வந்தது. பாண்டி மாமா.. பாண்டி மாமா.. என அவள் சுற்றி வருவாளே.. அப்போதே மிடுக்கான அவரது போலீஸ் உடையையும், வீட்டில் கிடக்கும் லத்தி கம்பையும் தொட்டுத் தொட்டுப் பார்த்தாளே?

யோசித்தவளுக்கு அப்பா சொல்வது போல் போலீஸ் வேலையில் இருக்கும் பாண்டி மாமாதான் இதற்குச் சரியான ஆள். அவர் மூலமாய்த்தான் இந்த இக்கட்டில் இருந்து நாம் தப்பிக்க முடியும் என்பதும் புரிந்தது.

''புரிகிறது.. ஆனால் அப்பா..'' என்று மதுரா இழுக்க நெற்றியைச் சுருக்கினார் சதாசிவம்.



''என்ன மதும்மா?''

''பாண்டி மாமாவால் நமக்கு நன்றாக உதவ முடியும். இந்த ஆபத்தில் இருந்து நம்மைக் காப்பாற்ற முடியும். ஆனால் அவர்கள் உதவ வேண்டுமே... உதவுவார்களா?''

சதாசிவம் தலையை படபடவென அசைத்து ஆமோதிக்கத்தான் செய்தார்.

''நீ சொல்வது புரிகிறதம்மா. இவ்வளவு நாள் நாம் வேண்டாம் என விட்டுவிட்ட சொந்தம் முன் திடீரென்று போய் நின்று உதவி கேட்டால்.. என்ன செய்வார்கள்..? ஆனால் எனக்கு செண்பகத்தின் மீது நம்பிக்கை இருக்கிறது. அவளுக்கு என் மீது பாசம் உண்டு. அவள் கண்டிப்பாய் நமக்கு உதவி செய்யத்தான் செய்வாள்.''

சதாசிவம் ஆணித்தரமாய் சொன்னபடி டிரங்குப் பெட்டியிலிருக்கும் தனது சகோதரியின் முகவரியை தேடி எடுத்தார். அன்று மதியமே அதில் குறிப்பிட்டிருந்த தொலைபேசி எண்ணுக்கு போன் செய்தார்.

மறுநாளே அவர் எதிர்பார்த்த அதிசயமும் நடந்தது.

## 9

சதாசிவம் மிக விரைவாய் தன் சகோதரி செண்பகத்துடன் தொடர்பு கொண்டு முழு விபரத்தையும் அழாத குறையாய் சொல்லி விட்டார்.

அதன் பின்தான் வேலைகள் மின்னல் வேகத்தில் நடைபெற்றது. அடுத்த பஸ்ஸிலே செண்பகம் தன் கணவர் பாண்டியனோடு புறப்பட்டு வந்து விட்டாள்.

வீராப்பாய் கோபித்து பிரிந்திருந்த சகோதரனும் சகோதரியும் சந்தித்துக் கொண்டனர். தங்கள் பழைய கோப தாபங்களை மறந்து பாச மழை பொழிய ஆரம்பித்தனர்.

செண்பகம் ஆசை ஆசையாய் மதுராவைக் கட்டிக் கொண்டாள். ''மதுரரவா.. நீ..? இவ்வளவு பெரிதாய் அழகுக் குமரியாய் வளர்ந்து விட்டாயே...!'' என உச்சி முகர்ந்து வியந்தாள்.

வீட்டிற்குக் கூட்டிப்போய் எல்லா விஷயங்களையும் விளக்கினார் சதாசிவம்.

செண்பகத்திற்கு ஒரே கோபம்தான்!

''இவ்வளவு கஷ்டப்பட்டு இருக்கிறாய். என்னிடம் ஒரு வார்த்தை கூட சொல்லவில்லையே.. நல்ல ஆளப்பா.. நீ..!'' என செல்லமாய் கடிந்தாள்.

அதற்குப் பின் போலீஸ்காரரான பாண்டியன் மாமா மதுரா வேலை பார்க்கும் மோகன் பற்றிய விபரங்களுடன் போலீஸ் நிலையம் சென்று இன்ஸ்பெக்டரை சந்தித்தார்.

அடுத்த அரை மணி நேரத்தில் மோகனின் பங்களா வில் அதிரடியாய் போலீஸ் பட்டாளம் ஒன்று நுழைந்தது. மோகனும், ராஜாமணி அம்மாளும் கைது செய்யப்பட்டனர். அவர்கள் இருவரும் போலீஸ் தேடிக் கொண்டிருக்கும் பழைய குற்றவாளி என்றபோது அதிரத்தான் செய்தனர்.

இன்ஸ்பெக்டர், மோகனின் லீலைகள் பற்றி ஒவ் வொன்றாய் விவரிக்க அதிர்ச்சியில் ஏறக்குறைய உறைந்தே விட்டனர்.

மோகனும் ராஜாமணி அம்மாளும் டுபாக்கூர் பேர்வழி களாம். ஊர் ஊராகச் சென்று மணமாகாத தொழிலதிபர் போல் நடித்து அப்பாவி இளம் பெண்களை தங்கள் வலையில் சிக்க வைப்பதே அவர்களது தொழிலாம்.



அப்படி அப்பாவி பெண்களை தங்கள் வலையில் வீழ்த்த கல்யாணம் செய்வது போல் எல்லாம் நடித்து போலியாய் யாருக்கும் தெரியாத இடத்தில் வைத்து தாலி கட்டி ஏமாற்றி அப்படியே மணப் பெண்ணாகவே விலை பேசி மும்பை சிவப்பு விளக்குப் பகுதிக்கு விற்று விடு வார்களாம்.

இப்படி கொடூரமாக ஒரு தொழில் செய்து ஊர் ஊராய் நிறைய இளம் பெண்களை ஏமாற்றி இருக்கிறார்கள். ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வொரு பெயர் சொல்லி தொழி லதிபர் போல், வக்கீல் போல், டாக்டர் போல் எல்லாம் நடித்து ஏமாற்றியிருக்கின்றனர்.

பல நாட்களாய் போலீஸ் தேடிக் கொண்டிருக்கும் பழைய பயங்கர குற்றவாளிகள்! கைது செய்யப்பட்டு மறுநாளே எல்லா பேப்பர்களிலும் பரபரப்பாய் செய்திகள் வெளியாகின.

விஷயம் முழுவதையும் அறிந்த மதுராவும் சதா சிவமும் அதிர்ச்சியில் உறைந்தே போய் விட்டனர். எவ்வளவு பெரிய ஆபத்தில் சிக்கிக்கொள்ள இருந்தோம்.. என தவித்தே போய் விட்டனர்.

நல்ல வேளையில் சரியான சந்தர்ப்பத்தில் வந்து காப்பாற்றிய செண்பகம் அத்தையும் பாண்டியன் மாமா வும் தெய்வம் போலத்தான் மதுராவுக்குத் தெரிந்தவர்கள். அத்தையை இறுகக் கட்டிக் கொண்டு கண்ணீர் விட்டாள் மதுரா.

செண்பகமும் அவளை ஆறுதல் படுத்தியவள் கூடவே தீர்மானமாய் சதாசிவத்திடம் இன்னொரு விஷ யத்தையும் பேசினாள்.

''இதோ பாரப்பா.. இனியும் நீ இப்படி வயசுப் பெண்ணை வைத்துக் கொண்டு தனியே கிடந்து கஷ்டப்பட்டு அல்லாட வேண்டாம். பேசாமல் என்னுடன் வந்து விடு. மதுராவை இனி நான் பார்த்துக் கொள்கிறேன். என் பேச்சுக்கு மறுப்பு சொல்லாமல் உடனே கிளம்பு..!''

செண்பகம் விரட்டாத குறையாய்ச் சொல்லி சதாசிவத்தை சம்மதிக்க வைத்தாள். மதுராவுக்கும் ஒரே சந்தோஷம்தான்! அத்தையும் மாமாவும் தங்கள் மீது காட்டும் அன்பையும் பாசத்தையும் எண்ணி பூரிக்கத் தான் செய்தாள்.

மறுநாளே வீட்டுச் சாமான்களை எல்லாம் பாக் செய்து லாரி ஒன்றில் ஏற்றிக் கொண்டு அத்தை மாமாவுடன் சென்னை நோக்கிக் கிளம்பி விட்டனர். சென்னை மாநகரம் காலைச் சூரியனின் ஆரஞ்சு வண்ணக் கதிர்களுடன் அவர்களை வரவேற்கத் தயாராகிக் கொண்டிருந்தது.

* * *

மதுராவால் நடப்பதை கொஞ்சமும் நம்ப முடிய வில்லை. நடப்பது கனவா.. நனவா? என்ற பிரமிப்பே இருந்தது.

தந்தையும் அவளுமே மட்டும் குடும்பம் என்று எண்ணி இருந்தவளுக்கு இன்று மாமா, அத்தை, சித்தி, ஒன்று விட்ட பெரியப்பா அத்தை பெண் உதயா, சித்தி மகள் கௌரி, கடைக்குட்டி பாலு என ஒரு பெரிய உறவுப் பட்டாளமே சொந்தம் என வால் பிடித்துக் கொண்டு.

நெகிழ்ந்து போனவளாய் தந்தையின் கரங்களைப் பற்றிக் கொண்டு, ''என்னப்பா.. இது?'' என வியந்து கேட்கத்தான் செய்தாள்.



அதற்கு சதாசிவம் அசட்டுப் புன்னகையுடன், ''எல்லாம் என் மடத்தனம்தான் அம்மா. வீண் வீராப்பு என்ற பிடிவாதத்தால் சொந்தத் தங்கை என்றும் பாராது ஒரு சின்ன விஷயத்திற்காக இருபது வருடங்களுக்கு முன் கோபித்துக் கொண்டேன்'' என்றதும், ''அப்படியா.. அது என்ன சின்ன விஷயம்?'' என்றாள் மதுரா ஆவலாய்.

சதாசிவம் வாயைத் திறப்பதற்குள், ''நீ.. இரு.. உன் புழாக்கை நானே சொல்கிறேன்..'' என சிரிப்புடன் முன் வந்தாள் அத்தை செண்பகம்.

''உன் தந்தை என் தம்பி இருக்கிறானே.. அவன் அப்போது.. அந்த வயதில்.. சரியான குரங்குக்காரன். எதற்கெடுத்தாலும் மூக்கு நுனி சிவக்கிற கோபக்காரன். அவன் எங்களிடம் அப்படி கோபித்துக் கொண்ட சின்ன விஷயம் எது தெரியுமா?''

''சொல்லுங்கள் அத்தை...''

''உன் மாமா போலீஸ் வேலை போக ஓய்வு நேரங்களில் துணி வியாபாரம் செய்கிறபடியால் அடிக்கடி வியாபார கொள்முதல் செய்வதற்காக வடநாடு சென்று வருவார். அப்படி ஒருமுறை பயணம் செல்லும்போது உன் தந்தை தனக்காக ஒரு நல்ல கம்பளிப் போர்வை வாங்கி வரும்படி கேட்டுக் கொள்ள. மாமாவும் சம்மதித்துக் கிளம்பி விட்டார். ஆனால் பார்.. உன் மாமா வியாபார மும்முரத்தில், அந்தச் சிந்தனையில் இந்தக் கம்பளிப் போர்வை வாங்குவதை மறந்து விட்டார். பயணம் முடிந்து வீட்டிற்குள் நுழைந்ததும்தான் அவருக்கு போர்வை வாங்காததே ஞாபகம் வந்தது. உடனே வருந்தியவராய் விஷயத்தைப் போய் உன் அப்பாவிடம் சொல்ல.. உன் அப்பாவுக்கு வந்ததே கோபம். மாப்பிள்ளை.. தன்னை

மதிக்கவில்லை.. தன்னை அலட்சியப்படுத்தி விட்டார்.. என தாம் தூம் என குதிக்க ஆரம்பித்து விட்டார்.''

''என்ன.. ஒரு கம்பளிப் போர்வைக்கா.. இப்படி ஒரு சண்டை''

மதுரா வியந்து கேட்க அடக்க முடியாமல் சிரித்த செண்பகம், ''மாப்பிள்ளையும், மச்சானுமாய் மோதிக் கொண்ட அந்தக் கூத்தை நீயே.. உன் அப்பாவிடம் கேள்...'' என்றபடி கைகாட்ட கூச்சத்தில் நெளிந்தார் சதாசிவம்.

''அதை விடும்மா.. நான் அன்று அப்படி முட்டாள் தனமாய் நடந்ததற்கு இருபது வருடங்களாய் இவளையும் சொந்தங்களையும் பிரிந்து விதியிடம் நன்றாக குட்டு வாங்கி இருக்கிறேனே.. அது போதாதா?'' பழையதை நினைத்து மீண்டும் மருகப் போன தந்தையின் தோள் களை அணைத்துப் பிடித்து சமாதானப்படுத்தியவள்,

''இப்போதுதான்... எல்லாம் சரியாகி விட்டதே.. இனியும் பழையவைகளை ஏன் வருந்திக் கொண்டு நினைக்க வேண்டும்? சந்தோஷமாகவே நினைத்துப் பாருங்கள்!'' என செல்ல அதட்டல் போட்டவள், ''நீங்கள் சொல்லுங்கள். அடுத்து என்ன நடந்தது?'' என்றாள் அத்தையிடம் ஆவலாய்.

''வேறு.. என்ன? வேண்டுமென்றே போர்வையை வாங்கி வரவில்லை.. உரிய மதிப்புத் தரவில்லை.. என உன் அப்பா குதிக்க.. இல்லை... ஒரு சின்ன போர்வை விஷயத்திற்கு இப்படி கோபப்படுவது சரியில்லை. என உன் மாமா குதிக்க... இரண்டு பேர்களுக்கும் பேச்சும் வார்த்தையும் தடித்து பெரும் சண்டையாய் போயிற்று.''



''நீங்கள் தடுக்கவில்லையா?'' மதுரா அத்தையிடம் கேட்க.. முகத்தை அஷ்டமாய் நொடித்தாள் செண்பகம்.

''நடக்கும்.. இந்தக் கூத்தை பார்க்க நான் இருந் திருக்கவில்லையே...? அன்று பார்த்து ஏதோ சினிமாவுக்கு அல்லவா பக்கத்து வீட்டு மாமியுடன் சென்றிருந்தேன். அப்படி படம் முடிந்து வந்து பார்க்கும்போது.. இடி மின்னல் ஓய்ந்து இருவரும் முடிவும் எடுத்திருந்தார்கள்.''

''முடிவா?''

''ஆம்.. இனி இரு குடும்பங்களுக்கும் எவ்வித ஒட்டும் இல்லை. உறவும் இல்லை. என! நான் வீட்டுக்குள் நுழைந்ததும் உன் அப்பா இதைச் சொல்லிவிட்டு சிறுமியான உன்னை இழுத்துப் பிடித்துக் கொண்டு தரதரவென திரும்பிப் பாராமல் கிளம்பியவர்தான்... அதன் பின் இந்தப் பக்கம் வரவே இல்லை. எட்டிப் பார்க்கக் கூட இல்லை.'' செண்பகம் முடிக்க சதாசிவம் அக்கறையாய் குறுக்கிட்டார்.

''அது.. இல்லை.. செண்பகம்.. ஒரு வருடம் கழித்து நான் கோபமெல்லாம் விலகி பதைப்புடன் உன்னைத் தேடி வந்தேன். ஆனால் அப்போது நீ பழைய வீட்டில் மட்டும் இல்லை... ஊரையே காலி பண்ணி போயிருந் தாய். யாருக்கும் உன்னைப் பற்றிய விபரமோ முகவரியோ தெரியவில்லை. பின் என்ன செய்வது? விதியை நினைத்து நொந்தபடி ஊருக்குத் திரும்பி விட்டேன்...''

சதாசிவம் சொன்னதற்கு ஆமோதித்தபடி பலமாய் தலையாட்டினாள் அத்தை.

''நீ.. சொல்வது சரி... மாமாவுக்கு டிரான்ஸ்பர் ஆகி விட்டதால் ஆறே மாதத்தில் ஊரைக் காலி பண்ணி

விட்டு சென்னையில் குடியேறி விட்டோம். அவசரமாகச் செல்ல வேண்டியிருந்ததால்.. அக்கம் பக்கம் தெரிந்தவர்களிடம் கூட விஷயத்தைச் சொல்ல முடியவில்லை. ஒரு வழியாய் இருபது வருட வனவாசம் இப்போதுதான் முடிந்திருக்கிறது.

அத்தை சொல்லி முடிக்க அத்தையின் சுட்டிப் பெண் உதயா அங்கு பேசுவதைக் கேட்டபடி வந்தவள், ''ஒரு வழியாய்.. பாசக்கார அண்ணன் தங்கைகள் ஒன்று சேர்ந்தீர்களாக்கும்..'' என்று கிண்டலடிக்க அங்கு சிரிப்பலை பொங்கியது.

சிரிப்பலை ஓய்ந்ததும் உதயா சதாசிவத்தை பார்த்தவள், ''மாமா அப்புறம் ஒரு முக்கியமான விஷயம்.'' என்றாள். மதுராவை சீரியஸான பார்வை பார்த்துக் கொண்டே.

''சொல்லும்மா... உதயா குட்டி..'' என்றார் சதாசிவம் புரியாத உற்சாகத்துடன்.

''உங்கள் சீமந்த புத்ரியும் இருபது வயது அழகுக் குமரியுமான மதுராவை ஒரு இருபத்து நாலு மணி நேரம் பிடிவாரண்ட் செய்து எங்கள் கஸ்டடியில் நீங்கள் ஒப்படைக்க வேண்டும். அவளை... அவளை.. நாங்கள்...''

''என்னம்மா செய்யப் போகிறீர்கள்?''

''பயப்படாதீர்கள் மாமா. உங்கள் அருமை மகளை நகரின் பிரபல பியூட்டி பார்லர் ஒன்றிற்கு கூட்டிச் சென்று பத்தாம் பசலி போல் இருக்கும் அவளை மாற்றப் போகிறோம்...''

''ஐயையோ; அதெல்லாம்... வேண்டாம். நான் வர மாட்டேன்..!'' என்றாள் பிடிவாதக் குரலில் மதுரா.



''வேண்டாம் என்றால் விட்டு விடுவோமா..?'' என்றபடி உதயா கௌரியைப் பார்த்து கண் சிமிட்டி கௌரி பதிலுக்கு, ''ஆளுக்கொரு கை பிடித்து உன்னைத் தூக்கியே சென்று விடுவோம்..'' என மிரட்டினாள்.

சொல்லியதோடு இல்லாமல் இருவரும் தூக்குவது போல் மதுராவை மேலும் கீழும் பிடித்து பாவனை செய்ய.. ஓடத்தான் செய்தாள் மதுரா.

உதயாவும் கௌரியும் உட்புறமாய் ஓடிய அவளை விரட்டிக் கொண்டு போக, சதாசிவம் சிரிப்புடன் இதை ரஸித்தபடி, ''சரியான வெகுளிப் பெண். ஒன்றும் தெரியாத அப்பாவி...!'' என்றார்.

செண்பகம் அதைக் கவனித்து சிரித்தவள், ''நீ ஒன்றும் பயப்படாதே அண்ணா. நம் வாண்டுகள் ஊரை விற்று விடும். ஒரே நாளில் மதுராவை அடியோடு மாற்றி விடும்..'' என்றாள்.

செண்பகம் சொன்னது உண்மைதான் போலும். மதுரா வந்த இரண்டாம் நாளே.. அவள் பழைய டிரங்குப் பெட்டியை குடையப்பட்டது. உள்ளிருந்த அவளது கோட்டா சேலைகளை எடுத்துக் கொண்டு உதயாவும் கௌரியும் - ஓடினார்கள். தங்களது டாப்ஸுகளையும் மிடிகளையும் களைந்து விட்டு அதை உடுத்தி அழகு பார்த்தார்கள்.

அன்று மாலையே மதுராவை துணிக்கடை ஒன்றிற்கு தூக்காத குறையாய் கூட்டிப் போய் ஒரு டஜன் துணிமணிகளை மதுராவிற்காக அள்ளிக் கொண்டு வந்தார்கள். எல்லாமே அவர்கள் செலக்ஷன்தான்!

சேலையில் பவ்யமாய் இருந்த மதுராவை ஒரே நாளில் சுடிதாருக்கு மாற்றி துப்பட்டாவை சுற்றி விட்டார்கள்.

புதியதாக நடை பயில்பவள் நடப்பது போல்தான் அந்த சுடிதாரில் வெட்கம் படர நெளிந்து குழைந்து நடந்து கொண்டிருந்தாள். 'மறுத்தால், கழற்றினால் உதை விழும்..' என்ற அவர்களது எச்சரிக்கைக்கு பயந்தே அன்று முழுவதும் சுடிதாரில் மதுரா நடமாடினாள்.

இது ஆரம்பம்தான். இனி வரிசையாய் மிடி, ஜீன்ஸ், ஷார்ட்ஸ், என எல்லாம் தொடரும் என்ற மிரட்டல் வேறு.

இனி என்ன கூத்தோ.. என தினம் தினம் மதுரா பயப்படத்தான் செய்தாள். அவள் அப்படி பயப்பட்டது போலவே ஒரு நாள் ஷாப்பிங் போகலாம் என மதுராவை கூட்டிக் கொண்டு கிளம்பிய உதயாவும் கௌரியும் நேராய் காம்ப்ளெக்ஸ் ஒன்றில் இருந்த பிரபல பியூட்டி பார்லரில் தள்ளாத குறையாய் திணித்து விட்டனர்.

அங்கு அவள் பிடிவாதமாய் மறுத்தும் அவளது இரட்டைச் சடை முடி ஒன்றாக்கப்பட்டு அழகான கூந்தலாக்கப்பட்டது. முன்புற கேசமும் சீராய் ஒதுக்கப்பட்டு ஒன்றிரண்டு முடிக் கற்றைகள் நெற்றியில் புரளும்படியான ஸ்டைல் வேறு. முகத்திற்கு பேஷ் வாஷ், ப்ளீச்சிங், ஸ்கின் ஸ்மூத்தர், ஹேர் ரிமூவர், பர்ஃப்யூம், க்ளீனர் என ஏகப்பட்ட சமாச்சாரங்கள்.

ஒரு வழியாய் பார்லரில் இருந்து மதுரா வெட்கம் படர நாணிக் கோணி வெளி வந்தபோது அவளது அழகைப் பார்த்து உதயாவும் கௌரியும் உண்மையிலே அசரத்தான் செய்தார்கள்.

''வாவ்... உலக அழகிப் போட்டிக்கு சரியான சாய்ஸ். இந்த முறை நீ வேண்டுமானால் கலந்து கொள்கிறாயா?'' என கிண்டலடிக்கவும் வெட்கத்துடன் நழுவத்தான் செய்தாள் அவள்.



ஆனால் யாரும் பார்க்காத சமயமாய் கண்ணாடி முன் நின்று தன்னையே பார்த்த மதுராவுக்கு பிரமிப்பாகவே இருந்தது. தனது முந்தைய தோற்றத்தை அப்பாவிக் களையை முற்றிலும் மாற்றி நாகரீகப் பொலிவு தோற்றத்தில் பிரதிபலிப்பதை உணர்ந்தாள்.

தோற்றத்தை மாற்றிய உதயா கௌரியின் செய்கைகளை விட அவர்கள் தன் மீது காட்டும் அன்பு, பாசம் அவளை நெகிழ வைத்தது. இவ்வளவு நாள் முன் பின் தெரியாதவர்களாய் இருந்து விட்டு திடீரென உறவு பந்தம் ஏற்பட்டதும் பாச மழையாய் அன்பைப் பொழிவதை நினைக்கும் போது அவளுள் மகிழ்ச்சி பெருகியது.

அதைவிட அத்தையும் சுற்றத்தாரும் அவர்களது ஏழ்மையான பொருளாதார சூழலை கொஞ்சமும் பொருட்படுத்தாமல் தங்களுடன் அணைத்துக் கொண்டது மதுரா கொஞ்சமும் எதிர்பாராததுதான். அதற்காக அத்தையின் குடும்பத்திற்கு என்றென்றும் தான் நன்றிக்கடன் பட்டிருப்பதாக மதுரா நினைத்து உள்ளூர உருகவும் செய்தாள்.

அதே நினைப்பில் ஒரு நாள் இப்படித்தான் அத்தையின் கைகளைப் பிடித்துக் கொண்டு கண்களில் நீர் திரையிட அவள் நன்றி தெரிவித்துப் பேச, செண்பகம் அவள் கைகளைத் தட்டிச் சிரித்தவள், ''அட.. பெரிய மனுஷி போல் இப்படியெல்லாம் பேச வந்து விட்டாயே...?'' என்று அதிசயித்து விட்டு,

''மதுக் குட்டி, நான் ஒன்றும் இதையெல்லாம் சும்மா செய்யவில்லை. உன்னைப் பற்றிய உள்ளூர ஆசையொன்றும் எனக்கு உண்டு...'' எனக் கூறி அவளை அதிரவும் வைத்தாள்.

மதுரா புரியாமல் விழித்து, ''என்ன அத்தை சொல்கிறீர்கள்?'' எனவும், ''மறந்து விட்டாயா? எனது செல்ல மகன். அதாவது உனது முறைப்பையன் வந்ததும் உங்கள் இருவருக்கும் பிடித்திருந்தால் கல்யாணம் என்னும் முடிச்சு ஒன்றையும் போடத் திட்டம் வைத் திருக்கிறேன்...'' என்றவள் மதுராவின் முகம் கண்கள் விரிய வியப்பதைப் பார்த்து,

''நீ அதற்காக எவ்வித அச்சமும் கொள்ளத் தேவை யில்லை. நான் சொல்வது போல் இருவருக்கும் பிடித் திருந்தால்தான்.. அதிலும் முக்கியமாய் உனக்குப் பிடித் திருந்தால்தான்...'' என அழுத்தமய் கூறி அத்தை முடித் திருந்தாள்.

மேலும் அப்போதுதான் அவளுக்கு அத்தையின் மகனைப் பற்றி சொன்ன விபரங்கள் எல்லாம் ஞாபகத் திற்கு வந்தது.

மேனேஜ்மெண்ட் பற்றிய ஒரு வருட உயர் படிப்பு ஒன்றிற்காக கொல்கத்தா சென்றிருப்பதாகவும் இன்னும் பத்து நாட்களில் படிப்பெல்லாம் முடிந்து 'ஊர் திரும்பு வதாகவும் அறிந்திருந்தாள்.

ஏதோ ஒரு ஆவலில் போட்டோ ஆல்பம் ஒன்றை உதயாவும் கௌரியும் புரட்டிக் கொண்டிருந்தபோது அதில் இருந்த அவளது அண்ணன் போட்டோவை மதுராவும் பார்க்க முயன்றாள்.

அதைக் கவனித்த வாண்டு உதயா உடனே ஆல் பத்தை மறைத்துக் கொண்டு, ''அட... முறைப் பையனை அத்தானை... அவ்வளவு லேசில் பார்க்க விடுவோமா? போட்டோவில் எல்லாம் பார்க்கக் கூடாது. நேரில்தான்



நேரிடையாகத்தான்! ஆனால் ஒன்று மதுரா என் அண்ணனைப் பற்றி நானே பீற்றிக் கொள்ளக் கூடாது. இருந்தாலும் சொல்கிறேன். என் அண்ணன் ஒரு சூப்பர் கம்பீர பர்ஸனாலிட்டி. பார்த்தால் நீ அப்படியே அசந்து விடுவாய் அசந்து...!'' உதயா சொல்லியபோது தான் வாய் பிளக்கக் கேட்டது எல்லாம் மதுராவின் ஞாபகத்திற்கு வந்தது.

இப்போது அத்தை இப்படியொரு கல்யாண எண்ணத் துடன் இருப்பதை சொல்லியதும் அதை அதிர்ச்சியுடன் உணர்ந்தாலும், அந்த அதிர்வை விட முறைப் பையனை, அந்த அத்தான் எப்படி இருக்கக் கூடும்...? என்று பார்க்கும் ஆவலே நாளுக்கு நாள் அவளுள் அதிகரித்துக் கொண் டிருந்தது.

''இன்னும் பத்து நாட்கள்.. பத்து நாட்களேதான்... உன் முறை மணாளன் வரப் போகிறான்.. உன்னைப் பார்க்கப் போகிறான்.. டொட்ட.. டொய்ங்ங்ங்...'' என உதயாவும் கௌரியும் அடிக்கடி ரன்னிங் கமெண்ட்ரி வேறு கொடுத்து மதுராவை கேலி செய்து கொண்டிருந் தனர்.

அந்த நாளும் வந்தது. அத்தை பையன் கிரிதரன் உயர் படிப்பு முடிந்து வீடு திரும்பும் நாள். எல்லோரும் அவனை வரவேற்க ஒரு வேன் அமர்த்தி ரயில்வே நிலையத்திற்கே சென்று விட்டார்கள்.

மதுராவுக்கு அவளையறியாமல் ஒரு பரபரப்பு தொற்றிக் கொண்டாலும் உள்ளூர ஒருவித பயமாகவும் இருந்தது. ஆள் ஆளுக்கு அவளைக் கேட்காமலே அவளது எண்ணத்தை அறியும் முன்பே, 'உன் முறைப்

பையன். நீ கட்டிக் கொள்ள வேண்டியது தானே?' என கற்பனைக் கோட்டை கட்டி விட்டார்களே!

முதலில்.. கிரிதரன் யார்? அவன் எப்படி இருப்பான்? அவன் குணம் எப்படி? இதெல்லாம் அவளுக்குப் பிடிக்க வேண்டுமே! ஒருவேளை அவனைப் பார்த்த மாத்திரத்தி லேயே பிடிக்காமல் போய்விட்டால்.. என்ன செய்வது? இவர்களுக்காக சூழ்நிலைக்காக.. அவளால் அப்படி அவளைக் கட்டிக் கொள்ளத்தான் முடியுமா?

ரயில்வே நிலையத்தை அடைந்ததும் எல்லோரும் இறங்கி பரபரப்பாய் நடந்தனர். உதயாவும் கௌரியும் கூட அவளிடம் அதிகம் சளசளக்காமல் கேலி செய்யாமல் அண்ணனை பார்க்கும் வரவேற்கும் ஆவலை முகத்தில் தவழவிட்டபடி விரைந்து கொண்டிருந்தனர்.

அவர்களது பாசத்தை வியப்புடன் ரசித்த மதுரா கிரிதரனை பற்றி அவர்கள் சொல்லியதை எல்லாம் நினைத்துப் பார்த்தாள். 'நெடுநெடு உயரம் ஆளை மயக்கும் கம்பீர ஹாண்ட்சம்... பர்சனாலிட்டி...' என்ற வார்த்தைகள் அவள் காதுகளில் ரீங்காரமிட்டு அர்த் தத்தைத் தேடியது.

ஒரு வழியாய் பத்து நிமிட காத்திருப்பிற்குப் பின் இதோ.. ட்ரெய்ன் வந்து விட்டது.. பெரியவர்களும் வாண்டுகளுமாய் ஆள் ஆளுக்கு கிரிதரனின் கோச்சை கண்டு பிடித்து பெட்டியில் ஏற ஆரம்பிக்க.. மதுரா புதியதாய் வெட்கம் கொண்டவள் போல நாணிக் கோணி ஒரு ஓரமாய்த்தான் நின்று கொண்டிருந்தாள்.

அன்று பார்த்து உதயா பிடிவாதமாய் அவள் எடுத்துக் கொடுத்திருந்த பச்சை நிற சுடிதார் ஒன்றை அவளே அழகு பார்த்து மதுராவை அணியச் செய்திருந்தாள்.



'முதன் முதலில் அண்ணனைப் பார்க்கப் போகிறாய்.. ஒரே வீச்சில் ஆளை வீழ்த்த வேண்டாம்..?' என்றபடி கொஞ்சம் பேஸ் க்ரீம்களை தடவி, முடி ஸ்டைலை கொஞ்சம் மாற்றி அவளை அலங்காரப் படுத்தியவள், "இப்போதுதான் தேவதை போல் ஜொலிக்கிறாய்..! நீ நிமிர்ந்து லேசாய் உன் மைவிழிக் கண்களை விரித்து ஒரு பார்வை பார்த்தாலே போதும். அண்ணன் அம்பேல்தான்... ரதி தேவி போன்றான உன்னுடைய மன்மத பாணங்களில் அப்படியே நொறுங்கி விடுவான் நொறுங்கி...!" என்றதும், 'ச்சீ...' என்றபடி விலகி ஓடினாள் மதுரா.

இப்போது பெட்டியோரமாய் அழகுப் பதுமை போல் நின்று போஸ் கொடுத்துக் கொண்டிருப்பது அவளுக்கே ஒரு மாதிரியாய்த் தோன்ற.. இயல்பாகி அவளும் கூட்டத்தோடு கூட்டமாய் பெட்டியினுள் ஏறினாள்.

முகத்தில் புன்னகையொன்றை தவழ விட்டபடி இரண்டு மூன்று அடி நடந்தபோது வாண்டுகள் மாமா.. மாமா என பஞ்சரிப்புடன் புடைசூழ அவன் வந்து கொண்டிருந்தான்.

நெடு நெடு உயரம்.. ஆளை ஊடுருவும் தீர்க்கமான பார்வை. சுருளான முடி தவழும் பரந்த நெற்றி. கூரான மூக்கு. முறுக்கி விடப்பட்டிருக்கும் அடர் மீசை, நடை உடை பாவனையில் ஒருவித அசாத்திய வேகம். முகத்தில் அந்த கம்பீரச் சிரிப்பு...

உதயா சொன்ன, 'ஹேண்ட்சம் பர்ஸனாலிட்டி..' இது தானோ? கிரிதரன் இவன்தானோ? என ஒரு கணம் தன்னை மீறி வியந்தவள் அப்படியே கண்களை அகல விரித்துப் பார்க்க... அவன் உற்சாகச் சிரிப்புடன் வாண்டு

கள் படைசூழ வந்தவன் டக்கென மதுரா பக்கம் நின்று அவனும் அவளை உறுத்துப் பார்த்தான்.

அவன் பேசாமலே புன்னகைக்க மதுரா பதிலுக்கு புன்னகைத்தவள், உதயாவும் கௌரியும் தன்னை கலாட்டா பண்ணி அறிமுகப்படுத்துவதை விட தானே.. அவனிடம் அறிமுகமாகி விடுவது சரியெனத் தோண, ''நா.. நான்.. மதுரா.. உங்களது உங்களது... அத்தைப் பெண்..'' என சொல்ல வந்தவள்.. டக்கென வாய் குழறி'' உங்களது முறைப் பெண்...'' என்று சொல்லி முடித்தாள்.

அவன் பார்வையை உயர்த்தி வியப்பாய் கண்களை விரித்தவன், ''என்ன... எனது முறைப் பெண்ணா? அப்படியானால்.. என்னை.. கட்டிக் கொள்ளப் போகிற பெண்.. நீதானா?'' என் குரலை உயர்த்தவும் சட்டென முகம் சிவக்க குனிந்தாள் மதுரா.

அவள் குனிந்து வெட்கப்படுவதை ரசித்துப் பார்த்தவன், சட்டென பின்புறமாய்த் திரும்பி சொன்ன வார்த்தைகள்தான் மதுராவை அப்படியே தூக்கி வாரிப் போடச் செய்தது.

''கிரிதர், இங்கு.. பாரடா, ஒரு மிஸ். குயீன்.. நீ என என்னை நினைத்துக் கொண்டு என்னென்னமோ என்னிடம் பேசிக் கொண்டிருக்கிறது...'' என்றதும் தான் மின்னல் வெட்டியது போல் மதுரா நிமிர்ந்தாள்.

கிண்டலாய் பேசிய அவனுக்குப் பின்புறமாய் உதயாவையும் கௌரியையும் சிரித்து கேலி செய்தபடி உண்மையான கிரிதரன் வந்து கொண்டிருந்தான்!



# 10

மதுரா ஒருகணம் அதிர்ந்து விட்டாள். என்ன ஒரு மடத்தனம்! கிரிதரன். யார்.. என்று கூட உணராமல் யாரிடமோ போய் வலியப் பேசி வலிய வழிந்திருக்கிறாளே!

பின்புறமாய்ப் பார்த்தாள். சற்று மாநிறத்தில் அதே நெடு நெடு உயரத்தில் ஓரளவு கம்பீரத்துடன் அவன்! அவன்தான் உண்மையான கிரிதரனா?

அப்படித்தான் இருக்க வேண்டும். தங்கைகள் உதயாவும் கௌரியும் நச்சரிக்க வரும் அவனைக் கவனியாமல் யாரையோ கிரிதரன் என்று நினைத்து விட்டாளே!

என்ன ஒரு அவசரத்தனம்...! அதைவிட அந்த 'யாரோ'விடம் போய் முறைப் பெண் அது இதுவென உளறி வெட்கப்பட்டு வேறு தொலைத்திருக்கிறாளே!

யாரவன்? இப்படி திடுதிப்பென்று வந்து வழிந்த தன்னைப் பற்றி என்ன நினைப்பான் என்றெல்லாம் நினைப்பு ஓடியது.

ஒரு கணம் மதுராவின் நிலை சுந்தர காண்டத்தில் சீதாப்பிராட்டியாரைத் தேடி லங்காபுரியினுள் நுழைந்த அனுமாரின் நிலையை ஒத்திருந்தது.

'அனுமார் லங்காபுரியில் நுழைய முயன்றபோது பெரும் காவல் படை ஒன்று நகரை விழிப்புடன்

பாதுகாத்து வருவதை கவனித்தார். எப்படி நுழைவது என யோசித்தவர் வெகு சிறு உருவு கொண்டுதான் நுழைய வேண்டும் என்ற முடிவிற்கு வந்தார்.

அதனாலே ஈயினை நிகர்த்த மிகச் சிறிய உருவினை மேற்கொண்டு ஸ்ரீராமரை வந்தனை செய்து கொண்டே லாவகமாய் நகருக்குள் நுழைய ஆரம்பித்தார்.

ஆனால் இலங்கையின் நகர் வாயிலில் லங்கிணி என்ற அரக்கி எதிர்கொண்டு அனுமாரை வம்புக்கிழுத்தாள். என்னைக் கவனியாமல் செல்கிறாயா? நான் யாரென்று தெரியாதா? என்றெல்லாம் கர்ஜித்து சண்டைக்குத் தயாரானாள். அனுமார் அவளை துவம்சம் செய்தார்.

அதே போல் தான் மதுரா கிரிதரனை சந்திக்க நினைத்த இடத்தில் சம்பந்தமே இல்லாமல் இன்னொருவன் வந்து அவளை வம்பிக்கிழுத்து.. கிண்டல் செய்து.. ஒரே நிமிடத்தில் அவளைக் கேலிப் பொருளாகவும் அல்லவா ஆக்கி விட்டான்.

யாரவன்? என சினமாய் நினைத்தவள் பெரியப்பாவின் சிறு வாண்டுகள் சகஜமாய் அவனுடன் பேசி விளையாடுவதைப் பார்த்து... அவன் அத்தை, பெரியப்பா குடும்பத்திற்கு நன்கு அறிமுகமானவனாய்த்தான் இருக்க வேண்டும் என்ற முடிவிற்கு வந்தாள்.

சட்டென ஏற்பட்ட அதிர்ச்சியில் அவள் அப்படியே திகைத்து ஸ்தம்பித்து நிற்பதை வெகுவாய் ரசித்த அவன் விடாது, ''அட.. அழகுப் பதுமை என்றுதான் நினைத்தேன். கற்சிலை போல் 'போஸ்' எல்லாம் கொடுக்கிறதே. அப்படியே.. ஒரு நாட்டிய அபிநயம் ஒன்றைப் பிடித்தால் மியூசியத்திலோ... கோயில் சிற்பங்களுடனோ தூக்கிப்



போய் நிறுத்தி விடலாம்...?'' என அடக்க முடியாத சிரிப்புடன் கேலியைத் தொடர சினமாய் முறைத்தாள் அவள்.

''மி.. மிஸ்டர்.. நீ.. நீ.. நீங்கள்.. நீங்கள் யார்?'' வெகுண்டு போயிருந்தாலும் திக்கித் திணறியே பதட்டமாய் அவளில் இருந்து வார்த்தைகள் வெளிப்பட்டது.

அவனோ.. அவள் கோபத்தை கொஞ்சமும் பொருட்படுத்தாமல் அவளைக் கேலி செய்வதில் சுவாரஸ்யமானான்.

''அட.. அதற்குள்.. அது.. உங்களுக்கே மறந்து போயிற்றா? நீங்கள் தானே.. சொன்னது.. நான் உங்கள் முறைப் பையன் என்று! எங்கே என்னைக் கொஞ்சம் நன்கு பாருங்கள். நான் எப்படி உங்களுக்கு பிடித்தவனாய்.. மனசுக்கு ஏற்பவனாய் இருக்கிறேனா என்று?'' சொல்லியபடி தன் தலையைச் சிலுப்பிக் கொண்டு ஒரு ஸ்டைல் பார்வை அவளைப் பார்க்க மிகவும் எரிச்சல் கொண்டவளாய் பற்களைக் கடித்தாள் மதுரா.

அதற்குள் உதயாவும் கௌரியும் கிரிதரனோடு வந்தவர்கள் 'அட இங்கு என்ன கூத்து நடக்கிறது?' என வியக்க ஆரம்பிக்க அவன் அவர்களிடமும் போட்டுக் கொடுப்பது போல் விவரிக்க ஆரம்பித்து விட்டான்.

''கூத்துதான். முறை மாமன் கூத்து!'' என்றபடி திரும்பவும் ஆரம்பிக்க காதுகளை பொத்திக் கொண்டாள் மதுரா.

அதற்குள் கௌரி சிரிப்புடன் மதுரா பக்கத்தில் ஓடி வந்தவள் ''அட.. அவசரத்தைப் பாரேன். நான் தான்

பையன் இவன்தான். நீங்கள் முறைக்க வேண்டியது இவனைத்தான்..!''

கைவிரலால் கிரிதரனை சுற்றிக் காட்டியபடி மறுபடியும் சிரிக்க ஆரம்பிக்க, அடடா.. யாரிவன்? இப்படி விழி பிதுங்குமளவுக்கு ரவுண்டு கட்டி அடிக்கிறானே என மதுரா தவிக்க அவள் நிலையை அறிந்தவள் போல் உதவிக்கு வந்தாள் உதயா.

''ஐயோ...! போதும் அண்ணா.. போதும்! உங்கள் கிண்டல்களுக்கெல்லாம் மதுரா தாங்க மாட்டாள்! அவள் கிராமத்துக்காரி. நாங்களே இப்போதுதான் கஷ்டப்பட்டு அவளுக்கு பட்டணத்து விஷயங்களை நடைமுறைகளைக் கற்றுக் கொடுத்து வருகிறோம்.

நீ... அதை தடுத்து அவளைக் குழப்பி விடாதே..!'' என சிரிப்பை அடக்க முடியாமல் சொன்னாள் உதயா.

# 11

அன்றைய இரவு முழுவதும் மதுராவின் மனதை தூங்க விடாதபடி அவன் அந்த திமிர்க்காரன் ஆக்கிரமித்துக் கொண்டான் என்றுதான் சொல்ல வேண்டும்.

என்ன ஒரு ஆணவம். திமிர் அவனுக்கு! கொஞ்சம் விட்டால்.. அவளைக் கேலி செய்தே அழ வைத்து விடுவான் போலிருந்ததே!

விடாமல் சுற்றி வந்து.. அவள் திக்கித் திணறுவதை ரசித்துப் பார்த்தானே!



அவளும் யோசித்து யோசித்துப் பார்த்தாள். சரியான பதிலடியாய் ஏதாவது சொல்லி நாலு வாங்கு வாங்கலாமே என்று நினைத்தாள். ஆனால் கடைசி வரை பதிலடி கொடுக்க அவளுக்கு வார்த்தைகள் அகப்படவில்லை!

தப்பித்து விட்டான்.

அதற்குப் பின் கிரிதரனை தடபுடலாய் வீட்டுக்கு அழைத்து வந்தது, கிரிதரனின் பெரிய மேனேஜ்மெண்ட் படிப்பு பற்றி, அவன் அந்த யூனிவர்ஸிட்டி தேர்வில் தங்க மெடல் வாங்கியிருப்பது பற்றியெல்லாம் ஆள் ஆளுக்கு பேசி சிலாகித்துக் கொண்டிருந்தார்கள்.

அவை யாவும் எதுவும் மதுராவின் காதுகளில் ஏறவில்லை. அவளது கவனம் முழுவதும் அந்த திமிர்க்காரனிடமே இருந்தது. யார்.. அவன்..? கிரிதரனுக்கும் அவனுக்கும் என்ன உறவு? என்றே யோசித்தவள் கொஞ்ச நேரத்தில் அதைக் கண்டு பிடித்தாள்.

அவன் கிரிதரனின் உற்ற உயிர் நண்பன் எனவும் ஆறு மாத கால தமிழ் பி.ஹெச்.டி. படிப்பு ஆய்வு சம்பந்தமாக சென்னை வந்திருப்பதாகவும் கிரிதரனுடன்தான் அவன் வீட்டில் தங்கியிருக்கப் போவதாகவும் 'சளசளத்த' உதயா கௌரியின் பேச்சுக்கள் மூலம் புரிந்து கொண்டாள்.

இனி.. மாமா வீட்டில் தங்களுடனே அவனும் தங்கப் போகிறானா? என்பது பயமாய் எழுந்தாலும், 'இனி பயம் தேவையில்லை. மோதினால் ஒரு கை பார்த்து விடுவோம்..' என்ற தைரியமும் எழுந்தது.

யாரென்று தெரிந்தாயிற்று.. அவன் பெயர் என்னவாக இருக்கக் கூடும்? என அடுத்து அவள் சிந்தனை ஓடிற்று காதுகளை மறுபடி தீட்டி பேச்சுகளை கவனித்தாள்.

எல்லோரும், 'அண்ணா... அண்ணா...' எனக் கூறி சிலாகித்துக் கொண்டிருந்தார்களே தவிர.. யாரும் அவன் பெயர் சொல்லி அழைக்கக் காணும்.

என்ன.. பெயரே இல்லாமல் ஒருவன் இருப்பானா? மிஞ்சிப் போனால்... ராம்ஸ், ரவி, மகேஷ், முகேஷ், அபி, ரிஷி என ஸ்டைலாய் எதாவது பெயரைத் தான் இவனைப் போன்ற ஆட்கள் வைத்துத் தொலைத்திருப்பார்கள் எனவும் கொதிப்பாக நினைப்பு ஓடியது.

ஆனாலும் மனதில் விடாது அவன் பெயர் என்னவாக இருக்கக்கூடும்...? என்ற சிந்தனையே கேள்வியாய் மாறி மாறி துளைத்தபோது எரிச்சலாகவும் உணர்ந்தாள்.

அவன் பெயர் என்னவாய் இருந்தால் நமக்கென்ன? என நினைப்பில் அவளால் ஒதுக்கவும் முடியவில்லை. அதே நேரம்.. அவனது பெயரைப் பற்றியே நினைத்துக் கொண் டிருக்கிறோமே... அப்படி என்ன.. பெரிய.. மனிதனா இல்லை தேவேந்திரனா.. அவன்..? அட.. சட்... என்ன இது...?''

மற்றொரு நினைப்பு சினமாய் தோன்றி அழுத்திய போதுதான் அவள் காதுகளில் பெரியம்மாவின் அந்த வார்த்தைகள் ஒலித்தது.

''தேவேந்திரன்.. எப்படி இருக்கிறாயப்பா? உன்னைப் பார்த்து வெகு நாட்களாயிற்றே?''

பெரியம்மாவின் குரலும் தேவேந்திரன் என்ற பெயரும் பொட்டிலடித்த மாதிரி இருக்க.. துள்ளியவளாய் திரும்பிப் பார்த்தாள்.

பெரியம்மாள்.. அவனை.. அந்த திமிர்க்காரனைத்தான் வாஞ்சையாய், 'தேவேந்திரன்..' என வாய் நிறைய அழைத்துக் கொண்டு...?



அட.. ஒரு பேச்சுக்குத்தான். இவன் என்ன பெரிய தேவேந்திரனா? என்று நினைத்தாள். ஆனால் இப்போது நிஜமாக.. நிஜமாகவே.. இவனது பெயர் தேவேந்திரன் தேவேந்திரன்தானா?'

அவள் வியக்க.. எல்லோரும் 'தேவேந்திரன்' என விளித்துப் பேசியது உரைத்தது. இவனுக்குப் போய் தேவேந்திரன் என்ற அழகான பெயரா? கொடுமைடா.. சாமி! எனவும் சலித்தாள்.

அன்று மாலையே அவனும் அவனாகவே வந்து தன்னை அறிமுகப்படுத்தும் சாக்கில், ''ஹலோ.. மதுரா என் பெயரையும் தெரிந்து கொள். என் பெயர் தேவேந்திரன். தேவர்களுக்கெல்லாம் அதிபதி...'' என கொக்கரிப்பு வார்த்தைகளை வீச, அவளும் பதிலடியாய், ''அதிபதி தான்... ஆனால் தேவர்களுக்கு அல்ல.. அரக்கர்களான அசுரர்களுக்கு...'' சொல்லி அவனைப் போலவே ஒரு கேலிச் சிரிப்பு சிரித்து விட்டு அகன்றிருந்தாள்.

இவன்.. யாரோ.. கொஞ்ச நாள் வந்து தங்கி விட்டுச் செல்கிறவன்.. இவனது பேச்சுக்களுக்கெல்லாம் அலட்டிக் கொள்ளக்கூடாது என முடிவும் எடுத்திருந்தாள்.

ஆனால் அவள் நினைத்தாலும் அவளையறியாமல் அவனைப் பற்றிய எண்ணமே அவளைப் பிடித்து விரட்டிக் கொண்டிருந்தது. வீட்டினுள் எங்கு சென்றாலும் எந்தப் பகுதியில் நடந்தாலும் அவன் அங்கு தென்படு கிறானா.. இல்லையா என்பதை உறுதிப்படுத்தி விட்டுத் தான் சென்றாள்.

மெல்லும் வாயினுள் அவலை இடித்துக் கொடுத்தாற் போல் வீணாய் அவனிடம் அகப்பட்டு தவிக்க வேண் டாம் என்றே விலகி நடந்தாள் மதுரா.

இதில் பெரிய வேடிக்கையாய் அவள் தேவேந்திரனைப் பற்றி சினமாய் நினைத்துக் கொண்டிருந்ததாலே.. கிரிதரனைப் பற்றி அவள் நினைக்கவோ.. ஏன்.. அவனைக் கண்டு கொள்ளவில்லை என்று கூட கூறலாம்.

அதனாலே கிரிதரன் எத்தனையோ முறை அவளிடம் வந்து பேசிய போதும் சுவாரஸ்யமில்லாமல் அசட்டையாகவே பதில் சொன்னாள்.

கிரிதரன் தன்னைப் பற்றி, தனது மேனேஜ்மெண்ட் படிப்பு பற்றி, தான் விரைவில் சொந்தமாய் ஆரம்பிக்க இருக்கும் கன்ஸல்டன்ஸி பற்றியெல்லாம் விளக்கமாய் விரிவாய் அவளிடம் பேசியபோது எதுவுமே உரைக்கவில்லை. அவள் மண்டையில் எதுவும் ஏறவில்லை.

ஆனால் அதே போல் தேவேந்திரன் அவளிடம் வந்து தான் சங்க காலப் பெண்களின் குணநலன்கள் பற்றிய ஆய்வில் இருப்பதாய்ச் சொன்னபோது அவளையறியாமல் ஆவல் ஏற்பட்டது. அதனாலே, சங்க கால மன்னர் பராக்கிரம பாண்டியர் தேவேந்திரனுக்கு தேவையான சரியான ஆராய்ச்சிதான்!' என கிண்டலடிக்கவும் முடிந்தது.

அவள் மதுரா முதன் முதலாய் சொட்டென தலையில் குட்டு விழுந்தாற்போல் உணர்ந்தது உதயாவும் கௌரியும் அந்தக் கேள்வியைக் கேட்ட போதுதான்!

''என்ன மதுரா, அத்தான் கிரிதரைப் பார்த்தாயா? உனக்குப் பிடித்திருக்கிறதா?'' என்றதும் தான் அவள் தலையில் மின்னல் வெட்டி உண்மை உரைத்தது.

அடாடா... மறந்தே போயிற்றோமே..? இவர்கள் எல்லோரும் கிரிதரனை, அத்தான்.. முறைப் பையன்



என்றெல்லாம் சொல்லி.. நமக்குக் கட்டி வைக்கும் கனவில் அல்லவா இருக்கிறார்கள்? என்பதை இம்முறை திகைப்பாய் திடுக்கிடலாய் உணர்ந்தாள் மதுரா.

# 12

மதுரா, அத்தை செண்பகம் கேட்டு விடக் கூடாதே என அத்தையிடம் தனியே பேசுவதை, சிக்குவதை தவிர்த்து வந்தவள் இன்று கிரிதரனிடமே வசமாய் மாட்டிக் கொண்டாள்.

அப்படி இப்படி என சுற்றி வளைக்காமல் நேரிடையாகவே கேட்டு விட்டான் கிரிதரன்.

அகன்ற விழிகள் மேலும் அகல ஒரு கணம் சிலையாகித்தான் போனாள்.

அவள் சட்டென அப்படி உறைந்து நின்றது கிரிதரனுக்கே திகைப்பை ஏற்படுத்தியிருக்கக் கூடும்.

''நான் கேட்டது ஒன்றும் தப்பில்லையே...'' என்றவன், ''நான் இப்படித் திடீரென உன்னிடம் கேட்பதற்கு காரணமுமிருக்கிறது. வீட்டில் அவர்கள் பாட்டுக்கு... உன்னையும் என்னையும் இணைத்து.. முறைப்பையன் அத்தை மகள் என்றெல்லாம் முடிச்சுப் போட்டு வருகிறார்கள். அது பற்றி நீ என்ன நினைக்கிறாய்? உன் அபிப்பிராயம் என்ன? அதைச் சொல்லு... முதலில்..'' என்றான்.

இம்முறைதான் மதுராவுக்கு பயம் விலகி மூச்சே வந்தது. நல்லவேளை. காதல் அது இதுவென தத்துப்

பித்தாய் உளறாமல் மிகத் தெளிவாய் நாசூக்காய் கேட்கிறான். அவன் எண்ணத்தை விட நம் எண்ணத்தை அறிய ஆவலாய் இருக்கிறான். இதுவும் ஒரு வகைக்கு நல்லதுக்குத்தான். தப்பித்துக் கொள்ளலாம்தான்.

ஓரிரு நிமிடம் யோசித்தவள் சட்டென, ''எனக்கு ஒன்றும் தோன்றவில்லை. நான் எந்த முடிவும் எடுக்க வில்லை..'' என்றாள் அவசரமாக.

சொல்லியபடி அவன் முகத்தை உன்னிப்பாய்ப் பார்க்க அவள் ஆச்சரியப்படும்படி முகம் மலர்ந்தான் கிரிதரன்.

''வெரிகுட்!.. வெரிகுட்..!'' திரும்பத் திரும்ப சொல் லியபடி உற்சாகமானான் அவன்.

''மதுரா, உன் முடிவு சரி. மிகச் சரியாகச் சொல்லி இருக்கிறாய்.. உன்னைப் போல்தான் நானும். இந்த விஷயம் பற்றி இப்போது எந்த முடிவும் நான் எடுக்க வில்லை. எடுக்கும் நிலையிலும் இல்லை.''

அவன் சொல்வது புரியாமல் மதுரா தலை சாய்த்துப் பார்க்க விளக்க ஆரம்பித்தான் கிரிதரன்.

''அதாவது மதுரா நான் இப்போதுதான் இந்த உயர் மேனேஜ்மெண்ட் படிப்பு முடித்து விட்டு கன்ஸல்டன்ஸி தொடங்க இருக்கிறேன். ஒரு இரண்டு வருடத்திற்கு என் கவனம் முழுவதையும் அதில் செலுத்தி.. கன்ஸல்டன்ஸி தொழிலில் வெற்றி பெறுவதுதான் என் லட்சியம். அப்படிச் செய்தால்தான் நான் படித்த படிப்பிற்கு, ஏதோ கொஞ்சம் சாதித்த மன அமைதியாவது கிடைக்கும். அதனால் இந்த பேச்சுக்களை ஒரு இரண்டு வருடத்திற்கு அட்லீஸ்ட் ஒரு வருடத்திற்காகவாது தள்ளிப் போடலாம் என நினைக்கிறேன்...''



அப்பாடி! என உள்ளுக்குள் நிம்மதி மூச்சு விட்டவள், ''எனக்கும் அப்படி ஒரு எண்ணம்தான். எனது முடிவும் அதுதான்...!'' என்றாள் மீண்டும் அதே அவசரத்துடன்.

அவள் சொன்னதை பெரும் நம்ப முடியாத ஆச்சரியத் துடன் உற்றுப் பார்த்தான் கிரிதரன்.

அவளும் முதன் முறையாய் கண்களை அகல விரித்து அவனை நன்கு பார்த்தாள்.

நெடு நெடு உயரத்தில்.. வாட்ட சாட்டமாய்.. சுறுசுறுப் பாய்த்தான் தெரிந்தான் கிரிதரன். ஆனால் முகத்தில் ஒருவித கம்பீரம்... ஆளை மயக்கும் வசீகரச் சிரிப்பு.. இல்லாதது.. அவனை மதுராவுக்கு சாதாரணமானவ னாகவே காட்டியது.

மேலும் இந்த இரண்டும் அதாவது முகத்தில் கம்பீர மும் உதட்டில் வசீகரச் சிரிப்பும் அந்த தேவேந்திரனிடம் இருக்கிறதே! அந்த திமிர்க்காரன் இடக்காய் பேசினாலும் அவன் பார்க்கும் ஒரு சாதாரணப் பார்வை கூட குறுகுறுப் பாய் அவள் உள்ளத்தை துளைக்கிறதே..!

அட... சட்.. என்ன இது... அவனையே நினைத்துக் கொண்டு? என அவள் எரிச்சலாக.. முன்னால் நின்று கொண்டிருந்த கிரிதரனோ அவள் மனம் போன போக்கை உணராமல், அவள் இப்படி அழகாய் கண் விரித்து நம்மையே பார்க்கிறாளே...? என குளிரத்தான் செய்தான்.

அதனால் கொஞ்சம் குறுகுறுப்பாய் உணர்ந்தவன், ''என்ன மதுரா என்னை அப்படியொரு பார்வை பார்க் கிறாய்?'' என்றான்.

அப்போதுதான் மதுரா நினைவில் தேவேந்திரனை நினைத்துக் கொண்டு... பார்வையால் கிரிதரனை

வெறித்துக் கொண்டு இருக்கும் தன் நிலையை உணர்ந்து அவசரமாய் தலை தாழ்த்தினாள்.

கிரிதரனோ அதை அவள் ஆசையாய் பார்த்து வெட்கப்படுவது போல் நினைத்துக் கொண்டான்.

''மதுரா.. நீ.. மனதில் வேறு எதுவும் நினைக்கிறாயா?'' என்றான் அதே ஆர்வத்துடன்.

''அப்படியெல்லாம் ஒன்றுமில்லை...'' என்றவள் கிரிதரன் தன்னை வேறு மாதிரியாக உணர்வதை உணர்ந்து திடுக்கிட்டு அவசரமாய் பேச்சை மாற்ற நினைத்தவள் அதே வேகத்தில்,

''உங்கள் நண்பர் தேவேந்திரன்...'' என சட்டென ஆரம்பித்து விட்டாள்.

''ஆமாம்... எனது.. டியர் ப்ரெண்ட். அவனுக்கென்ன...?'' என கிரிதரன் சுவாரஸ்யமானதும் அவளுக்கு ஒரு கணம் என்ன பேச... அடுத்து என்ன சொல்ல எனத் திணறியவள், வார்த்தைகளை முடிக்கும் விதமாக,

''அவர் ஏதோ தமிழ் படிப்பு.. சங்க கால ஆராய்ச்சி என்றெல்லாம் சொன்னார்...'' என சமாளித்து முடிக்கவும் செய்தாள்.

''ஓ.. அதுவா..? மதுரா அவன் தமிழில் டாக்டர் பட்டம் பெற ஆராய்ச்சி ஒன்றை மேற்கொண்டிருக்கிறான். அது.. சங்க கால நடைமுறைகள்.. பழக்க வழக்கங்கள்.. பற்றியது..'' எனச் சொல்லி வந்த கிரிதரன் சட்டென நிறுத்தி, ''ஆமாம்... உனக்கு தமிழில் ஆர்வம் உண்டா மதுரா?'' என்றான்.

மதுரா ஒரேடியாய் பேச்சை மாற்றும் மனநிலையில் இருந்தவள், அதே எண்ணத்தில், ''எனக்கு தமிழில் படிக்கும் ஆர்வம்.. பட்டம் வாங்கும் ஆர்வம் எல்லாம் இருந்தது. ஆனால்.. அது குடும்பச் சூழ்நிலை காரணமாக முடியாமலே போயிற்று...'' என்றாள் சலிப்புக் குரலில்.



அவன் அத்தோடு பேச்சை விடுவான் என பார்த்தால் நேர் மாறாய் சுறுசுறுப்பாகி விட்டான் கிரிதரன்.

''ஓ.. மதுரா உனக்கு மனதில் அப்படியொரு குறைபாடு இருக்கிறதா? அதைக் கூட ஈஸியாய் நிவர்த்தி செய்து விடலாம்... நிறைவேற்றி விடலாம்...''

புரியாமல் விழித்தாள் மதுரா.

''புரியவில்லையா... மதுரா? உனக்கு நீ விரும்புகிறபடி தமிழில் படிக்கலாம். டிகிரி பட்டம் கூட எளிதில் பாஸாகி வாங்கி விடலாம்.''

அவள் இன்னமும் திகைப்பு விலகாமல் பார்க்க நிதானமாய் விளக்கினான் கிரிதரன்.

''மதுரா. நீ.. அஞ்சல் வழி முறையில் ஏதாவது யூனிவர்சிட்டியில் சேர்ந்து விடலாம். நேரிடையாய் பி.ஏ. தமிழ் படிப்பு படிக்கலாம். டிகிரியும் வாங்கி விடலாம். மேலும் உனக்கு அப்படி படிக்க வழிகாட்டவும், படிப்பைச் சொல்லித் தரவும் சரியான ஆள் ஒருவர் கைவசம் இருக்கிறார்...''

அவன் சொல்வதைக் கேட்டு படபடக்கும் விழிகளோடு நிமிர்ந்தவள், ''அப்படியா... யார் அது?'' என்றாள் ஆச்சரியமாய்.

''வேறு யார்? எனது நண்பன் தேவேந்திரன்தான்! தமிழில் எம்.ஏ. பட்டம் வேறு வாங்கியிருக்கிறான். உனக்கு சரியான வழிகாட்டி அவன்தான்...''

கிரிதரன் அவன் பாட்டுக்கு சொல்லிக் கொண்டு போக.. அவலை நினைத்து உரலை இடித்த கதையாய்.. எதையோ விளையாட்டாய் பேசப் போய் பேச்சு எதிலோ வந்து நின்று விட்டதே.. என திகைத்தாள் மதுரா.

அதிலும் படித்து டிகிரி வாங்க வேண்டுமென அவள் அலைவது போலவும், அவளுக்கு அளவு கடந்த தமிழ் ஆர்வம் உள்ளது போலவும் எல்லாவற்றுக்கும் மேலாய் அந்த கிண்டல்காரன் கேலிக்காரன் தேவேந்திரனிடம் அவள் மாணவி போல் படிக்க அல்லவா கிரிதரன் ஏற்பாடுகளைச் செய்து விட்டான்?

இவனிடம் எப்படிச் சொல்வது? என்ன செய்து இதை தடுப்பது? என யோசித்தவள் அப்போதைக்கு அவனிடமிருந்து தப்பித்தால் மட்டும் போதும் என்ற எண்ணத்தில் தலையை மட்டும் ஆட்டினாள். விடைபெற்று உள்ளே ஓடி விட்டாள்.

ஆனால் அன்று இரவு அத்தை அவளைத் தேடி வந்து சலித்தபோது ஓரளவு முழு விஷயமும் அவளுக்கு புரிந்தது. ''நீயே சொல் மதுரா. நல்ல நாளும் அதுவுமாய்ப் பார்த்து உனக்கும் கிரிதருக்கும் ஒரு முடிச்சுப் போட்டு விடலாம் என்று பார்த்தால் பெரிதாய்... கன்ஸல்டன்சி எனவும் லட்சியம் எனவும் ஏதேதோ... பிதற்றுகிறான். ஒரு வருடம் போகட்டும் என்கிறான் பிடிவாதமாய்.. நான் என்ன செய்யட்டும்...?'' என்றபோது பெரும் நிம்மதியே ஏற்பட்டது. மதுராவுக்கு.

பரவாயில்லை. கிரிதரன் தன் வேலையை ரொம்பவும் சுலபமாக்கி விட்டான் என்றே மகிழ்ந்தாள். ஆனால் அடுத்து செண்பகம் சொன்ன வார்த்தைதான் அவளைத் தூக்கி வாரிப் போடச் செய்தது.



''அவன் மட்டும் என்ன.. நீயும் கூட ஏதோ ஒரு லட்சியம் வைத்திருப்பதாய் அல்லவா சொன்னான்?''

''நானா..? லட்சியமா?''

அவள் வியக்க அத்தையோ, ''அதான்.. ஏதோ.. தமிழ் படிப்பு படிக்க வேண்டும். டிகிரி வாங்க வேண்டும் என்று.. சொன்னாயாமே..?'' என்று எடுத்துக் கொடுத்ததும், ''சரிதான் அத்தையிடம் தப்பிக்க இதுவும் ஒரு வழி தான்!'' என எண்ணிக் கொண்டவள் பலமாய் தலையசைத்து ஆமோதிக்கவும் செய்தாள்.

தந்தை சதாசிவம்தான் இதை புதியதாய் கேள்விப்பட்டு, ''என்னம்மா.. உனக்கு தமிழில் இவ்வளவு ஆர்வம் உண்டா? என்னிடம் சொல்லவே இல்லையே..!'' என வியக்கவும் செய்தார்.

அதைவிட உதயாவும் கௌரியும் அவளுக்காக இன்னொரு ஏற்பாட்டைச் செய்து அவளை ஏறக்குறைய திகைக்கவே வைத்திருந்தனர்.

அவள் டிகிரி வாங்கினால் மட்டும் போதாதாம். ஏதாவது தொழிலை.. அலுவலக வேலையைத் தெரிந்து கொள்ள வேண்டுமாம். அதுதான் அவளது வாழ்க்கைக்கு உபயோகமாய் 'சோறு' போடுவதாய் இருக்குமாம்.

அப்படி மதுராவுக்கு எதிர்காலத்தில் சோறு போடுவதற்கு அவர்கள் தேர்ந்தெடுத்திருந்தது கிரிதரன் ஆரம்பிக்கும் கன்ஸல்டன்சியில் உதவியாளினியாக இருக்கும் வேலை!

ஆக... அவளுக்கு தினம் காலை கிரிதரனுடன் அலுவலக மேனேஜ்மெண்ட் வேலையைக் கற்றுக் கொள்வதிலும், மதியம் தேவேந்திரனிடம் டிகிரி வாங்குவ

தற்காக தமிழ் பாடங்கள் கற்றுக் கொள்வதற்கான டியூசன் எனவும் பக்காவாய் ஒரு டைம் டேபிள் ஒன்று அவளது ஒப்புதல் இல்லாமலே தயாரிக்கப்பட்டது.

அதை ஏற்றுக் கொள்வதா நிராகரிப்பதா என ஒரு நாள் முழுவதும் யோசித்தாள் மதுரா. வேறு வழியில்லை. கல்யாண பேச்சுகளில் கிரிதரனோடு தன்னை இணைத்துப் பேசும் ஏற்பாடுகளில் இருந்து தப்பிக்கவாவது அவள் இதை ஏற்றுக் கொண்டுதான் ஆக வேண்டும்!

உதயா கௌரியின் வினோத ஏற்பாட்டிற்கு பலியாடு போல் பவ்யமாய் தலையாட்டினாள் மதுரா.

# 13

அடுத்த வாரம் செமஸ்டர் லீவு முடிந்து விட்டதால் உதயாவும் கௌரியும் கல்லூரிக்கு கிளம்பத் தயாராகி விட்டனர். அப்பாவும் பெரியப்பாவும் காலை ஸ்நானம், சிற்றுண்டி முடித்து விட்டு பக்கத்திலிருக்கும் பெரிய சிவன் கோவிலுக்குச் சென்று விடுவர்.

இருவருக்கும் கிட்டத்தட்ட ஒரே வயது என்பதால் கோயில் பிரகாரத்தில் அமர்ந்து ஒரே பேச்சுதான். இறை உணர்வுடன் புராணக் கதைகளை பேசுவதிலே நேரம் கழிந்து விடும்.

'இறைவனின் சந்நிதானத்தில் இப்படி அமர்ந்து விட்டு வந்தால் எவ்வளவு நிம்மதி கிடைக்கிறது தெரியுமாம்மா?' என்பார் தந்தை மகிழ்வோடு. மதுராவுக்கும் கவலையின்



கோடுகள் தெரிய சோகமே உருவாய் இருந்த தந்தை இப்போது புது உணர்வுடன் இன்முகமாய் நடமாடுவது சந்தோஷத்தையே ஏற்படுத்தியது.

அத்தையும், பெரியம்மாவும் அவளை ஒன்றும் செய்ய விடாமல் சமையல் வேலை முழுவதும் பார்த்துக் கொள்வதால் மதுரா சமையல் கட்டுப் பக்கமும் போக முடியாது. காலை எழுந்ததும் என்ன வேலை செய்வது என்றுதான் வீட்டைச் சுற்றி வருவாள். நாற்காலி, சோபாக்களை துடைப்பது, ஜன்னல் திரைச் சீலைகளை துவைத்து அழகு படுத்துவது, ஒட்டடை அடித்து வீட்டுச் சுவர்களை சுத்தம் செய்வது என அவளாக தினம் ஏதாவது வேலையை இழுத்துப் போட்டுக் கொண்டு செய்ய வேண்டிய தாயிற்று. சளசளக்கும் உதயாவும் கௌரியும் கல்லூரிக்குச் சென்று விடுவதால் 'போர்' அடிப்பதை இப்படி வேலை செய்து விரட்டினாள்.

அப்படித்தான் அன்றும் மாலை பின்புற தோட்டத்துப் பக்கம் புது வண்ணச் செடிகளை பதியமிட்டு அவள் பார்வையிட்டுக் கொண்டிருக்க... பின்புறம் அந்தக் குரல் கேட்டது.

''எனது காந்தக் கண்கள் மருண்ட விழிக் கன்னியரின் உள்ளத்தை கசக்கி தமிழ் கற்கும் ஆசையை ஏற்படுத்தி விட்டது போலத் தெரிகிறதே...!'' மாயக் குரல் பேசி அங்கு தோன்றியிருந்தான் தேவேந்திரன்.

'அடா..டா.. இரண்டு நாள் இவனது தொல்லை இல்லை என்று பார்த்தோம்.. இன்று வந்து விட்டானே..' என்ற நினைப்புடன் நிமிர்ந்தாள்.

அதே முக... கம்பீரம். இதழ்களில் குறுநகையாய் ஒரு வித வசீகரச் சிரிப்பு. ஜீன்ஸும் டீ ஷர்ட்டும் போட்டு

கைகளைக் கட்டியபடி அவள் பக்கத்தில் வந்து நின்றான் தேவேந்திரன்.

இவனைப் பார்த்ததும் தன் முகம் ஏன் காணாததைக் கண்டதைப் போல் மலர்கிறது? என உள்ளூர திடுக்கிடவும் செய்தாள் அவள்.

அவள் விழிகள் மலர்த்தி தன்னையே பார்ப்பதை உணர்ந்தவன், ''என்ன அப்படிப் பார்க்கிறாய்? உனக்கு கற்றுக் கொடுக்கப் போகும் தமிழ் ஆசிரியர்.. தமிழ் ஐயா.. நான்.. தான்...! நான்.. நானேதான்...!'' என்றான் கேலி செய்வது போல்.

''எனக்கு அப்படி ஒன்றும் அவசியமில்லை...'' என்றாள் அவளும் உறுதிக் குரலில்.

''அவசியமில்லையா...? டிகிரி... வாங்குவதுதான் உன் லட்சியமாம். அதை வாங்கும் வரை நீ ஓய மாட்டாயாம். எல்லோரும் பேசிக் கொண்டார்களே?''

''எல்லோரும் பேசினார்கள். ஆனால் நான் பேசவில்லை.''

''அப்படியா?''

''அப்படித்தான்!''

அவள் அழுத்தமாய்ச் சொல்ல அவன் கைகளைத் தட்டினான்.

''சரிதான். நான் சந்தேகப்பட்டது சரிதான்.''

''என்ன சந்தேகப்பட்டீர்கள்?''

''நீ.. ஒரு.. பயந்தாங்கொள்ளி...''

''என்ன.. நானா? நானா பயந்தாங்கொள்ளி..?''



''ஆமாம். படிப்பதற்கு அஞ்சும் பயந்தாங்கொள்ளி. அதனாலே.. படிக்க.. ஒரு டிகிரிப் படிப்பு படிக்க பயப்படுகிறாய்... விலகி ஓடுகிறாய்...!''

''நான் ஒன்றும் பயப்படவில்லை...''

''அப்படியானால்.. படி! நாளை முதல் உனக்கு நான் கிளாஸ் எடுக்கிறேன். உன் திறமையைத்தான் பார்ப்போம்....''

''நான் ரெடி...!'' என்றாள் அவள் கம்பீரமாக. அவன் லாவகமாய் பேச்சில் வீழ்த்தி அவனிடமே பாடம் கற்றுக் கொள்ளும்படி செய்து விட்டதை உணராமல் சிரித்துக் கொண்டிருந்தாள் அவள்.

தேவேந்திரன் விஷயத்தில் இப்படி என்றால் கிரிதரனின் விஷயத்தில் நேர்மாறாய் இருந்தது. அத்தை செண்பகம்தான் மகனைக் கூப்பிட்டு, ''கிரிதர், நீ இவளுக்கும் உன் கன்ஸல்டன்ஸி வேலையைக் கற்றுக் கொடு'' என்றாள்.

தாய் சொன்னதும் ஒரு கணம் புரியாமல் அவளையும் மதுராவையும் தான் மாறி மாறிப் பார்த்தான் கிரிதரன்.

''என்னப்பா.. அப்படிப் பார்க்கிறாய்?''

''அம்மா.. நான் ஒன்று சொல்லட்டுமா?''

''சொல்லு...''

''மதுராவுக்கெல்லாம்.. ஏன்.. இந்த கணக்கு வழக்கு என்ற அலுவலகத் தொந்தரவு..? அவள் பாட்டுக்கு நிம்மதியாய் பாட்டுக் கேட்டு டி.வி. பார்த்து என ஜாலியாய் இருந்து விட்டுப் போகட்டுமே...''

கிரிதரன் சொன்னதை மதுரா அதிசயமாய்ப் பார்க்க, அதைவிட அத்தை சொன்ன பதில்தான் அவளைத் திகைப்பாக்கியது.

''அட.. கட்டிக் கொள்ளப் போகிறவள் என்றதும் கரிசனத்தைப் பாரேன்! இப்போதே இந்த வரத்து வரு கிறாயே... கல்யாணத்துக்குப் பின்னால் அவளைத் தங்கத் தட்டில் வைத்துத்தான் தாங்குவாய் போல...''

அத்தை சொன்னதற்கு அதை ஆமோதிப்பது போல் அசட்டுச் சிரிப்பு சிரித்தபடி கிரிதரன் 'போஸ்' கொடுத்துக் கொண்டிருப்பதைக் கண்டதும் மதுராவுக்கு பகீரென்று - தான் இருந்தது.

இந்தப் பேச்சை எப்படி மாற்ற என அவள் தவித்துக் கொண்டிருந்தபோது உதவிக்கு பெரியம்மா வந்தார்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

தற்செயலாய் அவர்கள் பேசுவதை காது கொடுத்து கேட்டவள், ''அட... செண்பகம், அவள் சொன்னால் சரிதான் என்று விட்டு விடுவதா? மதுரா ரொம்பவும் வெகுளியாய் இருக்கிறாள். அவள் நாலு இடத்திற்குப் போய் வர வேண்டும். நாலைந்து வேலைகளைத் தெரிந்து கொள்ள வேண்டும். பேசாமல் அவளை வேலை பழக அனுப்பு...!'' என்றாள் ஒரே போடாய்.

கிரிதரும் பதிலுக்கு, ''பெரியம்மா சொன்னால் சரிதான்...'' என பலமாய் தலையாட்ட, அத்தையோ விடாது, ''அங்கும் அலுவலகத்தில் நீ அவளுக்கு வேலையைக் கற்றுக் கொடுக்க வேண்டும். அதை விட்டு விட்டு அலங்கார பொம்மை போல் அவளைப் பக்கத்தில் உட்கார வைத்து ரசித்துக் கொண்டிருந்தால்... அவ் வளவுதான்.. உன் வேலையும் கெட்டு விடும்..'' எனவும் எல்லோரும் சிரித்தார்கள்.

மதுராவும் வழியில்லாது ஒரு அசட்டுச் சிரிப்பை உதிர்த்தபடி அங்கிருந்து அகன்றாள்.



# 14

கவியரசர் புகழேந்தி இயற்றிய நளவெண்பாவில் சுவாரஸ்யமான பகுதியொன்று உண்டு. நிடத நாட்டு வேந்தன் நளன் தீயூழினால் செல்வத்தை, உருவ ஒளியை, நலனை இழக்கிறான். தன் மனைவிக்கே இரண்டாவதாக திருமணத் தேர்வு நிகழவிருப்பதறிந்து அத்தேர்வில் பங்கு கொள்ள விரும்பிய இருதுபன்னனுக்கு தேரோட்டி யாய் வருகிறான்.

அந்நிலையில் அங்கு வந்தவன் தன் பிள்ளைகளை அங்கு பார்க்கும்படி அமைகிறது. எந்நிலையிலும் தன்னை வெளிக்காட்டிக் கொள்ளக் கூடாது என்பதில் உறுதியாக இருக்கும் நளன் தன் பிள்ளைகளைக் கண்டதும் உள்ளம் நெகிழ்ந்து, ''மக்காள்... நீர் என் மக்காள்....'' எனக் கூறி விடுகிறான். பின் சட்டென தன் தவறை உணர்ந்து, ''நீர்... என் மக்களைப் போல் இருக்கின்றீர். யார் நீங்கள்?'' என பேச்சு மாற்றி வினவுகிறான்.

அதற்கு அவர்களோ தேரோட்டியாய் வேலைக்காரன் போல் இருக்கும் இவனது மக்களைப் போலவா நாம் இருக்கிறோம்...? என உள்ளுக்குள் சினந்து, ''நாங்கள் இந்த மண்ணை ஆண்ட வாள் வேந்தன் மக்கள்...'' என பெருமையாய்க் கூறுகின்றனர். தேரோட்டி வேடத்தில் இருக்கும் நளனும் விடாது, ''உங்கள் நாட்டை இன் னொருவர் ஆள... நீங்கள் இருப்பது இழுக்கன்றோ?'' என கேள்வி எழுப்புகிறான்.

அதற்கு அவர்களோ கொதித்தெழுந்தவர்களாய், 'நெஞ்சாலும் இவ்வாறு மன்னர்கள் நினைக்காத கேள்வியை அஞ்சாமற் கேட்டனையே மடையா? எங்கள் தந்தையின் திருவடிகளில் மாற்று மன்னர் வந்து தலை வைத்து பணிந்தனரே... அது தெரியுமா?'' என சீறுகின்றனர்.

உடனே நளன் தன் தவறை உணர்ந்தவன் போல் தன் மக்களிடமே மன்னிப்பைக் கோருகிறான். ''மன்னர் பெருமை மடையருக்குத் தெரியுமோ? ஏதோ அறியாது கேட்டு விட்டேன்...'' என தலை குனிகிறான்.

நளன் எல்லாம் தெரிந்தும் தன்னை ஒன்றும் தெரியாத 'மடையன்' போல் காட்டிக் கொண்டான். அது போல்தான் மதுராவின் நிலையும் இருந்தது. கிரிதரனும் அத்தையும் பெரியம்மாவும் அவர்கள் பாட்டுக்கு அவள் திருமணத்தை தீர்மானித்தவர்களாய் பேசிக் கொண்டு போக அவள் அதை மறுக்க முடியாமல் மடத்தனமாய் கேட்டுக் கொண்டு தலை குனியத் தான் முடிந்தது.

சில நேரத்திற்கு யோசித்துப் பார்த்தாள் இவர்கள் பாட்டுக்கு இப்படியொரு ஆசையை வளர்க்கிறார்களே... என்று பயமாகவும் இருந்தது.

ஆனால் தேவேந்திரனைப் பார்த்தால் எல்லா பயமும் விலகி வாய்ச் சண்டைக்குத்தான் தயாராகி விடுவாள். அதற்கேற்றாற்போல் தினம் அவனும் எதாவது குசும்புடன் தான் பேச்சை ஆரம்பிப்பான்.

பதிலுக்கு சரியான பதிலடி கொடுக்கத் தயாராகவும் இருப்பாள்.

இப்படியே கிண்டல் கேலி பேச்சுகளில் கொடுக்கல் வாங்கலில் ஒரு வாரம் ஓடிவிட்டது. மதுராவுக்கு



அவளையறியாமலேயே தேவேந்திரன் பற்றிய நினைப்பு அடிக்கடி எழுந்தது.

* * *

உதயாவின் ஏற்பாட்டின்படி மறுவாரம் முதல் மதுராவுக்கு கிரிதரனின் கன்ஸல்டன்ஸியில் வேலைக்குப் போகும் படலம் ஆரம்பமாயிற்று.

தினம் காலை ஒன்பது மணிக்கு பைக்கை எடுத்துக் கொண்டு வேலைக்கு கிரிதரன் கிளம்பி விடுவான். வருகிறாயா? என்று கேட்டபடி முதல் நாள் அவளுக்காக காத்திருக்க, இது என்னடா வம்பு? என, ''நீங்கள் போங்கள் கிரிதரன். நான் பஸ்ஸிலே வந்து விடுகிறேன்'' என்று கூறி அனுப்பி வைத்தாள்.

அடுத்த நாள் முதல் அவன் தினம் அப்படி அழைப்பதை, அவனுடன் பைக்கின் பின்னால் செல்வதைத் தவிர்க்கவே காலையில் மெதுவாக வேலைகளைச் செய்து மெதுவாகவே கிளம்ப ஆரம்பித்தாள்.

கிரிதரனின் அலுவலகத்தில் இரண்டு மூன்று பெண்களும் உதவியாளர்களாய் பணிபுரிய அவளுக்கு ரொம்பவும் வசதியாய்ப் போயிற்று.

கிரிதரனே தவிர்த்து அவர்களுடனே இருந்து வேலையைக் கற்றுக் கொள்வது போல் நேரத்தை செலவழிக்க ஆரம்பித்தாள். எப்போதாவது யதேச்சையாய் கிரிதரனின் ரூமுக்கு போக வேண்டியது இருக்கும். அது போன்ற சமயங்களில் ஒன்றிரண்டு வார்த்தைகள் பேசி விட்டு வெளி வந்து விடுவாள்.

கிரிதரனும் வேலையில் பிஸியாக இருந்ததால் அவளைப் பற்றிய சிந்தனை இல்லாமல் வேலையில்

லயித்து விடுவான். எப்போதாவது நிமிர்ந்து அபூர்வமாய் பார்ப்பது போல் பார்ப்பான்.

இப்படித்தான், ''மதுரா, இந்தக் கிளிப் பச்சை நிற சேலை உனக்கு ரொம்பவும் அழகாய் இருக்கிறது..'' என்றான்.. ஒரு நாள் பற்கள் முழுவதையும் காட்டியபடி பதிலுக்கு வலுக்கட்டாய புன்னகையொன்றை உதிர விட்டு, ஒன்றும் பேசாமல் அகன்று விட்டாள் மதுரா.

'அடாடா! இவன் அழகை ரசிக்கும் அளவுக்கு நாம் உடுத்த ஆரம்பித்து விட்டோமோ..?' என நினைத்தவள் மறுநாள் முதல் அந்த கிளிப்பச்சை நிற சேலையை உடுத்துவதையே தவிர்த்து விட்டாள்!

காலை கன்ஸல்டன்ஸி கிளாஸ் கிரிதரனைப் பற்றிய பயத்துடனே செல்ல.. மதியம் நடக்கும் 'தமிழ்' வகுப்போ.. மதுராவினுள் சுவாரஸ்யம் கூட்டிவிடும்.

வீட்டு மாடிப் போர்ஷனில் பால்கனியை ஒட்டிய ரூம் ஒன்று தேவேந்திரன் அவளுக்கு தினம் தினம் வகுப்பு எடுப்பதற்காக ஒதுக்கப்பட்டிருந்தது.

மதியம் மூன்று மணிக்கு அவள் காத்திருக்க டாண்என கையில் கணத்த பைண்டு புத்தகங்களுடன் வேஷ்டியும் சட்டையுமாய் 'தமிழ் அய்யா'வாகவே தோன்றி விடுவான் தேவேந்திரன்!

''இது என்ன கோலம்..?'' என அவன் வேஷ்டி சட்டையைப் பார்த்து மதுரா கிண்டலாய் கேட்ட போதும், ''தமிழ் கற்றுக் கொடுக்க தமிழர் உடையிலே வருகிறேன்...'' என்பான்.

அவளுக்கு வகுப்பு எடுக்கும் ஒரு மணி நேரமும் தூய தமிழில் ஆங்கில கலப்பு சிறிதும் இல்லாமல் பேசுவதையே வழக்கமாய்க் கொண்டிருந்தான்.



அவனை ரசித்தது போலவே அவன் பாடம் எடுக்கும் கம்பீரத்தையும் ரசிக்க ஆரம்பித்தாள் மதுரா. தெளிவான தமிழ் உச்சரிப்பு, பேச்சிற்கு நடுவே இழையோடும் அதீத நகைச்சுவை, இயல்பான கிண்டல் என அவன் பாடம் நடத்தும்போது ஐந்து நிமிடத்திற்கு ஒருமுறை அவளால் உடல் குலுங்கும் சிரிப்பு சிரிக்காமல் இருக்க முடியாது. விழுந்து விழுந்து தான் சிரிப்பாள் மதுரா.

தேவேந்திரனின் குறும்புத்தனம் நகைச்சுவையுணர்வை தட்டியெழுப்பும் படியாகவே இருக்கும். அதனாலே அவள் எவ்வித மனநிலையில் வந்தாலும் தேவேந்திரன் பாடம் எடுக்க ஆரம்பித்த ஐந்தாவது நிமிடத்தில் கலகல வெனச் சிரிக்க ஆரம்பித்து விடுவாள்.

இப்படித்தான் ஒரு நாள் சங்க இலக்கியத்தில் சொல்லப்பட்டுள்ள சோழ மன்னன் கிள்ளி வளவனைப் பற்றி தேவேந்திரன் வர்ணித்தான்.

அவன் கிள்ளி வளவன் பெண்களை மயக்கும் அழகு கொண்டவனாம். விரிந்த முகமும், பரந்த நெற்றியும், கன்னியரை வீழ்த்தும் காந்தக் கண்களும், நீண்ட மூக்கும், அடர்ந்த முறுக்குண்ட மீசையும் உடையவனாம். அவனது இரண்டு கருங்குன்றங்களைத் தாங்கி நின்றாற் போல் இருக்கும் தோள்களையும், அவனது அடர்ந்த மயிர்களை யுடைய மார்பையும் கண்ட கன்னியர்கள் அப்படியே மதிமயங்கி தங்கள் முகத்தை அதில் புதைத்துக் கொள்ள தவிக்க ஆரம்பித்து விடுவார்களாம்.

அவன் புரவி மேல் ஏறி நகர் வலம் வருவது பார்ப்ப தற்கு அரிய கண் கொள்ளா காட்சியாம். அவன் கம்பீரமாய், கருவிழிகளில் மன்மதக் கணைகளை தாங்கியபடி வரும் காட்சி பார்க்கும் மருண்ட விழி மங்கையரின் உள்ளத்தை

எல்லாம் கொள்ளை கொண்டு அப்படியே கசக்கிப் பிழியுமாம். அந்தப் பெண்களின் உடம்பு நாளங்களை விண்ணென வீணையை மீட்டது போல சுண்டி அவர்களின் மனதை வெறி கொள்ள வைக்குமாம்.

அப்படி வெறி வந்து அவன் மேல் பிடித்துப் பிடிக்காத குறையாய் அவனை நோக்கி தலைவிரி கோலமாய் கன்னியர் அனைவரும் ஓடி வர ஆரம்பித்து விடுவார்களாம். என்னை.. ஏற்றுக்கொள்.. என்னை ஏற்றுக்கொள்.. என அவன் காலடியில் விழாத குறையாய் கெஞ்சுவார்களாம்.

அப்படி குழுமி தவிக்கும் அந்த கன்னியர் கூட்டத்தில் தனக்குப் பிடித்த, தன் மனதை கொள்ளை கொண்டு விட்ட அந்த மருண்ட மான் விழியாளை கிள்ளி வளவன் தேர்ந்தெடுப்பானாம்.

அப்படித் தேர்ந்தெடுத்து மற்ற கன்னியர் எல்லாம் வெம்பி வெப்ப மூச்சுகள் விட, தனக்குப் பிடித்தவளை புரவியில் இழுத்து உட்கார வைத்தபடி சிட்டாய் பறந்து விடுவானாம் கிள்ளி வளவன்!

தேவேந்திரன் இலக்கியத்தில் வரும் இக்காட்சியை சொல்லி முடித்து விட்டு இந்த சோழ மன்னனுக்கு கிள்ளி வளவன் என பெயர் வைத்திருக்கக் கூடாது. 'கள்ளி' வளவன் என வைத்திருக்க வேண்டும். பொருத்தமாக இருந்திருக்கும் என்றபோது மதுரா அடக்க முடியாமல் சிரிசிரியெனத்தான் சிரித்தாள்.

மேலும் அக்கால மகளிர் எப்படி இருந்தனர் என்பதை சுவைபட அவளுக்கு விளக்கவும் செய்தான். பவளம் போன்ற நிறமும், மான் போன்ற பார்வையும், கிளி போல



மழலைச் சொல்லையும் மென்மையான சாயலையும் கொண்டிருந்தனராம்.

அவர்களது கூந்தல் அழகைப் பற்றிச் சொல்ல வந்தவன் சிலப்பதிகாரத்தில் வரும் அழகிய வர்ணனை ஒன்றைச் சொல்லி விளக்கினான்.

கழுநீர் ஆம்பல், குவளை, தாமரை நீர்ப்பூக்கம், தாழையின் இதழ்கள், சண்பகக் காட்டில் உள்ள மலர்கள் முதலியவற்றை வண்டுகள் தேடிச் சென்று வாசத்தையும் மலர்களின் மகரந்தத்தையும் உண்ணுமாம். ஆயினும் அதில் திருப்தியடையாமல் அழகிய பருவ மங்கையரின் கூந்தலில் இருந்து வரும் இனிமையான மணத்திற்கு அவர்களைத் தேடி சாளரத் தென்றல் வழியாக வண்டுகள் ஓடி வருமாம். அத்தகைய சுகந்தமான கூந்தலாம் மங்கையருக்கு! என இலக்கியத்தில் சுவைபட வரும் வர்ணனைகளை நிகழ்ச்சிகளை எல்லாம் விரிவாய் விளக்கி அவளுக்கு பாடம் கற்பிப்பதில் சுவாரஸ்யத்தை கூட்டினான் தேவேந்திரன்.

மதுராவும் தான் கேட்டறியாத சங்க கால மன்னர்கள், மகளிர் பற்றிய வாழ்க்கை முறைகளை ஆர்வத்தோடு கேட்க ஆரம்பித்தாள்.

அப்படித்தான் ஒரு நாள் தேவேந்திரன் குறவஞ்சியில் வரும் காதல் பற்றிய அக்கால மகளிரின் நிலையை விளக்கினான்.

தலைவன் தலைவி இருவருக்கும் மனமொத்த காதல் ஏற்படுகிறது. பொருள் சேர்க்கும் பொருட்டு தலைவியைப் பிரிந்து செல்கிறான் தலைவன். வேனிற் காலத்தில் தவறாது வந்து விடுவேன் என உறுதிமொழி கொடுத்துச் செல்கிறான்.

அவள் பிரிந்து சென்றதும் அவனை நினைத்து ஆற்றாமையால் வருந்துகிறாள் தலைவி. அவள் அப்படி வருந்துவதைக் கண்ட தோழி, இனிய தலைவியே துயரத்தை விடு, அசோக மரங்களில் எல்லாம் தீயைப் போன்ற மலர்க்கொத்துகள் பூக்க ஆரம்பித்து விட்டன. கோங்க மரங்களில் கோடு போட்ட அழகிய வண்டுகள் இனிமையாய் ரீங்காரமிடுகின்றன. தலைவன் வருவதற்கான அறிகுறி தென்பட்டு விட்டது. நீ கவலையை விடு. உன் தலைவன் இதோ.. இதோ.. வந்து விடுவான் என தோழி சமாதானப்படுத்துகிறாள்.

இக்காட்சியை மதுராவுக்கு விவரித்து அக்கால காதல் பிரிவினை பற்றிய விளக்கியவன் அத்தோடு நில்லாமல், வாசல் புறம் கை காட்டி மதுரா அங்கே பார் நிஜத்திலும் உன் தலைவன் இதோ... இதோ... வந்து கொண்டிருக்கிறான் என கேலி செய்ய.. துணுக்குற்று அறையின் வாசல் பக்கம் பார்த்தாள் மதுரா.

அங்கு சிரித்தபடி கிரிதரன் வந்து கொண்டிருந்தான்.

கிரிதரனைப் பார்த்ததை விட தேவேந்திரன் அவனை 'தலைவன் வருகிறான்' என வர்ணித்தது கண்டுதான் திடுக்கிட்டுப் போய் விட்டாள் மதுரா.

''என்ன சொன்னீர்கள்..? கிரிதரா தலைவன்..?'' என டக்கென வந்துவிட்ட வார்த்தைகளை கேட்டும் விட்டாள்.

தேவேந்திரனோ தன் சிரிப்பை கொஞ்சமும் விடாமல், ''தலைவி நீ என்றால்.. தலைவனாக கிரிதரன் தானே இருப்பான்? அதனால்தான் அப்படிச் சொன்னேன்!'' என இயல்பாக சொல்லி விட்டு நுழைந்து கொண்டிருந்த கிரிதரன் பக்கம் சிரித்தபடி போனான்.



மதுரா சட்டென முகம் கறுத்து எரிச்சலாகிப் போனதை அவன் தேவேந்திரன் உற்று கவனிக்கவும் செய்தான்.

# 15

அன்று யதேச்சையாய்த்தான் மதுரா பின்புற பால்கனிப் பக்கம் வந்து நின்று கொண்டிருந்தாள்.

வீட்டின் கீழ்ப்பகுதியில் மெல்லிய பேச்சுக்குரல்கள் கேட்டது அவளுள் ஆச்சரியத்தை உண்டு பண்ணியது. அடர்ந்த வேப்ப மரம் ஒன்றும் தென்னை மரமும் பால்கனிப் பகுதியை மறைத்திருந்ததால் அவள் நிற்பது கீழே பேசிக் கொண்டிருப்பவர்களுக்குத் தெரிய வாய்ப்பில்லை.

யார் இப்படி? எதற்காக இப்படி மெல்லிய குரலில் பேச வேண்டும்? என பேச்சை கூர்ந்து கவனித்தவள் பேச்சில் தனது பெயரும் தேவேந்திரன் பெயரும் அடிபடுவது கண்டு திடுக்கிடத்தான் செய்தாள்.

மேலும் காதுகளைத் தீட்ட... பேசிக் கொண்டிருப்பது கிரிதரனும் தங்கை உதயாவும் எனப் புரிந்தது.

கொஞ்சம் இரைச்சல் குறைந்ததும் அவர்கள் பேசும் பேச்சும் தெளிவாக விழ ஆரம்பித்தது.

''அண்ணா, நான் சொல்வதை நன்றாக யோசி. அவர் தேவேந்திரனை நம்மோடு வைத்திருப்பது சரியல்ல..!'' என முதலில் உதயா பேசுவது கேட்டது.

''ஐயோ! உதயா, அவன் என் நண்பன். அவன் தங்குவதால் என்ன இடைஞ்சல்? நீ ஏன் பயப்படுகிறாய்?'' என பதிலுக்கு கிரிதரனின் பேச்சு.

தொடர்ச்சியாய் அவர்கள் பேச உன்னிப்பாய் கவனித்தாள் மதுரா.

''பயப்பட வேண்டியது நானல்ல. நீ.. நீதான்..!''

''என்ன நானா? என்ன சொல்கிறாய் உதயா?''

''தேவேந்திரனால் உன் முதலுக்கே மோசம் வந்து விடும். நீ ஆசைப்படும் பொருளுக்கே ஆபத்து வந்து விடும்.''

''நீ குழப்புகிறாய். புரியும்படி சொல்லு.''

''ஒரே வரியில் சொல்லட்டுமா?''

''சொல்லு...''

''மதுரா...''

''என்ன.. மதுராவுக்கு.. என்ன?''

''அவளை.. நீ விரும்புகிறாய் தானே? அவள்தான் உன் மனைவியாய் வர வேண்டும் என நினைக்கிறாய் தானே?''

''அது... அது...''

''சும்மாத் தயங்காதே. தைரியமாகச் சொல்லு. என்னுடைய... நம் வீட்டில் உள்ள அனைவரது விருப்பமும் அதுதான்...''

''ஆமாம். புரிகிறது. மதுராவை எனக்குப் பிடித்திருக்கிறது. உள்ளுக்குள் நான் அவளை விரும்புகிறேன்.''

''அதற்குத்தான்... ஆபத்து.. ஆபத்து வந்து விட்டது என்கிறேன்...''

''ஆபத்தா..?''

''நீ விரும்பும்.. நீ ஆசைப்படும் மதுராவை அந்த தேவேந்திரன் எளிதில் தட்டிக் கொண்டு போய் விடுவான் போல் தெரிகிறது...''



''இது.. என்ன.. புதுக்கதை சொல்கிறாய்?''

''கதையல்ல. நான் சொல்வது நிஜம். தினம் நடக்கும் கூத்து...''

''கூத்தா?''

''ஆம்.. தமிழ்.. கற்றுக் கொடுக்கிறேன்... தமிழ்க் கிளாஸ் என்ற பெயரில் வீட்டு மாடியில் கூத்து தான் நடக்கிறது. அவன் உன் நண்பன் தேவேந்திரன் இல்லாததும் பொல்லாததும் சொல்ல இனிக்க இனிக்க பேசுகிறான். இவள் சூதுவாது புரியாத மதுராவும் விழுந்து விழுந்து சிரிக்கிறாள்...''

''அப்படியா?''

''அப்படியேதான்..! இப்படியே விட்டால் அந்த தேவேந்திரன் பெயருக்கேற்றாற்போல் இந்திரனாய் மதுராவை எளிதில் வளைத்து விடுவான். அவனை நம்பி மதுராவும் மயங்கி விடுவாள்...''

* * *

மறுநாள் முதல் மதுரா.. கவனித்து விட்டாள். தேவேந்திரனைப் பார்த்ததும் உதயா முகம் கறுத்து மாறுவதை. அவள் மட்டுமல்ல கௌரியும் அப்படித்தான் தேவேந்திரனிடம் வேண்டா வெறுப்பாய் நடந்து கொள்வது தெரிந்தது.

எதற்காக..? என்று அவள் யோசித்தபோது நேற்று இரவு கிரிதரனும் உதயாவும் பேசிக் கொண்டது ஞாபகத்திற்கு வந்தது.

அதற்காக.. இப்படியா முகம் கடுகடுத்து திருப்பிக் கொள்ளும் அளவுக்கு நடந்து கொள்வது? என நினைத்

தாள். அவன் தேவேந்திரனோ இதையெல்லாம் கொஞ்ச மும் உணர்ந்த மாதிரித் தெரியவில்லை. அவன் பாட் டுக்கு வந்து உதயாவிடமும் கௌரியிடமும் சிரிக்கச் சிரிக்கத்தான் பேசிக் கொண்டிருந்தான்.

உதயா அதை மட்டுமல்ல. நடைமுறைப் பழக்கங் களையும் மாற்றி அமைக்க முயன்று கொண்டிருந்தாள். வழக்கம் போல் காலை ஒன்பது மணிக்கு கன்ஸல்டன் ஸிக்கு கிளம்பிச் சென்றுவிடும் கிரிதரன் கிளம்பாமல் நேரம் கடத்திக் கொண்டு இருந்தான்.

அவன் கிளம்பிச் சென்றதை உறுதி செய்து விட்டு பின் படபடவென கிளம்பும் மதுராவிற்குத்தான் இது சங்கட மாய் போயிற்று. என்ன இவன் கிளம்பாமல் நேரத்தை கடத்துகிறான் என நினைத்தாள்.

இடையிடையே உதயா வந்து குசுகுசுவென அவளிடம் பேசிவிட்டுச் சென்றதும் அவளுக்கு விஷயம் புரிந்து போயிற்று.

அவனது பைக்கில் போவதைத் தவிர்த்து தினம் கன்ஸல்டன்ஸிக்கு பஸ்ஸில் போய்க் கொண்டிருக்கிறாள் அவள். 'அதை மாற்று. நீயும் லேட்டாகக் கிளம்பி அவன் உன்னுடனே பைக்கில் வரும்படி பண்ணு..!' என உதயா சொல்லியிருக்க வேண்டும்.

அதனாலே.. ஒழுங்காய் நல்ல பிள்ளையாய் காலை கிளம்பிச் சென்று கொண்டிருந்தவன் அவள் வரவேண் டும் என மக்கர் செய்ய ஆரம்பித்து விட்டான்.

இப்போது.. என்ன செய்வது?

யோசித்த மதுரா... முதலில் எதையும் தெரிந்த மாதிரி காட்டிக் கொள்ளாமல் நடந்து கொள்ள வேண்டும் என்ற முடிவுக்கும் வந்தாள்.



வழக்கம்போல் தனது வேலைகளை முடித்து விட்டு ஹாண்ட் பேக்குடன் கிளம்பிய போது சொல்லி வைத்தாற் போல் கிரிதரனும் கிளம்பி பைக்கை வெளியே எடுத்துக் கொண்டிருந்தான்.

வெளியே மாடிப்பக்கம் நின்று கொண்டிருந்த உதயாவும் அவனும் ஒரு அர்த்தமான பார்வை பரிமாறிக் கொள்வதையும் கவனித்தாள்.

அவுட் ஹவுஸ் பக்கம் இருந்த தேவேந்திரனின் ரூமைப் பார்த்தாள். நல்லவேளையாய் பூட்டிக் கிடந்தது. காலையிலேயே யூனிவர்ஸிட்டிக்கு கிளம்பிச் சென்று விட்டான் போலும்.

நிம்மதி அடைந்தவளாய் கிளம்பி முன் வந்தாள். வெளியே பைக்கை எடுத்துக் கொண்டு ஸ்டார்ட் செய் யாமல் யதேச்சையாய் நிற்பது போல் நின்று கொண்டிருந் தான் கிரிதரன்.

வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு அவன் பக்கம் போனாள். கிரிதரன் தற்செயலாய் திரும்பி, தற்செயலாய் அவளைப் பார்ப்பது போல் பார்த்து, "ஏறிக்கொள் மதுரா. நானும் அலுவலகம்தான் போகிறேன்...!" என்றான்.

மறுப்பேதும் சொல்லாமல் ஏறிக் கொண்டாள் அவள்.

பைக் வெளிக்கேட்டை தாண்டிச் செல்லும் வரையில் மாடியில் இருந்தபடி உதயா பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது. அவள் கிரிதரனுடன் அப்படி பைக்கில் செல்லும் காட்சி கண்கொள்ளா காட்சியாய் ஆயிற்றோ? அதை பார்த்து ரசிக்கிறாளோ?

கிரிதரனோடு பைக்கில் சென்று கொண்டிருந்தாலும் அவள் ஒன்றும் நெருக்கமாய் அமரவில்லை. இரு வருக்கும் இடையே இடைவெளி இருந்தது.

பைக்கில் அவன் கிரிதரனின் தோளைப் பற்ற வேண்டிய அவசியமில்லாமல் சைடு ஓரமாய் இரும்புப் பிடிப்பு இருந்தது. அதை மதுரா இறுகப் பற்றிக் கொண்டாள்.

மேலும் கிரிதரனும் கண்ணியமானவன்தான். பைக்கை வேகமாய் ஓட விட்டு பிரேக் பிடித்து அந்த சில்மிஷ இடியை விரும்புமளவுக்கு கீழ்த்தரமானவன் அல்ல. மெதுவாகவே கவனமாய் பைக்கை ஓட்டினான்.

வழக்கமாய் அவன் பைக் ஓட்டிக் கொண்டு செல்லும் போது பேசாமலே ஓட்டிச் செல்வது அவனது வழக்கம். ஆனால் இம்முறை எதையாவது அவளிடம் கேட்டுக் கொண்டிருந்தான். தேவையில்லாத விஷயங்களைச் சொல்லி அறுக்காத குறையாய் சளசளத்துக் கொண் டிருந்தான்.

ஒருவேளை இதுவும் உதயாவின் ஏற்பாடா..? என மதுரா நினைத்தாள். 'பைக்கில் சும்மா காட்டான் போல் ஓட்டிக் கொண்டு போய் விடாதே.. வாயைத் திறந்து எதையாவது அவளிடம் பேசிக் கொண்டிரு. அவன் தேவேந்திரன் பேசியேதான் மதுராவை அவன் பக்கம் இழுக்கிறான்!' என உண்மையிலேயே மதுரா நினைத்தது போல் அதற்கும் அர்ச்சனை மழை கிரிதரனிடம் செய்யத் தான் செய்திருந்தாள் உதயா.

ஒருவழியாய் அலுவலகம் வந்ததும் இறங்கிச் சென்று விட்டாள். அதன் பின் அவளுக்கு எவ்வித 'கிரிதர' தொந்தரவும் இல்லையென்று சொல்லலாம்.

ஆனால் மதியம் லஞ்சுக்கு வீட்டுக்குக் கிளம்பியபோது அதே போல் பைக்கில் திரும்ப வேண்டியிருந்தது. கிரி



தரன் பைக்கை பாதியிலே ஒரு ரெஸ்ட்டாரண்ட் முன் நிறுத்தினான்.

''சீக்கிரமாக திரும்ப அலுவலகம் செல்ல வேண்டும். வேலைகள் நிறைய இருக்கிறது. இங்கே ரெஸ்ட்டா ரண்ட்டில் சாப்பிட்டு விடுவோம்...'' என்றபோது அவ ளால் தட்ட முடியாமல்தான் இருந்தது.

ரெஸ்ட்டாரண்ட்டின் மெல்லிய வெளிச்சங்களுக்கு கீழ் உள்ள இருக்கைகளில் ஜோடி ஜோடியாய் ஆட்கள் உட்கார்ந்திருக்க கிரிதரனும் மதுராவும் ஓரமான இருக்கை யொன்றில் உட்கார்ந்தார்கள்.

பேரரிடம் ஆர்டர் செய்துவிட்டு கிரிதரன் அவள் முகத்தைப் பார்க்க ஆரம்பித்தபோது மதுராவினுள் பயம் துளிர்க்கலாயிற்று. அடாடா. சரியான தனிமை. இதுதான் பேச சந்தர்ப்பம். இவன் தத்து பித்துவென உளறி விடக் கூடாது என திகைப்பாய் சிந்தித்தவள். அதை எப்படித் தடுப்பது என யோசித்தாள்.

யோசித்தவளுக்கு பளீரென கன்ஸல்டன்ஸியில் அன்று காலை க்ளையண்ட் ஒருவர் கொண்டு வந்த புராஜக்ட் ரிப்போர்ட் பற்றிய ஞாபகம் வந்தது. அவனிடம் பேச்சைத் திசை திருப்புவதற்காக அது பற்றி கேட்க ஆரம்பித்து விட்டாள்.

கிரிதரனும் அலுவலக விஷயம் என்றதும் தன்னை யறியாமல் சுவாரஸ்யமாகி விட்டான். அந்த புராஜக்ட்டைப் பற்றி சுவாரஸ்யமாய் அவளிடம் விவரிக்க ஆரம்பித்து விட்டான்.

மதுராவும் தன் பற்கள் அத்தனையையும் காட்டிக் கொண்டு சிரிப்பது போன்ற பாவனையில் அவன்

பேசுவதை கவனிப்பது போல் காட்டிக் கொண்டாள். அவள்தான் அங்கு உட்கார்ந்திருந்தாலே தவிர அவளது சிந்தனை முழுவதும் வேறு எங்கோ இருந்தது.

வேறு எங்கோ.. என்ன? எல்லாம் அந்த தேவேந்திரனிடம்தான்! நேற்று தமிழ் வகுப்பில் தேவேந்திரன் சொல்லிய விஷயங்கள் அவனது நகைச்சுவை குறிப்புகளை எல்லாம் மெல்ல நினைவுபடுத்தி அசை போட்டுக் கொண்டுதான் இருந்தாள்.

அதனாலே முற்றிலும் உணர்வில்லாமல் இருந்தவள், கிரிதரன், ''என்ன மதுரா கிளம்பலாமா?'' என்றதும்தான் உணர்வுக்கே வந்தாள்.

கண்ணைத் திறந்து வைத்துக் கொண்டே கனவு காணும் அளவுக்கு மனம் போய் விட்டதே.. என்ன இது கிறுக்குத்தனம்? என தன்னைத்தானே கடிந்து கொண்டவள் எழுந்து அவசரமாய் கிளம்பினாள்.

மறுபடி அலுவலகம் சென்று கொஞ்ச நேரம் இருந்து விட்டு சரியாய் மூன்று மணிக்கு வீட்டிற்குக் கிளம்பி விட்டாள்.

பஸ் பிடித்து வீடு திரும்பியபோது அவளுக்கு தமிழ் வகுப்பு எடுக்கத் தயாராய் தேவேந்திரன் உட்கார்ந்திருந்தான். தேவேந்திரனைப் பார்த்ததும் முகம் மின்னலாய் மலர்வதையும் புன்சிரிப்பு தானாய் உதிர்வதையும் அவளால் கட்டுப்படுத்த முடியவில்லை.

என்னாயிற்று.. எதனால்.. மனமும் உடலும் கட்டுப்பாடும் இழந்து உணர்வுகளில் தவிக்கிறது? என திகைப்பாய் குழம்பினாள்.



அதே குழப்பத்துடன் அறையினுள் நுழைந்தவள் உள்ளே தேவேந்திரன் முன்னால் சேரில் அமர்ந்திருந்தவளைப் பார்த்து அதிரத்தான் செய்தாள்.

அங்கு.. கௌரி பயபக்தியாய் மாணவி போல் கையில் நோட்டுடன் உட்கார்ந்திருந்தாள்!

# 16

கௌரியை அங்கு கொஞ்சமும் மதுரா எதிர்பார்க்கவில்லை. அவளும் படிக்க வந்தவள் போல் கையில் ஒரு ஒன் குயர் நோட்டுடன் உட்கார்ந்திருந்தாள்.

அவள் கௌரி உட்கார்ந்திருப்பதைப் பார்த்து திகைத்து விழிப்பதை தேவேந்திரன் கண்டவன், ''நம் பள்ளிக்கு புது வரவு...'' என தூய தமிழில் அறிமுகப்படுத்தவும் செய்தான்.

''என்ன புது வரவா?''

''ஆமாம்.. மதுரா.. மதியம் வீட்டில் சும்மாதானே இருக்கிறேன். எனக்கும் தமிழ் கற்றுக் கொள்ள ஆசை வந்து விட்டது..'' என்றாள் தனது நீளமுகத்தை இருபுறமும் ஆட்டியபடி.

''நீ என்ன படிக்கப் போகிறாய் கௌரி?''

''நீ படித்து பி.ஏ. டிகிரி வாங்க இருப்பது போல்.. நான் படித்து புலவர் பட்டம் வாங்க இருக்கிறேன்.''

''ஆமாம்.. ஆமாம்.. கௌரியை நாடு போற்றும் பெரும் அரசவைப் புலவர் ஆக்குவதே இனி என் முழு வேலையாக்கும்..!''

நீட்டி.. இறக்கி அபிநயத்து தேவேந்திரன் சொல்ல இருவரும் சிரித்தார்கள்.

மதுராவுக்கு ஆச்சரியமாகத்தான் இருந்தது. நேற்று இரவு பார்க்கும்போதுகூட இது பற்றி கௌரி ஒன்றும் சொல்லவில்லையே என நினைத்தாள்.

''எல்லாம் திடீரென எடுத்த முடிவுதான்! உதயாதான், 'வெட்டியாக தூங்கிப் பொழுதை கழிக்காதே. உடம்பு குண்டடித்து விடும்.. என பயம் காட்டி நச்சரித்தாள், நானும் படிக்க வந்துவிட்டேன்!''

உதயா பெயரை கௌரி சொன்னதும் மின்னல் வெட்டியது போல்தான் மதுராவுக்கு இருந்தது.

ஆக.. இது உதயாவின் ஏற்பாடு.

எதற்காக?

அவள் யோசித்தபோது கிடைக்காத பதில் தேவேந்திரன் தமிழ் வகுப்பு எடுக்க ஆரம்பித்ததும் கிடைத்தது.

கௌரி சும்மாவே அரட்டையடிக்கும் சளசள டைப். வாயில் வெற்றிலையை குதப்பி எடுப்பது போல் ஏதாவது ஒன்றுக்கத்த விஷயங்களை பற்றி பெரிய லெக்சர் கொடுத்துக் கொண்டிருப்பாள். அவள் விடுவாளா?

தேவேந்திரன் பாடத்தை ஆரம்பித்ததும் சந்தேகம் கேட்கிறேன் பேர்வழி என சம்பந்தம் சம்பந்தமில்லாமல் எதையாவது கேட்டு அவனைக் குழப்பிக் கொண்டுதான் இருந்தாள்.

அவள் அடிக்கடி சளசளத்து பேசியதால் வேறு தேவேந்திரனால் முன்பு போல் சுவாரஸ்யமாய் பாடங்களை விவரிக்க முடியவில்லை. நகைச்சுவை பொங்க



பேச முடியவில்லை. ஏன், மதுராவை விட பாதி நேரம் அவன் கௌரியிடமே பேச வேண்டியிருந்தது.

அந்த அளவுக்கு பாடங்களில் விளக்கம் கேட்பது போல் கேட்டு அவன் கவனத்தை முழுவதும் தன் பக்கம் இழுத்துக் கொண்டிருந்தாள் கௌரி.

யோசித்த மதுராவிற்கு உதயா கௌரியை ஏன் தமிழ் படிக்க தேவேந்திரனிடம் அனுப்பினாள் என்பதற்கான காரணமும் தெரிந்து போயிற்று!

எல்லாம் உதயாவின் திட்டம்தான்.

தினம் தமிழ் வகுப்பில் தேவேந்திரனும் அவளும் விழுந்து விழுந்து சிரிப்பதைப் பார்த்தவள் இப்படி விட்டால் விபரீதம் என முடிவிற்கு வந்திருக்க வேண்டும்.

அதனாலே கெட்டிக்காரத்தனமாய் பிளான் செய்து கௌரியை அனுப்பியிருக்கிறாள். கௌரி தன் சுபாவத்திற்கு ஏற்ப சளசள பேச்சால் இடைஞ்சல் செய்து தேவேந்திரனின் ஈடுபாட்டை குறைக்கிறாள். மதுராவும் அவனும் வேறு எதுவும் பேச முடியாதபடி நந்திபோல் உடன் உட்கார்ந்து கொள்கிறாள்!

இதைத்தான் பிளான் செய்து உதயா திட்டமிட்டாள். அவள் திட்டமிட்ட மாதிரியே கௌரி உட்கார்ந்து கொண்டு அவளைப் பேச விடாமல் எதற்கெடுத்தாலும் அவளே பேசிக் கொண்டு... இதற்கு என்ன செய்வது?

இதை எப்படித் தடுப்பது?

தேவேந்திரனுக்கு இந்த விஷயம் புரிந்திருக்குமோ? என நினைத்துப் பார்த்தாள்.

அவன் புரிந்து கொள்ளவில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

அவன் பாட்டுக்கு கௌரியுடனும் சிரித்துப் பேசி இயல்பாய் பாடம் நடத்திக் கொண்டிருந்தான்.

இப்படி சிந்தித்துக் கொண்டிருந்ததாலோ என்னவோ.. அன்றைய அந்த வகுப்பில் அவள் மனம் கொஞ்சமும் லயிக்கவில்லை. கௌரியின் நடவடிக்கைகளை உற்றுக் கவனிப்பதிலே சென்று கொண்டிருந்தது.

அதனாலே தேவேந்திரன் சுவாரஸ்யமாய் பாட்டொன் றின் பொருளை விளக்கிக் கூறி விட்டு அவளுக்கு அர்த்தம் புரிந்ததா.. என கேட்க மதுரா திருதிருவென விழிக்கத்தான் செய்தாள்.

கௌரி உடனே எடுத்துக் கொடுப்பது போல, ''அதான் மதுரா புலியின் வாலைப் பிடித்து இழுத்தாயாம். புலி பயந்து ஓடியே போய் விட்டதாம்...'' என்று சொல்ல மதுராவும் கொஞ்சமும் யோசியாமல் தேவேந்திரன் பக்கம் திரும்பி, ''புலிவால்...'' என ஆரம்பிக்க கௌரியும் தேவேந் திரனும் கொல்லென அடக்க முடியாத சிரிப்பு சிரிக்கத் தான் செய்தார்கள்.

'அட.. அவள் பாடத்தில் நடத்தி வருவதைச் சொல் கிறாள்.. என்று பார்த்தால்.. எதையோ.. நம்மை உளறச் செய்து கிண்டலடித்திருக்கிறாளே..!' என உள்ளூர அசடு வழிந்தவளாய் மதுராவும் சிரித்தாள்.

தேவேந்திரன் சிரிப்பை முடித்து விட்டு அவள் பக்கம் வந்தவன், ''என்னாயிற்று மதுரா, இன்று.. ஏன்.. என்னவோ போல் ஒரு நிலையில்லாமல் இருக்கிறாயே?'' என்றான் அவளை சரியாகக் கண்டு பிடித்தவனாய்.

''அப்படியெல்லாம்... ஒன்றும்... ஒன்றும்.. இல் லையே...!'' கைகளை விரித்து இயல்பாகச் சொல்வது போல் சொல்லி இருவரையும் பார்த்தாள் மதுரா.



''எனக்கு விஷயம் தெரியும்...'' என்றாள் கௌரி.

மதுரா துணுக்குற்றவளாய் அவளை நோக்கித் திரும்பி னாள்.

என்ன சொல்லப் போகிறாள் இவள்!

அதற்குள் தேவேந்திரனும் சுவாரஸ்யமாகி கௌரியைப் பார்த்தான்.

''உனக்குத் தெரியுமா கௌரி?''

''தெரியும். ஆனால் மதுரா அனுமதி கொடுத்தால் தான் அதை உங்களிடம் சொல்வேன்...'' என பீடிகை போட... மறுபடியும் இருவரும் மதுராவைப் பார்க்க ஆரம்பித்தார்கள்.

'இது... என்னடா. வம்பாப் போயிற்று! இந்த கௌரி வாயை வைத்துக் கொண்டு சும்மா இருக்க மாட்டாளோ!' என மதுரா எரிச்சலாய் நினைத்துக் கொண்டே, ''கௌரி, அப்படி நான் அனுமதி கொடுக்கிற அளவுக்கு பெரிய விஷயம் ஒன்றுமில்லையே...!'' என்றாள்.

''இருக்கிறது. சொல்லட்டுமா?''

''சொல்லு...''

''உனக்கொன்றும் பயமில்லையே...?''

''பயமா..? எனக்கா?'' என மீண்டும் தன் எரிச்சலைக் காட்டாமலே மதுரா பேச கௌரி சொல்லி விட்டாள்.

''எல்லாம் கிரிதரன் அண்ணா நினைப்பு! அதான் உன் புத்தி அடிக்கடி தடுமாறுகிறது...''

கிரிதரன் என்ற வார்த்தையைக் கேட்டதும் மதுரா எரிச்சலின் உச்சிக்கேத்தான் சென்றாள். அதைவிட கௌரி கிரிதரன் பெயரைச் சொன்னதும் சட்டென தேவேந் திரனின் முகமும் மாறுவதை கவனித்தாள்.

சே! அடுத்தவர்களை நோகடிப்பது தான் இந்த கௌரியின் வேலையா!

அசூயையாய் நினைத்தவள் கௌரியைப் பார்த்து முறைப்புப் பார்வை ஒன்றை பார்த்துக் கொண்டே, ''அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. முட்டாள்தனமாக உளறாதே. இங்கு வகுப்புக்கு வந்து விட்டால் பாடத்தை தவிர என் கவனம் வேறெதிலும் இருக்காது..'' என்றாள் உறுதியான குரலில்.

அதற்கும், ''உண்மையைச் சொன்னதும் வருகிற கோபத்தைப் பார்!'' எனச் சொல்லி சிரிக்க ஆரம்பித்தாள் கௌரி.

இந்த கௌரி பெரிய தலைவலியாய் அல்லவா இருப்பாள் போல் தெரிகிறதே! ஒரு நாள் சமாளிக்கவே போதும் போதும் என்றிருக்கிறது. தினம் தினம் வகுப்பில் இவளை எப்படி சமாளிக்க..? என கவலைப்படவும் ஆரம்பித்து விட்டாள் மதுரா.

அதன்பின் தேவேந்திரன் பேச்சை மாற்றி இருவரையும் பாடத்திற்கு இழுத்துக் கொண்டு வந்து கவனமாய் நடத்த ஆரம்பித்தான்.

அரைமணி நேரம் இருவரும் பயபக்தியோடு கவனிக்க அன்றைய தமிழ் வகுப்பு கிளாஸ் முடிந்தது.

இருவரும் வெளிவர தேவேந்திரன் விடைபெற்று தன் ரூம் பக்கம் விறுவிறுவென சென்று விட்டான்.

மதுராவின் தோள்களை உரிமையோடு தொட்டுத் திருப்பினாள் கௌரி.

''மதுரா... நான் அப்படி உன்னை மனதை எங்கோ பறக்க விட்டுக் கொண்டு வகுப்பில் உட்கார்ந்திருப்பதாய் கிண்டலடித்ததற்கு காரணம் இருக்கிறது...''



''காரணம் இருக்கிறதா?''

''ஆமாம்.. எனக்கும் அப்படி ஏற்பட்டிருக்கிறது. எனது சொந்த அனுபவமும் கூட...''

''சொந்த அனுபவமா?''

''ஆம். சொந்த காதல் அனுபவம்..!'' என கௌரி தெளிவாய் உச்சரிக்க மதுரா திடுக்கிட்டுப் பார்த்தாள்.

''என்னது.. காதலா? என்ன உளறுகிறாய்?''

''நான் உளறவில்லை. நான் மிஸ்டர் தேவேந்திரனை காதலிக்கிறேன் மதுரா...'' என்றாள் கௌரி சலனமில்லாத குரலில்.

## 17

கௌரி சொன்னதைக் கேட்டதும் மதுராவின் இதயம் ஒரு கணம் துடிக்க மறந்து நிற்கத்தான் செய்தது.

''என்ன.. காதலர் தேவேந்திரனா? என்ன சொல்கிறாய் கௌரி?''

கௌரி செயற்கையாய் உதட்டை குவித்து மடித்து வெட்கப்படுபவள் போல் முகத்தை வைத்துக் கொண்டாள்.

''நான் மிஸ்டர் தேவேந்திரனை காதலிக்க ஆரம்பித்து விட்டேன். அப்படியானால் அவர் என் காதலர்தானே..?''

''அட.. இது.. என்ன புதுக்கதை கௌரி?'' கொண்டிருந்த பதட்டமும் படபடப்பையும் கஷ்டப்பட்டு மறைத்தவாறே கேட்டாள் மதுரா.

''புதுக்கதையல்ல. காதல் கதை. அவரை ரெயிலில் இருந்து இறங்கும்போது.. பார்த்ததில் இருந்து அந்த முதல் பார்வையிலிருந்து.. மனதுள் ஒரே குமைச்சல். அது காதல் தான் என இப்போது தான் கண்டு பிடித்தேன். அதனாலே அவரிடம் பாடம் கற்றுக் கொள்வது போல் மாணவி யாகவும் சேர்ந்திருக்கிறேன்...''

''அப்படியானால் தேவேந்திரனுக்கு இது தெரியுமா?''

''தெரியாது. இது.. ஒரு தலைக் காதல்..! இனிமேல் தான் அவரிடம் சொல்ல வேண்டும்...''

கெளரி சொல்லச் சொல்ல மதுராவுக்கு தலை சுற்றத் தான் செய்தது. உதட்டை அழுந்தக் கடித்தவள் கை விரல் களை இறுக்கமாய் மூடிக் கொண்டு அவளைப் பார்த்தாள்.

''நீ அவரிடம் சொல்லப் போகிறாயா?''

''ம்ம்...'' என அதற்கு கெளரி பலமாய் தலையசைத்து மேலும் கீழும் ஆட்டியவள், ''ஆனால் சொல்லப் போவது நான் அல்ல... நீ தான்!'' என்றாள்.

''என்ன.. நானா?''

''ஆமாம். நான் காதலிப்பதை நீதான் சொல்ல வேண் டும் மதுரா. ஏனெனில்... எனக்கு வெட்கமாக இருக்கிறது...'' மறுபடியும் உதட்டைக் கடித்து வெட்கப்படுவது போல் கெளரி ஒரு போஸ் கொடுக்க மதுராவுக்கு எரிச்சல்தான் பற்றிக் கொண்டு வந்தது.

வேறு யாரும் என்றால் அவளிடம் வந்து இப்படிச் சொல்வதற்கு ரப்பென்று ஒரு இழுப்பு இழுத்திருக்கலாம்! ஆனால் பேசுவது பாசமான பெரியம்மா மகளாயிற்றே?

இவளை என்ன செய்வது...? இவளுக்கு என்ன பதில் சொல்வது? என நினைத்தபடி நிமிர்ந்து கெளரியைப் பார்க்க... அவள் கூர்ந்து தனது முகத்தையே உற்றுப் பார்த்தபடி இருந்தது மதுராவுக்கு எதையோ உணர்த்தியது.



அவளும் கெளரியை உற்றுப் பார்த்தாள்.

அவள் உடம்பிலும் சரி முகத்திலும் சரி துளியளவு பதட்டமோ.. பரபரப்போ இல்லை.

அதைக் கவனித்து மதுராவுக்குத்தான் சுரீரென உரைத்தது.

அடாடா..! இதுவும் நாடகமா? உதயாவும் இவளும் சேர்ந்து போடும் திட்டமா?

தான் தேவேந்திரன் மீது.. ஈடுபாடு கொண்டு காத லித்து விடக்கூடாது என்பதற்காக இப்படியொரு பொய்யான காதல் வலையா? தேவேந்திரனை நெருங்கி விடக் கூடாது என கெளரியை வைத்து காதல் வேலியா.. போடுகிறார்கள்?

கெளரியை மீண்டும் உற்றுப் பார்த்தபோது அவள் தனது முகக் குறிப்பையே அறிய ஆவலாய் இருப்பதைக் கண்ட மதுரா தான் நினைத்தது சரியே என்ற முடிவுக்கு வந்தாள்.

அவளுக்கு ஒரு கணம் மகாபாரதப் போரில் வரும் ஒரு சுவையான காட்சிதான் ஞாபகத்திற்கு வந்தது.

மகாபாரதப் போரில் தனது மகன் அபிமன்யூவை பறி கொடுத்த அர்ச்சுனன், ''தன் மகனின் சாவிற்கு காரணமான ஜயத்ரதனை நாளை கதிரவன் மறையும் முன் கொல் வேன். அப்படி இல்லையெனில் என் உயிரை விடுவேன்..'' என சபதம் செய்கிறான்.

மறுநாள் போர் தொடங்குகிறது. அர்ச்சுனனின் சபதம் அறிந்த ஜயத்ரதன் கௌரவர் படையால் நன்கு பாதுகாக்கப்

பட்டான். எவ்வளவு முயன்றும் அர்ச்சுனனால் அவன் பக்கம் நெருங்கக் கூட முடியவில்லை.

மாலை நெருங்கிக் கொண்டிருக்க... அர்ச்சுனனின் இக்கட்டான நிலைமையை உணர்ந்த கண்ணன் அவனுக்கு உதவி செய்ய தீர்மானித்தான். தனது கையிலிருக்கும் சக்கரத்தால் கதிரவனை மறைத்து இருளை பரவச் செய்தான்.

அப்படி இருள் பரவியதால் போர் முடிந்து விட்டது. அர்ச்சுனன் தோற்று விட்டான் என ஆணவக் கொக்கரிப்புடன் ஜயத்ரதன் தனது பாதுகாப்பை விட்டு வெளி வந்தான். உடனே கண்ணன் தனது சக்கரத்தை விலக்கி சூரிய ஒளியை வரச் செய்தான். அர்ச்சுனனை ஜயத்ரதன் மீது அம்பு எய்யச் சொன்னான். அர்ச்சுனனும் குறி பார்த்து அம்பு விட்டு ஒரே வீச்சில் அவனைக் கொன்றான்.

இப்படி கண்ணன் தன் சக்கர ஆயுதத்தால் சூரியனை மறைத்தது போல உதயா கௌரியைக் கொண்டு தேவேந்திரனை மறைப்பதாய் மதுரா நினைத்தாள்.

திடீரென சிந்தனை வயப்பட்டு மௌனமாகிவிட்ட அவளை கௌரி உலுக்கத்தான் செய்தாள்.

''என்ன... மதுரா.. மௌனமாகி விட்டாய்? நீயும் யாரையும் விரும்புகிறாயா?''

சட்டென கௌரி கேட்டதும் சிவந்து சூடான கன்னங்களை அவசரமாய் மறைக்க முயன்றாள் மதுரா.

''என்னது... விருப்பமா?''

''புரியவில்லை..? அதான் அந்த மூன்றெழுத்து காமக் கடவுள் மன்மதனின் மலர் கணைகளால் அம்பு எய்து விளையாடும் இனிமையான விளையாட்டு. அது உனக்கு வந்து விட்டது தானே..?''



''சே! சே! அப்படியெல்லாம் ஒன்றும் இல்லை!'' என்றாள் மதுரா அவசரமாய் தலை முழுவதையும் மறுப்பாய் ஆட்டியபடி.

அவள் முகத்தை மறுபடியும் உற்றுப் பார்த்த கௌரி, சட்டென தன் தலையில் குட்டு வைக்காத குறையாய் தட்டிக் கொண்டு, ''நான் ஒரு மடைச்சி..!'' என்றாள்.

'அது.. இப்போதுதான் தெரிந்ததா?' என உள்ளூர மதுரா கேலியாய் நினைக்க... அவளை அடுத்து தான் சொன்ன வார்த்தைகளால் அதிர வைத்தாள் கௌரி.

''நான் ஒரு மடைச்சி! நீதான்.. கிரிதரன் அண்ணாவை விரும்புகிறாயே..? அவனைத்தான் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறாயே..? அதை மறந்துவிட்டு.. உன்னிடம் தெரியாதது போல் கேட்டு உளறிக் கொண்டிருக்கிறேனே!''

அவள் சொன்னதும் டக்கென ஊசி குத்தியது போல் தான் மதுராவுக்கு வலித்தது.

அவள் அவஸ்தையாய்.. நெளிய.. அதற்கும் வேறு விதமாய் கற்பனை உருவம் கொடுத்தாள் கௌரி.

''மன்னித்துக் கொள் மதுரா. அண்ணாவோடு.. நீ கற்பனையில் சந்தோஷமாய் சஞ்சரிப்பது தெரியாமல் குறுக்கிட்டு விட்டேன்.

அடக் கண்றாவியே.. இது வேறா! எரிச்சலாகி விட்டது என முகத்தைப் பார்த்தால் உனக்கு கனவுலகில் சஞ்சரிப்பது போலவா தெரிகிறது? இவளை விட்டால்... கற்பனையிலேயே காதலிக்க வைத்து.. கற்பனையிலே கிரிதரனோடு கல்யாணம் செய்து வைத்து விடுவாள் போலவே..!

அசூயையாய் முகத்தை வெட்டி, ''அப்படியெல்லாம் எந்த மண்ணாங்கட்டியும் இல்லை...'' என்றாள் கோபமாக.

''அட.. கோபித்துக் கொள்ளாதே.. மதுரா. எனக்கு இப்போதுதான் இன்னொன்றும் ஞாபகம் வருகிறது. பொதுவாக காதலர்களுக்கு இது போன்ற அவர்கள் காதல் கனவுகளை அந்தரங்கமான நினைப்புகளை யாரும் சீண்டும்படி கேட்டால் பொல்லாத கோபம் வந்து விடும் எனச் சொல்லக் கேட்டிருக்கிறேன். அதான்.. பார்.. உனக்கும் கோபம் வந்து விட்டது...''

அவளது கோபத்திற்கும் வாகாக ஒரு காரணம் கற்பிக்க... தலையிலடிக்கத்தான் செய்தாள் மதுரா.

அட.. அசடே..! உனக்கு தலையில் நட்டு கழன்று விட்டதுதான். தலையில் இரண்டு போட்டால்தான் நீ சரி வருவாய்! என்றபடி கண்களை விரித்த மதுரா அவளை இப்படியே விட்டால் ஆபத்து தெளிவு படுத்திவிட வேண்டும் என்ற முடிவுக்கும் வந்து விட்டாள்.

''இதோ பார் கெளரி.. நீ வீணாக கற்பனைகளை வளர்த்துக் கொண்டே போகிறாய். எனக்கு யார் மீதும் காதலோ கத்திரிக்காயோ கிடையாது.''

''கத்திரிக்காய் வேண்டாம். காதல் கிரிதரன் மீது உண்டுதானே?''

''அப்படி இருப்பதாய் யார் உனக்குச் சொன்னார்கள்?''

அவள் கேள்வியில் சட்டென ஒரு கணம் தடுமாறிப் போன கெளரி மறுகணம் சுதாரித்துக் கொண்டாள்.

''யார் சொல்ல வேண்டும்? நான்.. நானாகத்தான் சொல்கிறேன்...''

''அது.. உனது.. கற்பனை கெளரி.''



''சரி.. எனது கற்பனையாகவே அது இருந்து விட்டுப் போகட்டும். நிஜமாகச் சொல். உனக்கு கிரிதரன் மீது விருப்பம் இருக்கிறதா.. இல்லையா?''

இப்படி பொட்டில் அடித்த மாதிரி கேள்வி கேட்கிறாள் கெளரி! ஒன்றில் இரண்டு பார்த்து விடுவது என தீர்மானம் செய்து விட்டாளோ! இதற்கு என்ன பதில் சொல்வது?

யோசித்த மதுராவுக்கு சட்டென தனது படிப்பு தான் ஞாபகம் வந்தது.

''அதைப் பற்றியெல்லாம் முடிவெடுக்கவோ.. யோசிக்கும் நிலையிலோ நான் இல்லை கெளரி...''

''அதான் ஏன் என கேட்கிறேன்...''

''இப்போது எனது கவனம் எல்லாம் என் படிப்பு தான். எப்படியாவது டிகிரி ஒன்றை வாங்கிவிட வேண்டும் என்கிற லட்சியம்தான்!''

''அப்படியானால்... அந்த உனது எவரெஸ்ட்டைத் தொட்டு விடும் லட்சியம் நிறைவேறிய பிறகு தான் இந்தக் காதல் கத்திரிக்காய் எல்லாம்?'' கெளரி கிண்டலாய் கேட்டாலும் பலமாய் தலையாட்டினாள் மதுரா.

''அப்படித்தான் வைத்துக் கொள்ளேன்!''

''நீ சொல்வது உண்மைதானே மதுரா?''

''உண்மைதான்..!'' அழுத்தந் திருத்தமாய் சொல்லிய மதுரா எதற்காக இப்படி சத்தியம் வாங்காத குறையாய் இவள் கேட்கிறாள் என குழம்ப... அடுத்து சொன்ன வார்த்தைகளால் அதை தெளிவு படுத்தினாள் கெளரி.

''படிப்பு முடிந்த பின்தான் நீ காதலைப் பற்றி யோசிப்பாய். அது யாராக இருந்தாலும்... அப்படித்தானே?'' வார்த்தைகளை அழுத்தி முடித்தாள் மதுரா!

## 18

அன்று ஞாயிற்றுக்கிழமை.

ஒரே போர்தான் இன்று..! டி.வி.யை விட்டால் வேறு போக்கிடம் கிடையாதே! என்ற சலிப்புடன் மதுரா இருக்கும் போதுதான் உதயா தேடி வந்து ஷாப்பிங்கிற்கு அழைத்தாள்.

''அப்படி.. என்ன ஷாப்பிங்கில் வாங்க வேண்டும் உதயா?''

மதுரா கேட்டதற்கு கைகளை நீட்டி அபிநயம் பிடித்தாள்.

''ஏன்.. சின்ன கைக்குட்டை வாங்குவது கூட ஷாப்பிங்தான்! ஏதாவது காம்ப்ளெக்ஸ் போவோம். லிப்ட்டில் நாலு கடை ஏறி இறங்குவோம். பாப்கார்ன், ஐஸ்க்ரீம், ஜூஸ் வகையறாக்கள் என ஒரு வெட்டு வெட்டுவோம். நேரமும் போய்விடும். திரும்பவும் செய்து விடலாம்!''

அவள் சொல்வதை ரசித்துக் கேட்ட மதுரா பதிலுக்கு சம்மதமாய் தலையாட்டினாள்.

காலை பத்து மணிக்கு உதயா, கௌரி, மதுரா என மூன்று பேரும் சுறுசுறுப்பாய் கிளம்பி விட்டார்கள். மதுரா ரொம்ப நாள் உடுத்தாமல் வைத்திருந்த ஷிபான் சேலை ஒன்றை உடுத்தியிருந்தாள்.

மயில் தோகை வண்ண நிறத்தில் உடம்பை ஒட்டினாற் போல் இருக்கும் அழகான பூக்கள் விரிந்த நிலையில் சிதறல்களாய் இருப்பது சேலைக்கு மெருகூட்டும்.



மதுரா அதைக் கட்டிக் கொண்டு நளினமாய் வந்து நிற்க, உதயா ஹாண்ட் பேக்கை தூக்கிக் கொண்டு வந்தவள், ''வாவ்! தோகை விரிக்காத மயில் ஒன்று இங்கு நிற்கிறதே..! யாராவது பிடித்துக் கொண்டு போய் விடப் போகிறார்கள்!'' - எனப் புகழ்.. சத்தம் கேட்டு கௌரியும் வந்து விட்டாள்.

அவளும் வியந்தாள்.

''உதயா.. மயில்தான்! ஆனால் அழகு மயில் என்று சொல்! சொன்னாலும் சொல்லாவிட்டாலும் நிர்மலா கொள்ளை அழகுதான்! என் கண்ணே பட்டு விடும் போல் தெரிகிறதே!'' என்றபடி பெரிய மனுஷி போல் கைகளால் அவள் முகம் சுற்றி நெட்டி முறித்தாள்.

''ச்சு.. சும்மா... இருங்கப்பா... நீங்கள் வைக்கும் ஐஸ்ஸில் ஜலதோஷமே வந்துவிடும்..!'' என போலியாய் விலகுவது போல் விலகி கைதட்டி சிரித்தாள் மதுரா.

மற்ற இருவரும் சுடிதாரில் இருந்ததாலோ என்னவோ.. அவர்களை விட சேலையில் இருந்த மதுராவின் அழகு தூக்கியடிக்கத்தான் செய்தது.

உதயா மறுபடியும் மதுராவை உற்றுப் பார்த்துவிட்டு கண்களால் கௌரிக்கு எதையோ ஜாடை செய்வதை மதுரா கவனித்து விட்டாள்.

ஒரு நிமிடம் இருங்கள்...'' என்றபடி சட்டென அவள் அகன்றபோது மதுராவுக்கு உள்ளுக்குள் ஏதோ உறுத்தியது.

உதயா ஏதேதோ வெட்டியாகப் பேசி நேரம் கடத்திக் கொண்டிருக்க.. மதுராவுக்கு ஓரளவு புரிந்தும் விட்டது.

சிறிது நேரத்தில் கௌரி எதையோ மறந்து விட்டதை எடுத்து வந்தவள் போல் திரும்பினாள். அவள் வந்த சில நிமிடங்களில் தற்செயலாய் அங்கு வருவது போல் தோன்றினான் கிரிதரன்.

அவன் தயங்கிப் போட்ட நடையையும் அசடாய் வழிந்த முகத்தையும் பார்த்து மதுரா யூகித்து விட்டாள்.

வேறு என்ன? உதயா கௌரியை அனுப்பி அவனை வரச் சொல்லியிருக்கிறாள்?

எதற்காக? அவளுக்கு கிரிதரன் மீது ஈர்ப்பு, காதல் வருவதற்காகவா?

அதற்காக சொல்லி வைத்தாற்போல் மூவரும் கூட்டணி வைத்துக் கொண்டு இப்படியா செய்வார்கள்?

பக்கத்தில் வந்து கிரிதரன் அவள் நினைத்தது போலவே மேலும் கீழும் அவளைப் பார்த்து ரொம்பவும் ஆச்சரியம் காட்டினான்.

''வாவ்! மதுராவா... இது? என்னால் நம்ப முடியவில்லை. அழகு பளீரிட தங்கத் தேர் போல தகதகத்துக் கொண்டு...''

இது கூட... இவனாக பேசுகிறானா? இல்லை இதையும் உதயா சொல்லிக் கொடுத்து பேசச் சொல்லியிருக்கிறாளா? என நினைப்பு வர மதுரா பக்கென சிரித்து விட்டாள்.

அவளது பார்வையும் அவன் கிரிதரனிடமிருந்து மெல்ல விலகி பின்புறம் தேடியது. தேவேந்திரன் கண்டால் இவன் வருவதை உணர்ந்து பின்னால் வருகிறானா..? என ஆவலாய்ப் பார்த்தது.

எல்லோரும் பாராட்டும் இந்த அழகுச் சேலையில் அந்த நளினமான அழகில் அவனும் பார்த்தால் நன்றாக இருக்குமே? என நினைத்தாள்.



என்ன இது...? அவள் நினைப்பு வீண் போகவில்லை. இதோ தேவேந்திரனே கைகளில் ஏதோ புத்தகத்தை தூக்கிக் கொண்டு முன் ஹால் படிகளேறி வந்து கொண்டிருந்தான்.

தேவேந்திரன் வருவதைப் பார்த்ததும் ஸ்விட்ச் போட்ட பல்ப்பாய் மதுரா முகம் பிரகாசமாகுவதை உதயா கவனித்து விட்டாள்.

கௌரியின் முகமும் தேவேந்திரன் வருவதைப் பார்த்து கறுத்தது.

ஆனால் கிரிதரன் திரும்பி இயல்பான புன்னகையுடன் வரவேற்றான்.

மதுரா எதிர்பார்த்தது போல் கலகலவென சிரிப்புடன் தேவேந்திரன் தோன்றி விட்டான்.

''என்ன எல்லோரும் எங்கோ கிளம்புவது போல் தெரிகிறதே...?'' என்றான்.

''எல்லோரும் அல்ல.. நாங்கள் மூவர் மட்டும் தான்!'' என்றாள் உதயா வெட்டும் விதமாய்.

''கிரிதர் அண்ணாவும் வருகிறார்கள்...'' என்றாள் கௌரி அவசரக் குடுக்கையாய்.

கிரிதரன் இடைமறித்தான்.

''வெறும் ஷாப்பிங் என்றால் வரவில்லை. ஏதாவது சினிமா என்றால் ஓ.கே. நானும் வருகிறேன்.''

''அதனால் என்ன..? புரோகிராமை மாற்றி விட்டால் போச்சு. புதுப்படம் ஒன்று ரிலீஸ் ஆகியிருக்கிறது. அதற்கே போவோம்.''

கௌரி பேசியபடி மற்ற இருவரையும் பார்க்க உதயா தலையாட்டினாள். மதுராவின் பார்வையோ தேவேந்திரன் பக்கம் சென்றது.

அது புரிந்ததாலோ என்னவோ உதயாவே, ''தமிழ் ஐயா சினிமாப் படங்கள் எல்லாம் பார்க்க மாட்டார். அவருக்கு நிறைய வேலை இருக்கும். நாங்கள் கூப்பிட்டால் எல்லாம் வர மாட்டார். அப்படித்தானே ஸார்?'' என்றாள் கேலியாய்.

ஆனால் தேவேந்திரனோ, ''நீங்கள் இவ்வளவு விரும்பிக் கூப்பிடும்போது வராமல் இருப்பேனா.. கண்டிப்பாக வருகிறேன்...!'' என்றான் அவளை ஆச்சரியப்படுத்தும்படி.

தேவேந்திரனின் பதிலில், உதயாவின் முகமோ சுருங்க மதுரா முகம் சூரிய காந்தியாய் மலர்ந்தது.

தேவேந்திரன் அவள் பக்கம் திரும்பி அவளை மேலும் கீழும் நிதானமாய் பார்த்து விட்டுத் திரும்பியது ஒரு வித திருப்தியை ஏற்படுத்தியது. ரசித்திருப்பானா..? ஆனால் ஒன்றுமே சொல்லவில்லையே.. என நினைத்தாள்.

ஆனால் எல்லோரும் கிளம்பி வெளிவந்து ஆட்டோ பிடித்து ஏறுகையில், அவள் ஆட்டோவின் விளிம்புப் பகுதி ஓரமாய் உட்கார்ந்துவிட, ''மயில் தேவதையே பார்த்து ஊர்தி அசைகையில், நீ கீழே விழுந்து விடக் கூடும்!'' என்றான் சுத்தத் தமிழில்.

எல்லோரும் கொல்லென சிரிக்க, உதயா, ''ஐயோ, தமிழ் ஐயா ரம்பத்தை எடுத்து விட்டாரே...?'' என்க மறுபடி சிரிப்பலை பரவியது.

''அதை ரம்பம் என்று கூட சொல்லக்கூடாது. கூர் உளி என்றே சொல்ல வேண்டும்...'' திருத்தினான் தேவேந்திரன்.



''சரி ஐயா! அந்த கூர்உளியை அடிக்கடி எங்கள் மீது உபயோகித்து கூர்மையை தயவு செய்து சோதிக்காதீர்கள் ஐயா...''

''மங்கையே, உன் வேண்டுகோளை தேவேந்திர மன்னர் ஏற்றுக் கொண்டார். பயம் நீங்குவாயாக'' தேவேந்திரன் வேண்டுமென்றே நீட்டி இறக்கிச் சொல்லி நகைக்க... நகையொலி தொடர்ந்தது.

இப்படியே பேச்சும் சிரிப்புமாய் தியேட்டரை அடைந்து விட்டார்கள்.

புதுத் திரைப்படம் என்றாலும் கூட்டம் சுமாராகவே இருந்தது. கிரிதரனும் தேவேந்திரனும் உள்ளே போய் டிக்கெட் எடுத்துவர எல்லோரும் நுழைவுப் பகுதியை நோக்கி நடக்க ஆரம்பித்தனர்.

மதுராவுக்கு சிறு வயதில் இருந்து பார்த்துப் பழக்கம் இல்லாததால் சினிமா பார்ப்பதில் அவ்வளவு நாட்டமும் கிடையாது. எப்போதாவது பக்கத்து வீட்டுத் தோழிகளுடன் அபூர்வமாய் சென்று விட்டு வருவது உண்டு.

அப்படி வந்தாலும் தியேட்டரை விட்டு வெளி வருகையிலே பயங்கரத் தலைவலி ஒன்றைத் தலையில் தாங்கிப் பிடித்தவாறுதான் வருவாள். வீட்டிற்கு வந்த உடனேயே இஞ்சித் துண்டு ஒன்றை அம்மியில் அரைத்து தட்டி தலையில் தேய்த்தவாறு சிறிது நேரம் படுத்து விடுவாள்.

அந்த பயங்கரத் தலைவலி வந்து விடும் என்ற நினைப்பிலே அப்படி சினிமா போகும் எண்ணத்தையே அவள் விட்டு விட்டதும் உண்டு. சொல்லப் போனால் இன்று உதயா முதலிலே சினிமா என்று சொல்லியிருந்தால் வரவில்லை என மறுத்திருப்பாள்.

ஆனால் தேவேந்திரன் வருகிறான் என்றதும் அவளது தலை தானாக சம்மதித்து ஆடியது. ஏனெனில் தியேட்டரில் அவள் பார்க்கப் போவது சினிமாப் படத்தையா? இல்லையே... தேவேந்திரனைத்தானே!

தியேட்டரினுள் நுழைந்து மெல்லிய இருட்டில் ஸீட்டைத் தேடி எல்லோரும் அமரப் போனார்கள். முதலில் கௌரி உட்கார அவளை அடுத்து கிரிதரன் உட்கார பக்கத்தில் உதயா உட்காரப் போனாள். உட்காரப் போனவள் சட்டென சுதாரித்து மதுராவைப் பிடித்து இழுத்து அந்த ஸீட்டில் கிரிதரன் பக்கத்தில், ''நீ இங்கு உட்கார்...'' என உட்கார்த்தி வைத்தாள்.

அடுத்து அவள் உட்கார்ந்து கொண்டு தேவேந்திரனை மறு சேரில் உட்காரச் சொன்னாள்.

தேவேந்திரன் தன் பக்கத்தில் உட்காரப் போவான்.. என நினைத்த மதுராவுக்கு உதயா நுழைந்து சட்டென மாற்றி விட்டது எரிச்சலைக் கிளப்பியது.

அதைவிட கிரிதரன் பக்கத்தில் தான் உட்கார வேண்டும் என திட்டமிட்டு ஜோடி சேர்க்க முயல்வது ஆத்திரமாகவும் இருந்தது.

எப்படி இதைத் தடுக்க..? என எண்ணியவள் படம் தொடங்கிய சிறிது நேரத்தில் வேறு ஒரு ஐடியா செய்தாள்.

''ஐயோ! உதயா எனக்கு மறைக்கிறது. நீ இங்கு வாயேன்!'' என்றபடி சட்டென எழுந்து உதயாவை தன் இருக்கைக்கு மாற்றினாள். தேவேந்திரன் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டாள்.

படத்தை விட உதயாவும் கௌரியும் என்ன செய்வது என கையை, பிசைந்தபடி தவித்ததை ரொம்பவும் ரசித்தாள் மதுரா.



# 19

மறுநாள் வழக்கம்போல் மதிய நேரம் 'தமிழ் வகுப்பு' ஆரம்பமாயிற்று. கௌரி, பயங்கரத் தலைவலி. இன்று வரவில்லை என்று சொல்லிவிட்டாள்.

மதுரா குதி போடாத குறையாய்த் தான் கிளாஸில் தேவேந்திரனை எதிர்பார்த்து உட்கார்ந்திருந்தாள். ரொம்ப நாளைக்குப் பிறகு கௌரி இல்லாமல் தேவேந்திரனை தனியே சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்திருக்கிறதே!

அவளையறியாமல் மனது குதூகலித்துக் கொண்டிருக்க... அன்று வகுப்பில் நுழைந்த தேவேந்திரனும் உற்சாகமாய்த்தான் வந்தான்.

வந்தவன் வேறு எதாவது கொஞ்சம் பேசுவான் என்று எதிர்பார்த்தால் அவனோ படபடவென பாடத்தை ஆரம்பித்து விட்டான். மதுரா எதையோ எதிர்பார்த்தவளுக்கு இது ஏமாற்றமாய்த்தான் இருந்தது.

ஆனால்... அவன் தொடர்ந்து நடத்தியதை சுவாரஸ்யமில்லாமல் கவனித்துக் கொண்டிருந்தவள் தற்செயலாய் காதில் விழுந்த வார்த்தைகளைக் கண்டு தான் திகைத்துப் போனாள்.

தலைவனைப் பார்க்கும் தலைவி, தலைவியைப் பார்க்கும் தலைவன் என்றெல்லாம் காதில் விழ உற்றுக் கேட்டவள் அப்போதுதான் விஷயத்தைப் புரிந்து கொண்டாள்.

தேவேந்திரன் என்றுமில்லாததாய் அன்று சங்ககால மகளிரிடையே ஏற்பட்ட காதல் உணர்வு பற்றிய பாடத்தை நடத்திக் கொண்டிருந்தான். இவ்வளவு நாள் கௌளரி வகுப்பில் இருக்கும்போது அது பற்றியெல்லாம் கொஞ்சமும் பேசாதவன் இன்று மெனக்கெட்டு அந்தப் பாடத்தை தேர்ந்தெடுத்து நடத்திக் கொண்டிருந்தான்.

சொல்லப் போனால் இன்று அவன் நடத்த வேண்டியது தமிழ் இலக்கணம் பற்றிய விளக்கவுரைதான். அதை விட்டு விட்டு வேண்டுமென்றே இந்த 'காதல் பகுதி' பாடத்தை அவன் நடத்துவது போல் இருந்தது.

இவ்வளவு நேரம் கவனியாமல் அசட்டையாய் இருந்து விட்டோமே.. என மதுரா நினைத்தவள் அவசரமாய் காதுகளைத் தீட்டி உன்னிப்பானாள்.

மதுரா, காதலில் பார்வை, கண் ஜாடை மிக மிக முக்கியம். கம்பர் என்ன சொல்லியிருக்கிறார் தெரியுமா?

''கண்ணினை ஒன்றை ஒன்று கவ்வி, அவை உண்ணவும் நிலைபெறா...'' என்கிறார்.

அதாவது பார்வையாலே கண்கள் ஒன்றை ஒன்று கவ்விக் கொண்டு அப்படியே நிலை தடுமாற வைத்து விடுமாம். காதல் பார்வையின் சக்தி அத்தகையதாம்!

சொல்லியபடி தேவேந்திரன் தனது விழிகளை அகல விரித்து மதுராவின் மை விழிக் கண்களை உற்று நோக்கினான். மதுராவுக்கு ஒரு கணம் என்னவோ போல்தான் இருந்தது.

அவளும் பார்வையை விலக்க நினைத்து முடியாதவளாய் இமைகள் விரிய அவனையே உற்றுப் பார்த்தாள். அப்படி விழியோடு விழியாய் நேரிடையாய் பார்ப்பதே என்னென்னவோ செய்திகளை விஷயங்களை... பார்வையாலே பரிமாறிக் கொள்வது போல் உணர்ந்து.. சிலிர்க்கவும் செய்தாள்.



கொஞ்ச நிமிடங்கள் அப்படியே எவ்விதப் பேச்சும் இல்லாமல் இருவரும் ஒருவரை ஒருவர் விழுங்கும் பார்வைதான் பார்த்துக் கொண்டிருந்தனர். அவளது படபடப்பான விழிகள் நிலை கொத்தி நின்றது போல்தான் அவன் மீது படர்ந்தது. அவனது நிலையும் அப்படித்தான் போலும்.

அசையாத தோற்றத்துடன் கற்சிலை வீரன் போல் கண்கள் மட்டும் பளபளக்க அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். அவனது காந்த விழிகளின் அபார வீச்சு மை விழி அழகி மதுராவை மெல்ல வீழ்த்தி மயக்கத்திற்கே கொண்டு செல்வது போல் இருந்தது. ஏனெனில் அவள் கருவிழிகள் மெல்ல இமை நோக்கி உயர ஒருவித கிறக்கத்துடன் அவனை நோக்கி தலை சாய்த்துக் கொண்டிருந்தாள்.

சட்டென ஒரு கட்டத்தில் தேவேந்திரன் பார்வையை நிறுத்தி சுதாரித்தான்.

தலையைச் சிலுப்பியபடி நிமிர்ந்து கொண்டவன், ''மதுரா இப்படியொரு காதல் பார்வையைத் தான் தலைவனும் தலைவியும் அடிக்கடி பார்த்து தங்களது காதலை பரிமாறிக் கொள்வார்கள், காதலை வளர்த்துக் கொள்வார்கள் என சங்க கால இலக்கியங்களில் சொல்லப்பட்டிருக்கிறது...'' என தெளிவான குரலில் உச்சரித்து இவ்வளவு நேரம் தான் நடத்தியது பாடம்தான் என்பதுபோல் கொண்டு வரவும் தன் நிலை உணர்ந்து உணர்வுக்கு வந்தாள் மதுரா.

கண்ணைத் திறந்து கொண்டே குழிக்குள் விழுந்த கதையாய் அவன் தேவேந்திரனை தான் இப்படி விழிகள் விரிய பார்த்துக் கொண்டே மயங்கிப் போய் விடுகிறோமோ? என நினைத்து அதிரவும் செய்தாள்.

அவன் சாதாரணமாய் எதையாவது பேசினால் கூட காணாததைக் கண்டது போல் அவனது முகத்தைப் பார்த்து அப்படியே கிறங்கும் அளவுக்கு தனக்கு அந்த காதல் பைத்தியம் பிடித்து விட்டதா.. என பயப்படவும் செய்தாள்.

அவன் தேவேந்திரனுக்கும் அப்படிச் சில உணர்வுகள் ஏற்படுகிறதோ என்னவோ.. பாடம் நடத்திக் கொண்டிருக்கிறவன் சில நேரங்களில் சட்டென அவளைப் பார்த்ததும் தடுமாறுவது தெரிந்தது.

## 20

**நா**ளுக்கு நாள் உதயாவும் கௌரியும் 'காதல் விடு தூது போல்' நடந்து கொள்வது மதுராவுக்கு பெரும் எரிச்சலைக் கிளம்பியது.

கனி பழுக்கவில்லை என்றால் கல்லால் அடித்து பழுக்கச் செய்வார்கள் போலிருக்கிறதே! அண்ணனுக்காக ஒரு தங்கைகள் இப்படியாய் அலைவார்கள் என சினமாகவும் எண்ணினாள்.

அதிலும் கௌரி தினமும் தமிழ் படிக்கிறேன் என அவளுடன் தேவேந்திரன் நடத்தும் தமிழ் வகுப்பிற்கு வந்து செய்யும் சேஷ்டைகளை சகிக்க முடியாமல்தான் இருந்தது.



கௌரியின் ஒரே குறிக்கோள் அவளும் தேவேந்திரனும் பேசுவதை தடுப்பது என்பது போல்தான் இருந்தது. அதனாலே பாடத்தில் கொஞ்சமும் லயிக்காமல் எதையாவது தேவையில்லாத கேள்விகளை கேட்பாள். உதவாக்கரை விஷயங்களைச் சொல்லி குழப்புவாள்.

அவள் தொடர்ந்து இப்படிச் செய்வதைக் கண்ட தேவேந்திரனே அவளிடம் ஒரு நாள் முகத்தை கடுமையாய் வைத்தபடி, ''என்ன கௌரி உன் விளையாட்டுத்தனத்திற்கு ஒரு எல்லையே இல்லையா...?'' என கேட்டும் விட்டான்.

அதற்கும் முகத்தை கோணலாய் வைத்துச் சிரித்தவள், ''கோபப் படாதீர்கள் தமிழ் ஐயா, இனி தங்கள் வகுப்பில் நல்ல மாணவியாய் நடந்து கொள்வேன்..!'' என பவ்யம் காட்டினாள்.

அன்றைய தினம் மாலையில் மதுராவை வேண்டுமென்றே வம்புக்கிழுப்பது போல், ''மதுரா, உன்னிடம் எத்தனை நாளாய் சொல்லிக் கொண்டிருக்கிறேன். பதில் சொல்லாமல் இருக்கிறாயே?'' என்றாள் பீடிகையாய்.

இன்று என்ன குழப்பம் செய்ய திட்டமிட்டிருக்கிறாள் என்ற சிந்தனையுடன் நிமிர்ந்த மதுரா, ''நீ சொல்வது புரியவில்லையே கௌரி...'' என்றாள் கண்களை அகல விரித்தவாறு.

''புரியவில்லை...? மிஸ்டர் தேவேந்திரன் விஷயம்...'' என்றாள் மொட்டையாக.

தேவேந்திரன் பெயரைச் சொன்னதும் தன்னை அறியாமல் உற்சாகம் எழுவதை உணர்ந்த மதுரா திகைப்புடன் அதை அடக்கிக் கொண்டு,

''ஏன்.. அவருக்கென்ன..?'' என்றாள்.

''அவரை நான் விரும்புகிறேன் என்று சொன்னேன் அல்லவா?''

சொல்லிவிட்டு கௌரி தன்னையே உற்றுப் பார்த்ததும் அவள் தன்னை சீண்டிப் பார்க்கிறாள் என்பதைப் புரிந்து கொண்ட மதுரா அமைதி காக்க முடிவு செய்தாள். சலனமில்லாத முகத்துடனே அவளைப் பார்த்தாள்.

''புரிகிறதா மதுரா? நான் தேவேந்திரனை விரும்பு கிறேன் அல்லவா..?''

''புரிகிறது. நீ விரும்புகிறாய். அப்படியே அதை அவரிடமும் சொல்ல வேண்டியதுதானே?''

''ம்ஹூம்! அந்த தைரியம்தான் எனக்கில்லையே! இந்த விஷயத்தில் நானும் உன்னைப்போல் தான்...!'' என சோகமாய் முகத்தை வைத்துக் கொண்டு.

''என்ன.. என்னைப் போலவா?''

''ம்ம்... அதான்.. நீ கிரிதரன் அண்ணாவை மனதுள் காதலித்துக் கொண்டு.. அதை கிரிதரிடமோ மற்றவர் களிடமோ, சொல்ல தைரியம் இல்லாதவளாய் யாரிடமும் சொல்லாமல் இருக்கிறாயே.. அது போல்தான். நானும்... தேவேந்திரனிடம் சொல்லவில்லை. எனக்கு பயமாய்த் தான் இருக்கிறது..!''

கௌரி இப்படிச் சொன்னதும் மதுரா அடக்க முடியாமல் கடகடவென சிரிக்க ஆரம்பித்து விட்டாள்.

அவள் சிரிப்பதைக் கண்டு பெரும் புதிராய் பார்த்தாள் கௌரி.

''என்ன சிரிக்கிறாய்?''



''நான் நினைத்தது சரிதான்...'' என்றாள் பீடிகையாய்.

''என்ன.. என்ன நினைத்தாய்?''

''நான் கிரிதரனை காதலிக்கவில்லை. எல்லோரும் சும்மாவாக அப்படி இருப்பது போல் சொல்லி விளை யாடுகிறார்கள். அதுபோல்தான் நீயும் என நினைக்கிறேன். சும்மாவாக விளையாட்டுக்காக தேவேந்திரனை நீ காதலிப்பது போல பரப்பிக் கொண்டிருக்கிறாய். அது உண்மையில்லை என்று எனக்குத் தெரியும்...''

''என்ன நான் சொல்வது உண்மையில்லையா? நீ நம்ப மாட்டாயா?''

தலையை காது மடல்கள் அதிர மறுப்பாய் மதுரா ஆட்டி அதை உறுதி செய்தவள், ''நீ சொல்வதை நான் நம்ப மாட்டேன். அதற்கு முக்கிய காரணம் என்ன தெரியுமா?''

''என்ன காரணம்?'' புரியாமல் புருவம் உயர்த்தினாள் கௌரி.

''தேவேந்திரன் உண்மையிலே ஒரு பெண்ணை காதலிக்கிறார்...'' என அழுத்தமாய் மதுரா உச்சரித்தவள் ஒரு நிமிடம் நிறுத்திவிட்டு,

''அது நிச்சயமாய் நீ... அல்ல..'' என்றாள்.

மதுரா சொன்ன விஷயத்தைக் கண்டு கௌரி பலமாய் அதிர்வது அவள் முகத்திலேயே தெரிந்தது. இருந்தும் அதை கொஞ்சமும் வெளிக் காட்ட விரும்பாதவளாய் தலையை சிலுப்பிக் கொண்டு அவளைப் பார்த்தாளாம்.

''வேறு யாராம்...?''

''அது.. அது...'' என இழுத்த மதுரா ஒரு கணம் என்ன சொல்லி சமாளிப்பது என யோசித்தாள்.

''சொல்லு மதுரா... யார் அது?''

பரபரத்தாள் கௌரி.

''யார் என்று எனக்கே தெரியாது...''

''தெரியாதா?''

''ஆம். தேவேந்திரன் தான் ஒரு பெண்ணைக் காதலிப்பதாய்ச் சொன்னவர் அது யார் என்று மட்டும் சொல்ல மாட்டேன் என மறுத்து விட்டார்...''

''நிஜமாக... இப்படிச் சொன்னாரா?''

அவள் கௌரி தான் சொன்னதை நம்பி விட்டாள் என்றதும் உற்சாகமாகி விட்டாள் மதுரா.

''ஐயோ! நிஜம் கௌரி. ஒரு பெண்ணை காதலிப்பதாகவும் அந்தப் பெண்ணையே தான் கல்யாணம் செய்து கொள்ளப் போவதாகவும் என்னிடம் உறுதியாகச் சொல்லியிருக்கிறார். இதில் ஒரு வேடிக்கையும் இருப்பதாகச் சொன்னார். அது என்ன தெரியுமா?''

''என்ன மதுரா அது?''

''அவர் காதலிக்கும் விஷயம் அந்தப் பெண்ணுக்கும் தெரியாதாம். அதை அவர் இன்னமும் அவளிடம் சொல்லவில்லையாம்...''

''அப்படியா? சரிதான்.. ஒரு தலைக்காதல்!''

அவள் சொல்ல வேகமாய் மறுத்து தலையசைத்தாள் மதுரா.

''அதுதான் இல்லை.. கௌரி! அந்தப் பெண் உள்ளூர தன்னை விரும்புவதை தேவேந்திரன் நன்றாக அறிகிறாராம். அதனாலே.. இப்படிச் சொல்லாமல் இருக்கும் காதல் கண்ணாமூச்சி விளையாட்டை அவளிடம் விளையாடுகிறாராம். அவளும்...''



பேசியவாறே தன்னுள் எழுந்த சிரிப்பை வெகு சிரமப்பட்டு அடக்கிய மதுரா, அதை கௌரி கொஞ்சமும் கண்டு பிடித்து விடக் கூடாது.. என அப்படியே திரும்பி நின்று கொள்ளப் போனாள்.

திரும்பியவள் அப்படியே வார்த்தைகள் வராமல் ஸ்தம்பித்துப் போனாள்.

சுவரோரத்தில் கைகட்டியபடி தேவேந்திரன் நின்று கொண்டிருந்தான்!

# 21

கௌரியிடம் வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு 'ரீல்' விடாத குறையாய் பேசிக் கொண்டிருந்த மதுரா திரும்பி. தற்செயலாய்ப் பார்த்து அப்படியே உறைந்து விட்டாள்.

சுவரோரமாய் தேவேந்திரன் நின்று அவர்கள் இருவரும் பேசுவதை கேட்டபடி!

அவள் கைகட்டி நின்ற தோரணையும், அவன் விழி விரித்துப் பார்த்த துளைக்கும் பார்வையும் அவன் பேசியது எல்லாவற்றையும் கேட்டு விட்டான் என்பதை உணர்த்தின.

ஐயையோ...! அவன் நிற்பது தெரியாமல் கௌரியிடம் என்னென்னமோ உளறி விட்டோமே! என உதட்டை அழுந்தக் கடித்தவள் முகம் சிவந்து போனவளாய் குனிந்தாள்.

அவனை நிமிர்ந்து பார்க்கத் தைரியமில்லாதவளாய் விழிகள் தாழ இருந்தவள் சிறிது நிமிடங்களில் மெல்ல தலை உயர்த்திய போது அதிரத்தான் செய்தாள்.

தேவேந்திரன் சிரித்தபடி மெல்லத் திரும்பி வந்த சுவடு தெரியாமல் ஓசையெழுப்பாமல் அங்கிருந்து அகன்று கொண்டிருந்தான். கௌரி பக்கம் சுவர் மறைத்திருந்ததால், அவன் வந்து நின்றதோ... பேச்சை கேட்டு விட்டுத் திரும்பிச் சென்றதோ... எதுவும் தெரியவில்லை. எதையும் அவள் உணரவில்லை!

அவள் பாட்டுக்கு கௌரி தானாகவே எதையோ பேசி கேள்விகளும் கேட்டுக் கொண்டிருந்தவள் அப்போது தான் மதுரா மௌனமாகி விட்டிருந்ததை உணர்ந்து, ''என்ன மதுரா, நான் பாட்டுக்கு கேள்விகள் கேட்டுக் கொண்டிருக்கிறேன். உன்னுடைய பதில்தான் என்ன?'' என்றாள்.

நல்லவேளை! இவள் தேவேந்திரன் வந்ததையோ அவன் திரும்பிச் சென்றதையோ கவனிக்கவில்லை என உள்ளூர மகிழ்ந்தவள், தொடர்ந்து அவள் கௌரி, என கேள்விக்கு என்ன பதில்... என்ன பதில்? எனக் கேட்கவும், தெரியாத கேள்விக்கு என்ன பதிலைச் சொல்ல முடியும் என்ற நினைப்போடு, ''மௌனம் தான் எனது பதில்...'' என்றாள்.

''என்ன... உன் பதில் மௌனமா?'' என ஒரு கணம் விழித்த கௌரி, ''ஓ... மௌனம்... சம்மதம்..? நீ அந்த அர்த்தத்தில் சொல்கிறாயா?'' என அதற்கும் ஒரு விளக்கம் கேட்க, ''சரி.. அசடே! நீ என்ன வேண்டுமானாலும் நினைத்துக் கொள்..!' என்பது போல் இதழ் விரிந்த பெரும் புன்னகையொன்றை அவளை நோக்கி உதிர விட்டாள் மதுரா.



அத்தோடு கௌரி அகன்றாள். 'அப்பாடா.. விட்டாளே..' என்பது போல் மதுரா பெருமூச்சுடன் அகன்று தன் ரூமிற்கு ஓடினாள். சிறிய மெத்தைக் கட்டிலில் கவிழ்ந்து விழுந்தவள் கன்னத்தில் கை பதித்து தேவேந்திரனை நினைத்தாள்.

கௌரியின் பேச்சை மாற்றுவதாய் நினைத்து தேவேந்திரன் பற்றி என்ன என்னவெல்லாம் கதையளந்து விட்டாள்.

அவன் யாரையோ காதலிப்பதாகவும் தன்னிடம் சொல்லியதாகவும் அல்லவா சொல்லி கலர்க்கலர் ரீல் விட்டிருந்தாள். கேட்டிருந்த தேவேந்திரன் என்ன நினைப்பான்? இப்படி காதல்.. கீதல்.. என பொய்யாய் கூசாமல் பேசுகிறாளே.. இவள் சரியான 'அலைகிற கேஸா?' என மட்டமாய் நினைத்து விட மாட்டாள்?

அதைவிட இன்னொரு ஆச்சரியமாய் அவ்வளவையும் கேட்டு விட்டு ஒன்றும் சொல்லாமல், உள்ளே நுழைந்து கௌரியிடம் தேவேந்திரன் நழுவியது அவளைப் பெரிதும் திகைப்பாக்கியது.

எதற்காக அவன் அப்படிச் செய்ய வேண்டும்?

சொல்லப் போனால் மதுரா சொல்வதைக் கேட்டு கோபமாய் அல்லவா... அவன் பேச்சில் நுழைந்திருக்க வேண்டும்?

அதை விட்டு விட்டு அவள் பேசுவதை ரசித்தவன் போல் அல்லவா சிரிப்புடன் நழுவினான்!

அது மட்டுமா? கௌரியிடம் அவளை மாட்டி விடும் எண்ணமும் அவனுக்கு இல்லையே! அதனாலேதான் வந்தவன் சிறிதும் ஓசை எழுப்பாமல் கௌரி கண்டு பிடித்து விடாதபடி நழுவினான்? எதற்காக இப்படிச்

செய்ய வேண்டும்? தேவேந்திரன் இப்படி நடந்து கொண்டதன் நோக்கம் தான் என்ன?

யோசித்து யோசித்துப் பார்த்தவள் விடை காண முடியாமல் தவிக்கத்தான் செய்தாள். அதே நேரத்தில் இப்படி சம்பந்தமில்லாமல் அவனைப் பற்றி இல்லாததும் பொல்லாததுமாய் தான் சொன்னதற்கு கொஞ்சமாவது அவனுக்கு விளக்கம் கொடுக்க வேண்டும் அல்லது மன்னிப்பாவது கேட்க வேண்டும் என நினைத்தாள்.

அப்படிக் கேட்காமல் இருந்து விட்டால் தேவேந்திரன் கண்டிப்பாக அவளைப் பற்றி தவறாகத்தான் எண்ணு வான். தவறாக என்ன... சரியான அலைகிற கேஸ்.. என மட்டமாக கூட நினைத்து விடக் கூடும்.

அதே நினைப்பு தாக்க யோசித்தவள் அதற்கு மேல் பொறுக்க முடியாதவளாய் அன்று இரவு எட்டு மணி வாக்கில் தேவேந்திரனைத் தேடிச் சென்று விட்டாள்.

தோட்டத்துப் பக்கம் உள்ள புல்வெளியில் இரவில் அவன் வாக்கிங் போல் நடை பயிற்சி செய்வதைப் பார்த் திருக்கிறாள். அவள் தேடிச் சென்ற போதும் மெல்லிய நிலவொளியில் அவன் சிங்கம் போல் நெஞ்சு நிமிர நடந்து கொண்டிருந்தான்.

அவள் வருவதைப் பார்த்ததும் கைகளைக் கட்டியபடி நின்றான். பரந்த மார்பும், திண் தோள்களுமாய் அவன் நின்ற விதம் கிரேக்கச் சிலை வீரர்களை அவளுக்கு நினைவு படுத்தியது.

ஓரிரு நிமிடம் அசையாமல் அவனையே கண்கள் விரியப் பார்த்தாள்.



அவனும் அவள் பார்ப்பதை உணர்ந்து நிதானமாய் அவளை ஊடுருவினான். அந்த அவளின் நீளமான கூந்தல் அழகு, தழையத் தழைய பின்னி நிறைய பூக்கள் வைத்திருந்த அழகு, மயக்கும் காந்த விழிகளில் லேசாக மை தீட்டி இருந்தது. அந்த அழகான இமைகளின் படபடப்பு.. எல்லாவற்றையும் தூக்கியடிக்கும் நளினமான உடலமைப்பு...

அவன் பார்த்துக் கொண்டிருக்கும் போதே அவள் மெல்ல நடந்து அவன் அருகில் சென்றாள்.

''என்னை மன்னித்து விடுங்கள்...'' என்றாள் மெல்லிய குரலில்.

அவன் பார்வையை விரித்து புருவத்தை உயர்த்தினான்.

''மன்னிப்பா...? எதற்கு?''

''கௌரியிடம் உங்களைப் பற்றி தப்பாக நிறையச் சொல்லி விட்டேன்...''

''தப்பாகவா... அப்படி என்ன சொன்னாய்?''

அவன் எதுவுமே தெரியாதது போல் கேட்கவும் அவளுக்கு திடீர் சந்தேகமும் வந்து விட்டது. ஒரு வேளை இவன் அவர்கள் பேசிய முழுவதையும் கேட்கவில்லையா? தற்செயலாய் கடைசியில்தான் அங்கு வந்திருப்பானோ?

அவள் நினைப்பை புரிந்தவன் போல் தெளிவாக்கி னான் அவன். ''நீங்கள் பேசியது முழுவதையும் கேட்டு விட்டேன்...'' என்றான் அமைதியாக.

அவள் துணுக்குற்றாள்.

எல்லாவற்றையும் கேட்டு விட்டு தப்பாக என்ன சொன்னாய்... என்று எதற்கு கேட்கிறான்?

அவனே விளக்கமும் கொடுத்தான்.

''புரியவில்லையா...? நீ கௌரியிடம் சொன்ன விஷயங்களில் எதையெல்லாம் தப்பாக நினைக்கிறாய்.. என்று.. கேட்டேன்..''

ஆஹா.. இவன் சாதாரண ஆள் இல்லை. பெரிய கொம்பன்தான் என நினைத்தவள், ''அது... அது...'' என வார்த்தைகள் வராமல் திணறத்தான் செய்தாள்.

''சும்மாச் சொல்லு...'' என்றான் தைரியம் கொடுப்பது போல்.

''அது.. நீங்கள் ஒரு பெண்ணை விரும்புவதாக கௌரியிடம் பொய் சொன்னேன்... அது... அது.. தவறுதான்..!''

அவள் சொல்லியதும் கடகடவென சிரித்து நிறுத்தியவன், ''நீ சொல்லியது பொய் அல்ல. மெய்தான்...!'' என்றான் அவளை அதிர வைத்தவாறு.

அவள் முகம் விரிய அவனைத் திரும்பிப் பார்த்தாள். என்ன இது ! அவள் விளையாட்டுக்குச் சொன்னது உண்மையாயிற்றா? நிஜமாகவே அவன் யாரையேனும் காதலித்து வருகிறானா? கடவுளே...

அவள் உள்ளூர பயந்து போனவளாய் நடுங்காத குறையாய்த்தான் அவனைப் பார்த்தாள்.

''நீ.. நீங்கள்.. நீங்சள்... காதலிக்கிறீர்களா?''

திக்கித் திணறி அவள் கேட்டதை ரசித்துப் பார்த்தான் தேவேந்திரன்.

''ஆ... ஆமாம்...''



அழுத்தந்திருத்தமாய் சொன்னது அவளை ஒரு கணம் கலங்கத்தான் வைத்தது. படபடப்பு தொற்றிக் கொண்டவளாய் அவனையே பார்த்தாள்.

''யாரை...?'' என்றாள்.

அவன் சிரித்து மறுபடியும் கைகளை விரித்துக் காட்டினாள்.

''வேறு யார்? ஒரு பெண்ணைத்தான்! ஒரு ஆண் ஒரு பெண்ணைத்தானே காதலிக்க முடியும்?''

அவனது ஹாஸ்யத்தை கொஞ்சமும் ரஸிக்காமல் விடை தெரிந்து கொள்வதிலே ஆர்வம் காட்டினாள்.

''அந்தப் பெண் யார்?'' என்றாள்.

அவள் இப்படிக் கேட்டதும் அவன் மெல்ல இரண்டடி முன் வந்து விரிந்து படபடக்கும் அவளது மை விழிக் கண்களையே உற்றுப் பார்த்தான்.

''அதை சொல்ல முடியாத நிலையில் நான் இப்போது இருக்கிறேன்...'' என்றான்.

அவளுக்குப் புரியவில்லை.

''என்ன சொல்கிறீர்கள்? சொல்ல முடியாத நிலையிலா?''

அவள் கேட்டதற்கு தலையை வேகமாய் அசைத்தபடி அவளைப் பார்த்தான். ''மதுரா, அந்தப் பெண்ணிடம் எனது காதல் விஷயத்தை நான் இன்னும் சொல்லவில்லை. அந்தப் பெண்ணுக்கும் நான் அவளை இப்படி உள்ளூர காதலிப்பது தெரியாது. அதனால் அதையெல்லாம் தெரிந்து கொண்டு காதல் உறுதியானதும் அந்தப் பெண் யார்? என உன்னிடம் சொல்கிறேன். சரிதானா?''

பெரிய விளக்கம் கொடுத்து கேட்பது போல் அவன் கேட்க... அவளுக்கு சப்பென்று தான் போய் விட்டது. எதையோ சொல்ல வருகிறான் என பார்த்தால் ஒன்றுமே சொல்லாமல் விட்டு விட்டானே.. என நினைத்தாள்.

அதன் பின் ஒன்றும் பேசாமல் திரும்பி நடந்து தன் ரூமிற்கு வந்து விட்டாள்.

படுக்கையில் படுத்தபோது ஒரு விஷயம் மிகையாய் உறுத்தியது. தேவேந்திரன் அவள் பொய்யாய் சொன்னவைகளுக்கு கொஞ்சமும் கோபப்படவில்லை. அதைவிட அவள் பொய்யாய்ச் சொன்னவைகள் அத்தனையையும் உண்மைபோல் நிஜம் போல் ஆக்கி விட்டான்...!

அவன் ஒரு பெண்ணைக் காதலிக்கிறான். அது அந்தப் பெண்ணிற்கே தெரியாது என ரீல் விட்டதே அவள் தானே! அதையையே அவளிடம் திருப்பிச் சொல்லுகிறான். தனது நிலையும் அதுதான் என்கிறான். புரிந்ததா? என்கிறான். இவன் என்னதான் சொல்ல வருகிறான்? தேவேந்திரன் சொன்னதை நினைத்து தூக்கம் வராமல் குழம்பத்தான் செய்தாள் அவள்.

## 22

மறுநாள் தந்தை சதாசிவம் வழக்கம் போல் கோயிலுக்குக் கிளம்பியவர் என்றுமில்லாத அதிசயமாய் அவளையும் அழைத்தார்.



மதுராவும் தந்தையுடன் சென்று வெகு நாட்கள் ஆகி விட்டதே. என சம்மதித்து கிளம்பினாள். ஊரின் மிகப் பெரிய சிவன் கோவில் அது. இருவரும் சாமியை கும்பிட்டு பூஜித்தபடி கோயிலைச் சுற்றிய வெளிப் பிரகாரத்திற்கு நடந்து வந்தனர்.

அங்குள்ள சிமெண்டு இருக்கைகள் பக்கம் வந்ததும், "கொஞ்சம் உட்காருவோம்..." என்றார் சதாசிவம்.

இருவரும் உட்கார்ந்தார்கள்.

"உன்னிடம் ஒரு முக்கியமான விஷயம் பேச வேண்டும் அம்மா..." என்று சதாசிவம் ஆரம்பித்ததும் தான் தந்தை ஏதோ காரணத்துடன் தான் தன்னை கோயிலுக்கு கூட்டி வந்திருக்கிறார் என்பது அவளுக்குப் புரிந்தது.

"என்ன விஷயம்?" என்றாள் ஆவலாய்.

"எல்லாம் நம் கிரிதரன் பற்றித்தான்!" - என்றபடி சதாசிவம் ஆரம்பிக்க கிரிதரன் பெயரை.. தந்தை உச்சரித்ததும் அவளுக்கு திடுக்கென்று தான் இருந்தது.

"என்ன கிரிதரன் பற்றியா?"

அவளது வியப்பிற்கு மெல்ல தலையசைத்தார் சதாசிவம்.

"கிரிதரன்.. அவர்.. அவர் பற்றி.. நீ.. என்ன நினைக்கிறாய் அம்மா..?"

தந்தையின் கேள்வி அவள் சற்றும் எதிர்பாராத விஷயமாததால் தடுமாறவே செய்தாள் மதுரா.

"அது.. அது... அவர்... கிரிதரன் நல்லவர்.. நல்லவர் தானப்பா..." என்றவள் விடாது,

''எதற்கு எதற்கு.. கேட்கிறீர்கள்?'' என்றாள் விழிகள் விரிய.

''எல்லாம் காரணமாகத்தான்! முக்கியமாக.. கிரிதரனை உனக்கு.. பிடிக்குமா? பிடித்திருக்கிறதா.. அம்மா?'' என்றார் மறுபடியும் பீடிகையாய்.

மதுராவுக்கு சுருக்கென ஏதோ புரிந்தது. அப்பா சரியான காரணமில்லாமல் இப்படியெல்லாம் கேட்கிறவர் அல்ல. யாரோ அவரிடம் சொல்லி கேட்டிருக்க வேண்டும். அல்லது கேட்கச் சொல்லியிருக்க வேண்டும்.

யாராயிருக்கும்?

அவள் நினைக்கும் போதே அவள் அழகான தலையைச் சாய்த்து விழிகள் உயர யோசிக்கும் அழகை உற்றுப் பார்த்தவர், ''மதும்மா, நான் கேட்பது காரணமாகத்தான். எல்லாம் உன் அத்தை விருப்பப் படுவதினால்தான்...''

மதுராவுக்குப் புரிந்து விட்டது.

அத்தை ஏற்பாடுதான்!

''அத்தை உங்களிடம் என்ன கேட்டார்கள்? அதைச் சொல்லுங்களப்பா...!'' என்றாள் நேரிடையாய் விஷயத்திற்கு வந்தவளாய்.

''மதும்மா... அத்தைக்கு உன்னையே மாட்டுப் பெண்ணாய் வீட்டு மருமகளாய் கொண்டு வரத் திட்டம். கிரிதரனை நீ கட்டிக் கொண்டால் அது எல்லாம் நடந்து விடும். நம் சொந்தம் கூடிவிடும். இதையெல்லாம் அவள் எனக்கு சொன்னபோது எனக்கும் சந்தோஷமாகத்தான் இருந்தது. ஆனாலும்...''



''சொல்லுங்களப்பா...''

''உன்னிடம்.. உன் விருப்பம் அவசியம் தெரிந்து கொள்ள வேண்டும். தெரிந்து விட்டுத்தான் பதில் சொல்வதாகச் சொல்லி இருக்கிறேன்...''

''அப்படியா?''

மதுராவின் வாய்தான் எதையோ பேசி கேட்டுக் கொண்டிருந்தது தவிர முகம் எதுவோ தீவிரமான சிந்தனைக்குப் போய் விட்டது.

அப்பா நேரிடையாய் கேட்கிறாரே! என்ன பதில் சொல்வது?

கிரிதரன் பற்றியே இவ்வளவு பேசுகிறவர்கள் அவளது நிலையை கொஞ்சமும் அறிய மாட்டார்களா?

''என்னம்மா யோசிக்கிறாய்?''

திடீரெனத்தான் மதுராவுக்கு தான் முன்பு கிரிதரனிடம் சொன்ன விஷயம் ஞாபகத்திற்கு வந்தது.

''அப்பா, நான் முன்பே கிரிதர அத்தானிடம் சொல்லி இருக்கிறேன். ஒரு லட்சியம் போல் டிகிரி படிப்பு முடித்து விட்டு இது பற்றி யோசிக்கலாம் ஒரு முடிவெடுக்கலாம் என்று சொல்லியிருக்கிறேன். கிரிதரும் சரியென்று தான் சொன்னார்கள்.''

''அப்படியா?''

இந்த விஷயம் சதாசிவத்துக்கு தெரியாததால் நெற்றியைச் சுருக்கினார் அவர்.

அவருக்கும் மதுரா நேரிடையாக பதில் சொல்லாமல் சுற்றி வளைப்பது புரிந்தது. ஆனாலும் சில விஷயங்களை

தெளிவு படுத்திவிட வேண்டும் என்று அவர் நினைத்திருக்க வேண்டும்.

அதனாலே பேச்சைத் தொடர்ந்தார். ''மதுக்குட்டி, நீ நினைப்பது சரிதான். உன் படிப்பு முடிந்த பின் கூட இது பற்றி பேசிக் கொள்ளலாம். ஆனால்...''

சதாசிவம் மறுபடியும் சொல்லத் தயங்குபவர் போல நிறுத்தினார்.

''சொல்லுங்களப்பா...''

''அத்தை, பெரியப்பா எல்லோரும் உன்னை கிரிதருக்கு நிச்சயித்து விட்டது போலவே பேச ஆரம்பித்து விட்டார்கள். மேலும் அவர்கள் முக்கியமாய் விரும்புவது.. இந்த சொந்தம் விட்டு விடக்கூடாது என்பதுதான். நீ அவர்களது மருமகளாகி விட்டால் நம் சொந்தம் இன்னமும் நெருக்கமாகி விடும்.'' என்றவர் நிறுத்திவிட்டு மதுராவையே ஒரு கணம்'' உற்றுப் பார்த்தார்.

''ஒருவேளை ஏதாவது காரணங்களால் இப்படியெல்லாம் நடக்காமல் போய் விட்டால் என்ன ஆகும் தெரியுமா அம்மா?''

''என்ன ஆகும்.. நீங்களே சொல்லுங்கள்!'' என்றாள் மதுரா புரியாதவளாய்.

''என் தங்கைக்கு.. அதாவது உன் அத்தைக்கு பயங்கர கோபம் வந்து விடும். என் பையனுக்கு உன் பெண்ணைக் கொடுக்க மாட்டாயா? என ஆவேசமாகி விடுவாள். பெண் கொடுக்காத... நீ எனக்கு சொந்தமும் கிடையாது. உனக்கும் எனக்கும் எந்த உறவுமில்லை.. என்றெல்லாம் ரகளை



செய்து விடுவாள். அதற்குப் பின் முன்பு போல நாம் சொந்தங்களை எல்லாம் இழந்து தனி மரமாகி விடுவோம்...''

அப்பா சொல்லி முடித்ததும் மதுராவுக்கு எல்லாமே தெளிவாகப் புரிந்து விட்டது.

அப்பா சொல்வது உண்மைதான். கிரிதரனை கட்டிக் கொள்ளா விட்டால்.. அத்தையுடன் எந்த முகத்தை வைத்துக் கொண்டு உடன் இருக்க முடியும்? உடனடியாய் வீட்டை விட்டு வெளியேறியாக வேண்டுமே? என யோசித்தவள் திரும்பித் தந்தையைப் பார்த்தாள்.

தந்தையின் தளர்ந்த உடம்பையும், சோர்வான இடுங்கிய பார்வையையும் பார்த்தவள் அவரது நிலையையும் நன்கு புரிந்து கொண்டாள். இந்த வயோதிக காலத்தில் அக்கடா.. என்று நிம்மதியாய் இங்கு அத்தை வீட்டில்தான் இருக்க முடியும்.. அதை விட்டு விட்டால் திரும்பவும் டிரங்குப் பெட்டியைத் தூக்கிக் கொண்டு ஊர் ஊராய் பிழைப்பு தேடி அலைய வேண்டியதுதான்.!

இதையெல்லாம் மனதில் வைத்துதான் அப்பா சூழ்நிலையை தெளிவாக உணர்த்துகிறாரோ? உள்ளுக்குள் தான் கிரிதரனை விட தேவேந்திரனிடம் தான் ஈடுபாடு காண்பித்து பழகுவதை உணர்ந்து நாசூக்காய் நிலைமையைச் சொல்லி அப்பா நம்மை எச்சரிக்கிறாரா?

ஒன்றும் புரியாதவளாய் அன்றும் பெரும் குழப்பத்திற்கு உள்ளானாள் மதுரா.

# 23

மதுரா அன்றும் வழக்கம் போல் படுத்தவள் தூக்கம் வராமல்தான் புரண்டு கொண்டிருந்தாள்.

ரொம்ப நேரம் அப்படியே தூங்காமல் சிந்தனை வயப்பட்டும் படுக்கையில் கிடந்தவள் அப்படியே எரிச்சலானவளாய் எழுந்து உட்கார்ந்தாள்.

தற்செயலாய் பார்வை ஜன்னல் பக்கம் செல்ல தூரமாய் இடது புற ஓரமாய் இருக்கும் உதயாவின் ரூமில் லைட் எரிந்து கொண்டிருப்பது தெரிந்தது.

மணியைப் பார்த்தாள்.

இரவு மணி பத்து.

இவ்வளவு நேரம் உதயா தூங்காமல் இருக்க மாட்டாளே..! டாண்ணென்று ஒன்பது மணிக்கே படுத்து விடுவாளே!

யோசனை தாக்க வெளிவந்தவள் மெல்ல உதயாவின் ரூமை நோக்கி நடந்தாள்.

அவள் ரூமை நெருங்க.. நெருங்க.. உள்ளிருந்து மெல்லிய பேச்சுக்குரல்கள் எழுந்தவை காதில் விழுந்தன.

மெல்ல ஓசையில்லாமல் பக்கம் சென்று காதுகளை உன்னிப்பாக்கியபோது எல்லாமே தெள்ளத் தெளிவாய் கேட்டது.



கிரிதரன் குரல். கூடவே உதயா கௌரியின் கீச்சுக் குரல்கள்.

கிரிதரனை உட்கார வைத்து உதயாவும் கௌரியும் பேச்சை ஆரம்பித்திருக்க வேண்டும் என்பது போலவே தோன்றியது.

''எத்தனை முறை சொல்லி விட்டேன். நீ புரிந்து கொள்ளாமல் இருக்கிறாயே! உன்னை என்னதான் செய்வது?''

சலிப்புடன் உதயாவின் குரல் ஒலிக்க.. தொடர்ந்து கிரிதரனின் பேச்சும் படபடத்து கேட்டது.

''ஐயோ! உதயா.. நீ புரியும்படி கொஞ்சம் சொல்லும்மா.. நான் என்னதான் செய்ய வேண்டும்?''

''நீ உடனடியாக உன் நண்பன் தேவேந்திரனை ஏதாவது காரணம் சொல்லி நம் வீட்டிலிருந்து வெளியேற்ற வேண்டும்.''

''வேறு வழியில்லையா? கண்டிப்பாக செய்தாக வேண்டுமா?''

இம்முறை கௌரி குறுக்கிட்டாள்.

''அண்ணா, உதயா சொல்வது உண்மைதான். இப்போது தலைக்கு மேல் வெள்ளம் போயாயிற்று. நீ உடனே தேவேந்திரனை வெளியேறும்படி செய்ய வேண்டும்...''

மறுபடியும் கிரிதரன் யோசனைக்குப் போனது இரண்டு சகோதரிகளுக்கும் எரிச்சலைத் தந்திருக்க வேண்டும்.

உதயா குரலை உயர்த்தினாள்.

''அண்ணா இதோ பார்...'' என்றாள்.

''என்ன உதயா?'' என்றான் கிரிதரன்.

''முதலில் ஒரு விஷயத்தை எனக்கு தெளிவு படுத்து...''

''என்ன விஷயம் உதயா?''

''உண்மையிலே.. உனக்கு மதுராவைப் பிடித்திருக் கிறதா? அவளை நீ விரும்புகிறாயா?''

''பிடித்திருக்கிறது. விரும்புகிறேன்...'' என்றான் கிரிதரன் அழுத்தமான குரலில்.

''அதாவது உங்களுக்கு உண்மையிலே மதுரா மீது விருப்பம் இருக்கிறது. எங்களுக்காக... இப்படிச் சொல்ல வில்லையே..?''

''உண்மையாக.. நிஜமாகத்தான் சொல்கிறேன்! மேலும் மதுரா மீது கொஞ்சம் கொஞ்சமாய் இருந்த ஈடுபாடு இப்போது அதிகரித்து நூறு சதவீதமாக மாறி விட்டது. மேலும் மதுரா இல்லாத வாழ்க்கையொன்றை என்னால் நினைத்துப் பார்க்கக்கூட முடியவில்லை. அந்த அளவுக்கு ஏறக்குறைய மதுரா மேல் பைத்தியமாகவே ஆகிவிட்டேன்...''

கிரிதரன் சொன்ன ஒவ்வொரு வார்த்தையும் கேட்டுக் கொண்டிருந்த மதுராவுக்கு இடி போலத்தான் இறங்கியது. இந்த கிரிதரனை எப்படியெல்லாம் ஜென்டிலாக நினைத் திருந்தோம்? இன்று.. ஏதோ ரோமியோ போல் அல்லவா உளற ஆரம்பித்து விட்டான்!

அவள் திகைத்து ஸ்தம்பித்து நிற்க, அதை விட கிரிதரனின் பேச்சுக்கு பதிலாய் உதயா கூறியது அவளை அதிர்ச்சியின் எல்லைக்கே கொண்டு போனது.



''அண்ணா, உன் நிலைமை.. எனக்குப் புரிகிறது. நீ எதற்கும் கவலைப்படாதே. உன்னைப் போல்தான் நாங்களும் மதுராவை எப்படியும் இந்த வீட்டு மருமக ளாக்கி விட வேண்டும் என குறியாய் இருக்கிறோம். எங்கள் இருவருக்கும் மதுராவை ரொம்பவும் பிடித் திருக்கிறது. அந்த தேவேந்திரன் அவளை லேசாய் தட்டிச் சென்றுவிடக் கூடாது என்றே பயப்படுகிறோம். மேலும் நீ அந்த தேவேந்திரனை சாதாரணமாய் எடை போடாதே. அவன் பேச்சாலே மதுராவை ஐம்பது சதவீதம் மயக்கித் தான் வளைத்து விட்டான். இனியாவது நாம் சுதாரித்துக் கொள்வோம். தேவேந்திரனை விரட்டி விடுவோம்...''

''நீ சொல்வது எனக்கு நன்றாகப் புரிகிறது உதயா. ஆனால்... அவன் தேவேந்திரன் என்னுடைய நண்பன். அவனை நான் அவ்வளவு எளிதாய் முகத்திலடித் தாற்போல் சொல்லி வெளியேற்ற முடியாது. அவன் நம்பும்படி ஏதாவது வலுவான காரணத்தைச் சொல்ல வேண்டும்.''

கௌரி அவசரக் குடுக்கையாய் மறுபடியும் குறுக் கிடுவது தெரிந்தது.

''இதிலெல்லாம் கொஞ்சமும் யோசிக்கக் கூடாது அண்ணா. சும்மாவாக முகத்திலடித்தாற் போல் சொல்லி யாவது.. வெளியேற்றிவிட வேண்டும்...''

உதயா மீண்டும் பேசினாள்.

''இல்லை.. கௌரி. அந்த தேவேந்திரன் சரியான மூளைக்காரன். அவனை அண்ணா சொல்வது போல் சந்தேகம் வராதபடி பக்குவமாய்த்தான் டீல் செய்ய வேண்டும். நாம் கோபப்பட்டாலோ இல்லை ஆத்திரப்

பட்டு நடந்து கொண்டாலோ அதை அப்படியே போய் மதுராவிடம் சொல்லி மதுராவுக்கு நம் மேல் வெறுப்பு வரும்படி செய்து விடுவான்...''

''நீ சொல்வது சரிதான். அப்படியானால் ஏதாவது திட்டம் போடுவோம். திட்டம் போட்டு அந்த தேவேந்திரனை வெளியேற்றுவோம்...''

''என்ன திட்டம்?'' என்றான் கிரிதரன்.

உதயா கொஞ்ச நேர மௌனத்திற்குப் பிறகு பேசுவது கேட்டது.

''ஒரே ஒரு திட்டம் தான்! எப்படியாவது மதுராவுக்கு பிடிக்காததை மதுராவுக்கு எரிச்சலூட்டும் ஒன்றை அவனைச் செய்ய வைக்க வேண்டும். அப்படிச் செய்தால் மதுராவும் அவனை வெறுத்து விடுவாள். அவனும் இங்கு இருக்கப் பிடிக்காமல் ஓடி விடுவான்...''

''அதற்கு.. நாம்... என்ன செய்ய வேண்டும்..?''

''தெரியவில்லை... யோசிப்போம்...!''

அதன் பின் அங்கு பெரும் மௌனம் நிலவ அத்துடன் அவர்கள் பேச்சை நிறுத்தி விட்டு யோசிப்பது தெரிந்தது.

அதற்கு மேல் அங்கு நின்று பேசுவதை கேட்பது சரியல்ல என்று மதுராவுக்குத் தோன்றியதால் மெல்ல திரும்பி வந்தது போலவே ஓசையில்லாமல் நடந்தவள்.

அப்படி நடந்தவள் இரண்டு எட்டு எடுத்து வைத்ததுமே அப்படியே திகைத்து நின்று விட்டாள்.

எதிரே.. குரோட்டன்ஸ் செடியின் ஓரமாய் தேவேந்திரன்! அவளைப் போலவே அவனும் நின்று அவர்கள் பேசுவதை ஒட்டு கேட்டுக் கொண்டிருந்தபடி.



# 24

தேவேந்திரன் முதலில் மதுராவை கவனிக்கவில்லை. அவன் அறையின் எதிர்புறமாய் நின்று கேட்டுக் கொண்டிருந்ததால் மறுபுறம் நின்ற மதுராவை கவனிக்கவில்லை. அவள் நடந்து வெளி வந்தபோதுதான் அவளும் தன்னைப் போல நின்று கேட்டிருக்கிறாள் என்பதை புரிந்து கொண்டான்.

இருவர் கண்களும் அதிர்ச்சியோடு ஒரு முறை சந்தித்துவிட்டு விலகின. தேவேந்திரன் சைகையாலேயே அவளை முன்னால் நடக்கும்படி கூறி பின்னால் தொடர்ந்தான்.

அங்கிருந்து தள்ளி தனது அறைப் பக்கம் வந்ததும் மதுரா நின்றாள். தேவேந்திரன் திரும்பிப் பார்த்தபடியே நடந்து வந்தவன் நீளமாய் மூச்சிழுத்தபடி மதுராவைப் பார்த்தாள்.

மதுராவுக்கு அவர்கள் பேசியதை தேவேந்திரன் கேட்டிருப்பானா? என்ற சந்தேகம் இருந்தது.

''நீங்கள் எல்லாவற்றையும் கேட்டு விட்டீர்களா?'' என்றாள் ஆர்வக்குரலில்.

தேவேந்திரன் ஒருவித சோகத்துடன் தலையசைத்தான்.

''கேட்டுவிட்டேன். ஆனால் ரொம்பவும் சங்கடமாக இருக்கிறது. எனக்குப் பிரியமானவர்களே என்னைப் பற்றி தவறாக நினைக்கிறார்கள்...''

அவன் சொல்வது அவளை குழப்பத்தான் செய்தது. ''தவறாக நினைக்கிறார்களா? என்ன சொல்கிறீர்கள்?''

''ஆம். மதுரா.. அவர்களது விருப்பத்திற்கு மாறாக நான் நடந்து கொள்வேன் என்று எதிர்பார்க்கிறார்கள். அது தவறுதானே..?''

''அவர்களது விருப்பமா..? எதை நீங்கள் சொல்ல வருகிறீர்கள்?''

- குழப்பம் நீங்காமல் கேட்டபடி மேலும் அவன் சொல்லப் போவதை ஒருவித அச்சத்துடனே பார்த்தாள் மதுரா.

''வேறென்ன..? காதல் விஷயம்தான்..!'' என்றான் மறுபடியும் அவன் மொட்டையாக.

மதுராவுக்கு எரிச்சலாகத் தான் இருந்தது. தெளிவாய் ஒரு வரியில் சொல்வதை விட்டு விட்டு இப்படிச் சுற்றிப் பேசுகிறானே என நினைத்தாள்.

''காதல் விஷயமா?'' என்றாள் அவளும் பதிலுக்கு எதுவும் தெரியாதது போல்.

தேவேந்திரன் பதில் சொல்லாமல் அவள் பக்கம் வந்தவன் ஒரு நிமிடம் அவளது கண்களை உற்று நேருக்கு நேர் பார்த்தான்.

பின் பார்வையை விலக்கிக் கொண்டபடி கைகளைக் கட்டிக் கொண்டவன், ''மதுரா, எல்லாம் உனக்கும் தெரிந்ததுதான்! ஆனால் இப்போது எதையும் வெளிப்படையாய்



பேச முடியாத சூழ்நிலை. இந்தச் சூழ்நிலையில் ஒரே ஒரு விஷயத்தைப் பற்றித்தான் நான் சிந்திக்க முடியும். பேச முடியும்...''

மதுராவுக்கு அவன் பேசுவது புரிந்த மாதிரியும் இருந்தது. புரியாதது போலவும் இருந்தது. இருந்தும் என்ன விஷயம்? எனக் கேட்டாள்.

''அதாவது கிரிதரனுக்கோ.. அவனது ப்ரியமான குடும்பத்தினருக்கோ.. எவ்வகையிலும் அவர்கள் மனம் புண்படும்படி நான் நடந்து கொள்ளக் கூடாது என நினைக்கிறேன். என்னால் அவர்களது குடும்பத்தில் குழப்பமோ பிரச்சினையோ ஏற்பட்டு விடக்கூடாது எனவும் நான் விரும்புகிறேன்..''

அவன் சொல்லச் சொல்ல அவளுள் திகில் பரவத்தான் செய்தது. அவன் எதைச் சொல்ல வருகிறான் என்பதும் பயமாய் புரிய ஆரம்பித்தது.

''அதற்காக..: எனக்கு விருப்பமில்லாவிட்டாலும் நான் சில முடிவுகளை எடுக்க வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறேன் மதுரா...''

அழுத்தமாய் அவன் சொன்னபோது ''முடிவுகளா...?'' என்றாள் அவள் குரல் நடுங்க.

அதற்கு வேகமாய் தலையசைத்த தேவேந்திரன் அவளை மீண்டுமொருமுறை ஆழமாய்ப் பார்த்து விட்டு திரும்பிக் கொண்டான். நான் சில முடிவுகள் எடுப்பது போல் நீயும் சில முடிவுகள் எடுக்க வேண்டும். அது.. அது.. தான் நம் இருவருக்கும் நல்லது என நினைக்கிறேன்.''

இம்முறை அவன் திரும்பிப் பார்க்க மதுரா பதில் சொல்லாமல் குனிந்தாள். வேகமாய் உதடு கடித்தாள்.

தேவேந்திரன் அவளது செய்கையையே உற்றுக் கவனித்தவன் சட்டென திரும்பி அவள் பக்கம் வந்தான். பின் சற்றும் எதிர்பாராத கணத்தில் அவளை சட்டென தன் பக்கம் இழுத்து வேகமாய் அணைத்தான்.

மதுரா இதை சற்றும் எதிர்பார்க்கவில்லை!

ஆனாலும் தவிப்பில் இருந்தவளுக்கு அந்த இதமான அணைப்பு பெரும் ஆறுதலாய் புண்ணுக்கு மருந்திடுவது போல இருக்க.. எவ்வித மறுப்பும் இல்லாதவளாய் இறுக அவனோடு ஒட்டிக் கொண்டாள்.

ஓரிரு நிமிடம் அவளை வேகமாய் அணைத்துவிட்டு மெல்ல விடுவித்தான் தேவேந்திரன்.

அவன் விடுவித்ததும் தான் அவன் சட்டென வந்த தன்னை இறுக அணைத்தது... தான் எவ்வித எதிர்ப்புக் காட்டாமல் அவனுடன் ஒட்டிக் கொண்டது எல்லாம் அவளுக்கு புரிந்தது. ஒரு கட்டத்தில் தன்னையறியாமல் மனதைப் போலவே உடம்பும் அவன் இழுத்த இழுப்பிற்கு உடன்பட்டு போவதைக் கண்டு திடுக்கிடவே செய்தாள்.

ஒருகணம் பலஹீனமாய்ப் போய் விட்ட தன் நிலை கண்டு முகம் சிவந்து தான் போனாள் அவள். அவன் தேவேந்திரன் என்ன நினைத்தான்? எந்த உரிமையில் அவளை அணைத்தான்? அதற்கான காரணத்தையாவது சொன்னானா?

இல்லையே.. அவன் பாட்டுக்கு ஒரு அணைப்பு அணைத்து விட்டு ஒன்றுமே நடக்காதது போல்



கைகளைக் கட்டிக் கொண்டு வெட்ட வெளியை வெறிக்கிறான். இதற்கு என்னதான் அர்த்தம்?

சரி.. அவன்தான் எதையோ... நினைத்தான். எதற்காகவோ அணைத்தான். என வைத்துக் கொள்வோம். அவள் என்ன செய்தாள்? எப்படி அவனது அணைப்பை அனுமதித்தாள்? அவனை தனது காதலனாக ஒரு வேளை அங்கீகரித்து விட்டாளா? இல்லை.. அவன்தான் அவளிடம் நீ எனது காதலி என பறை சாற்றினானா?

எதை வைத்து எந்த நினைப்பில் அப்படி அவன் அணைப்பது ஏற்றுக் கொண்டாள்? ஏற்றுக் கொள்வது மட்டும்தானா... பெரும் அபயம் கிடைத்தது போல் அவன் நெஞ்சில் ஒரு கணம் கண்கள் சொருக சாய்ந்து மயங்கி விட்டாளே!

மதுரா துடித்துதான் யோசித்தாள் என்று சொல்ல வேண்டும். நிமிர்ந்து அவன் தேவேந்திரனைப் பார்த்த போது பார்வையால் வெறித்துக் கொண்டது மட்டுமல்ல தீவிரமான சிந்தனையிலும் அவன் முகம் இருந்ததைக் கவனித்தாள்.

என்னவோ முடிவு எடுக்கப் போவதாய் சொன்னவன் அப்படி என்ன முடிவை எடுத்து விடப் போகிறான்?

அதற்காகவா இந்த தீவிர சிந்தனை?

அவள் விழிகள் விரித்து அவனையே உற்றுப் பார்க்க அவனும் சட்சட்டென திரும்பி அவளைப் பார்த்தான்.

பின் அதே வேகத்தில் அவள் பக்கத்தில் வந்தான்.

''ஒரு விஷயம் எனக்குத் தோன்றுகிறது மதுரா...'' என்றான் பீடிகையாய்.

''என்ன விஷயம்... எனக்குப் புரியவில்லை...'' என்றாள் அவள்.

''நான் மட்டும் இங்கு வராவிட்டால்... உங்களது பாதையில் குறுக்கிடா விட்டால் எல்லாமே நன்றாக நடந்திருக்கும் தானே?'' என்றான்.

அவன் எதையோ பேச வருகிறான் என்பது மதுராவுக்குப் புரிந்தாலும் முழுதும் விளங்காதவளாகவே அவளைப் பார்த்தாள்.

''புரியவில்லை. தெளிவாகச் சொல்லுங்கள்...'' என்றாள்.

''புரியும். நாளை உனக்குப் புரியும்...!'' மீண்டும் அதையே சொல்லியபடி அங்கிருந்து வேகவேகமாய் அகன்றான் தேவேந்திரன்.

## 25

மறுநாள் வழக்கம் போல் விடிந்து காலை கிரிதரனின் கன்ஸல்டன்ஸி வேலைக்குக் கிளம்பிச் சென்று விட்டாள் மதுரா.

மதியம் வந்த போதுதான் அந்த அதிர்ச்சியான விஷயம் அவளது காதுகளில் விழுந்தது. தேவேந்திரனுக்கு தந்தி ஏதோ வந்ததாகவும் அதனால் அவசர வேலையொன்று இருப்பதாக... எல்லோரிடமும் சொல்லிவிட்டு சொந்த ஊரான திருச்சிக்கு கிளம்பிச் சென்று விட்டானாம்.



அதுவும்... எப்படி...? எல்லோரிடமும் விஷயத்தைச் சொல்லியிருக்கிறான்...

அவளைத் தவிர!

வேண்டுமென்றே அவளிடம் சொல்வதை தவிர்த்து அவள் இல்லாத நேரமாய் பார்த்துக் கிளம்பி இருக்கிறாள்.

நேற்று, ''நாளை உனக்குப் புரியும்...'' என்று அவன் சொன்னதன் அர்த்தம் இதுதானா?

இப்படி ஊரை விட்டு கிளம்புவதுதான் அவன் எடுத்திருக்கும் தீர்மானமான விசேஷமான முடிவா?

இந்த முடிவை எடுப்பதற்குத்தான்... உணர்ச்சிகளில் தவித்து. அவளை அணைத்து.. பின் விடுவித்து.. எதையோ பறிகொடுத்தவன் போல் வெட்டவெளியை வெறித்துக் கொண்டிருந்தானா?

ஒரு கணம் அவன் ஊருக்குச் சென்று விட்டதை, தன்னிடம் ஒரு வார்த்தை கூட சொல்லாமல் சென்று விட்டதை நம்ப முடியாதவளாய் அவனது அறைக்கே சென்று பார்த்தாள்.

அறைக்கதவு திறந்து கிடக்க... உள்ளே துடைத்து விட்டாற் போல் பளிச்சென்று இருந்தது.

மூட்டை முடிச்சுகளுடன் ஒன்று விடாமல் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு போய் விட்டிருந்தான் தேவேந்திரன்.

இனி திரும்பி வரும் எண்ணம் இல்லையா... அல்லது இனி அவன் திரும்பி இங்கு வரப் போவதே இல்லையா?

நான் வராவிட்டால் உங்கள் எல்லோருடைய வாழ்க்கையிலும் குறுக்கிடாவிட்டால் பிரச்சினைகள் எதுவும் இருந்திருக்காதே.. என்று சொன்னானே?

அதனால்தான் துணிந்து இப்படி ஒரு முடிவை எடுத்து விட்டானா?

அன்று முந்தைய நாள் ரூமில் கிரிதரன், உதயா, கௌரி பேசுவதைக் கேட்டு இந்த முடிவுக்கு வந்து விட்டானா?

அன்று அவர்கள் தேவேந்திரனை எப்படியாவது வீட்டை விட்டு வெளியேற்றத்தானே யோசனை செய் தார்கள்? திட்டம் போட்டார்கள்?

அப்படி அவர்களாகவே திட்டம் போட்டு வெளியேற்று வதிற்குப் பதில் தானாகவே வெளியேறினால் நல்லது என நினைத்து விட்டான்!

ஒருவகையில் அதுகூட நல்லதுதானோ?

தேவேந்திரன் எடுத்த முடிவு சரிதானோ?

யோசித்துப் பார்த்த மதுராவுக்கு.. அது கூட சரி என்பது போலவே பட்டது.

வீணாக.. இவர்களிடம் எதுவும் அவமானப்படாமல் கௌரவமாய் வெளியேறி விட்டது கூட ஒரு வகை நல்லதுதானே!

அதிலும் இந்த உதயாவும் கௌரியும் கிரிதரன் மேல் உள்ள பாசத்தில் தேவேந்திரன் மீது என்ன குற்றச்சாட்டை வேண்டுமானாலும் சுமத்துவர். எத்தகைய பழியை வேண்டுமானாலும் அவன் மீது போட யோசிக்க மாட் டார்கள்!

மேலும் கௌரி இந்த விஷயத்தில் ஒரு படிமேலே போய் தேவேந்திரனை காதலிப்பதாய் வேறு அல்லவா புளுகினாள்?

அதன் பின் அவள் அந்தக் காதலைப் பற்றி பேசி னாளா? இல்லையே...! அப்படியானால் நம் மனதை



மாற்றி குழப்பத்தானே.. இப்படியெல்லாம் பொய்யாகச் சொல்லியிருக்கிறாள்?

யோசித்த மதுராவுக்கு ஒரு விஷயம் தெளிவாகப் புரிந்தது.

உதயா, கௌரி, கிரிதரன் மூவருக்குமே.. தான் தேவேந்திரனிடம் விரும்பிப் பழகுவதே சந்தேகத்தை, பயத்தைக் கொடுத்திருக்கிறது.

அதனாலே.. அந்தப் பழக்கம் தேவேந்திரன் மீது காதலாக போய் விடக்கூடாது என்பதில் குறியாய் இருந்திருக்கிறார்கள்.

அப்படிப் பார்த்தால் அவள் தேவேந்திரனோடு விருப்பு காட்டாமல் வெறுப்பது போல் கொஞ்சம் நடித்திருந்தால் கூட அவர்கள் நம்பியிருப்பார்களோ?

தேவேந்திரன் இப்படி வீட்டை விட்டு வெளியேறும் அளவுக்கு சூழ்நிலை மாறியிருக்காதோ?

நினைத்துப் பார்த்த மதுராவுக்கு, இவர்களது திட்டம் தெரிந்த நாம் அப்படிக் கூட செய்திருக்கலாம். தேவேந் திரனிடம் இது பற்றிக் கூறி அவனையும் சம்மதிக்க வைத்திருக்கலாம். செய்யாமல் இருந்து விட்டோமே..! என்ற வருத்தமே ஏற்பட்டது.

அப்படியே யோசித்தவள், ஒரு கணம், ஏன் அப்போது செய்யாவிட்டால் என்ன.. இப்போது தேவேந்திரனை வெறுப்பது போல் அவனைப் பிடிக்காதது போல் இவர் களிடம் பேசி நடந்து கொண்டால் தேவேந்திரனை மறுபடி இங்கு வரவழைத்து விடலாமே? அதை இவர்களே செய்யும்படி கூட செய்து விடலாமே!

* * *

மதுராவுக்கு ஒரே ஆச்சரியம்!

தேவேந்திரன் போய் விட்டதில் இருந்து அவள்தான் அவனைக் காணாமல் தேடினாள்... பார்க்காமல் தவித்தாள். அவன் பிரிவைத் தாங்க முடியாமல் துடித்தாள்.

மற்ற யாரும் அவனுக்காக எள்ளளவும் கவலைப்பட்டதாகக் காணோம்!

அவர்கள் பாட்டுக்கு வழக்கம் போல் நடமாடினர்.

உதயாவும், கௌரியும், ''தேவேந்திரன் ஊருக்குப் போய் விட்டாரா? பாவம்.. அவருக்கு என்ன அவசர வேலையோ?'' என பெரிதாய் சூள் கொட்டி வருத்தப்படுவது போல் முகத்தையும் வைத்துக் கொண்டனர்.

ஆஹா! நல்ல நடிப்பு! என உள்ளுக்குள் பற்களைக் கடித்தாள் மதுரா.

என்னென்னவோ பிளான் போட்டு தேவேந்திரனை விரட்டாத குறையாய் அனுப்பி விட்டு ஒன்றும் தெரியாதது போல் பேசுகிறார்களே.. என வியக்கவும் செய்தாள்.

கிரிதரனிடம் கூட மதுரா கேட்கத்தான் செய்தாள்.

அவனும் கிளிப்பிள்ளையாய் அதே பதிலையே சொன்னாள். ''தேவேந்திரனுக்கு அவசரமாய் ஏதோ சொந்த வேலை. அதான் சென்று விட்டான்...'' என்றான் மொட்டையாக.

''அப்படி.. என்ன சொந்த வேலை..? உங்களிடம் கூட சொல்லவில்லையா?''

''சொல்லவில்லை...'' என கைகள் விரித்தான் அவன்.

''நீங்கள் அவரைத் தடுக்கவில்லையா..?'' என்றாள் பிரயாசையாய்.



''சொல்லிப் பார்த்தேன். கேட்கவில்லை..'' என்றான் அவன் அதற்கும் விட்டேற்றியாய்.

''அவர் ஆராய்ச்சிப் படிப்பு வேறு இதனால் தடைபட்டு விடுமே?''

மதுரா கேட்டதற்கு கிரிதரன் சிரித்து அவளுள் எரிச்சலைக் கிளப்பினான்.

''ஆராய்ச்சி படிப்பை பற்றி தேவேந்திரனே கவலைப்படவில்லை. நான் ஏன் கவலைப்பட வேண்டும்? அதை இந்த வருடம் முடியவில்லை என்றால்.. அடுத்த வருடம் தொடருவான்.''

கிரிதரன் அசால்ட்டாய் ஒருவித அலட்சியத்துடன் தான் தேவேந்திரன் பற்றி பேசுவதாய் மதுராவுக்கு பட்டது.

என்ன இருந்தாலும் இவனும் உதயா, கௌரியுடன் சேர்ந்து கொண்டு நண்பன் என்றும் பாராமல் தேவேந்திரனை விரட்டத் துணிந்தவன் தானே?

சொல்லப் போனால் இவனுக்கும் உதயா, கௌரிக்கு எல்லாம் தேவேந்திரன் வீட்டை விட்டுச் சென்று விட்டது பெரும் நிம்மதிதான்! மனதிற்குள் குதூகலம்தான்!

அவர்கள் திட்டம் போடாமலே தேவேந்திரனை விரட்டி விட்டார்களே!

இனி என்ன செய்யப் போகிறார்கள்?

தேவேந்திரன் இல்லாததால் அவன் நினைப்பு வராது மறந்து விடுவேன் என்று நினைத்தார்களா?

கிரிதரனைக் கொண்டு... அவனுடன் மேலும் பழகச் செய்து.. மயக்கப் பார்ப்பார்களோ?

மதுரா இப்படி விளையாட்டாய் நினைத்தாலும் நிஜமாகவே அப்படித்தான் நடந்தது. கிரிதரன் மறுநாளே, ''தமிழ்ப் பாடங்கள் எனக்கும் தெரியும்.. நானே மதியம் உனக்கு பாடம் எடுக்கிறேன்'' என தேவேந்திரன் விட்ட தமிழ்ப் பாடங்களை அவளுக்கு கிளாஸ் எடுக்க ஆரம்பித்து விட்டான்.

என்னடா.. இது வம்பு..? என மதுரா துடிப்பாய் நினைத்தவள் எதேதோ காரணங்களைச் சொல்லி தவிர்க்கப் பார்த்தாள். ஆனால் கௌரி தினமும் வந்து அவளை இழுக்காத குறையாய் கிளாஸுக்கு அழைத்துச் சென்றாள்.

''நீ வேண்டுமானால் பாரேன். கிரிதரன் அண்ணா தமிழில் ரொம்பவும் கெட்டிக்காரர். தேவேந்திரனை விட விஷயமறிந்தவர். நன்றாக பாடம் நடத்துவார்...'' என்றபோது மதுரா அவளை முறைக்கவே செய்தாள்.

''தேவேந்திரன்... தமிழில் எம்.ஏ. முடித்தவர். அவரை விடவா..?'' என வேண்டுமென்றே சண்டைக்குப் போகாத குறையாய் கேட்டாள்.

கௌரி அதற்கும் விளக்கம் கொடுத்தாள்.

''படிப்பு வேண்டுமானால் தேவேந்திரன் படித்திருக்கலாம். ஆனால் மனதில் புரிகிற மாதிரி பாடங்களை விளக்குவதில் கிரிதரன் கெட்டிக்காரர்..'' என்றாள் கிரிதரனை விட்டுக் கொடுக்காமல்.

இப்படி கௌரி கிரிதரனை தலையில் வைத்து கூத்தாடாத குறையாய் உயர்த்தி உயர்த்திப் பேசுவது மதுராவை ரொம்பவும் எரிச்சல் படுத்தியது.



இப்படி ஜம்பம் அடிக்கும் அவளுக்கு நன்றாக ஒரு குட்டு வைத்து அவளையும் எரிச்சல் படுத்த நினைத்தாள் மதுரா.

''கிரிதரனைப் பற்றி இவ்வளவு பேசுகிறாயே... கௌரி? என்றாவது அவர் சிரிப்பதை பார்த்திருக்கிறாயா? லேசாக பார்த்து ஒரு சின்னப் புன்னகை புரியவே காசு கேட்பார் போல் அல்லவா அவர் குணம் இருக்கிறது?''

மதுராவின் கேள்வியைக் கண்டு புருவம் உயர்த்தியபடி நெளியத்தான் செய்தாள் கௌரி.

''அது.. அது.. வேறொன்றுமில்லை.. மதுரா.. அவரது முகவாகு அப்படி. அதை நாம் தவறாக எண்ணக் கூடாது. ஆனால் நீ பார்த்ததில்லை. வேண்டியபோது கிரிதரன் சிரிக்கத்தான் செய்வார்.''

அவள் இன்னமும் விட்டுக் கொடுக்காமல் கிரிதரனை பேசுவதைக் கண்டு மதுராவுக்கு சிரிப்பே வந்து விட்டது.

''ஆமாம்... ஆமாம்... வேண்டியபோது... கையினால் கிச்சம் காட்டினால் சிரிக்கத்தான் செய்வார். அப்படித் தானே?''

மதுரா இப்படிச் சொல்லியபோதுதான் அவள் தன்னை கேலி செய்கிறாள் என்பதை உணர்ந்தாள் கௌரி.

''அட... மதுரா.. நீயா இப்படியெல்லாம் பேசுகிறாய்? எனக்கு ஆச்சரியமாக இருக்கிறதே..!'' என்றாள் நம்ப முடியாமல்.

உள்ளபடி கௌரி சொன்னது போல் மதுரா இப்படியெல்லாம் பேசுவது வியப்பான விஷயமே! பொதுவாய் இப்படி பதிலுக்கு பதில் கொடுத்து கோபப்படுவதோ கேலி செய்வதோ அவளது சுபாவம் அல்லவே...!

ஆனால் இப்போது தேவேந்திரனை கௌரி வேண்டும் என்றே மட்டம் தட்டி பேசுவதைக் கேட்கும் போது அவளையறியாமல் பொசுக்கென அந்த கோபமும் எரிச்சலும் வருவதை உணர்ந்தாள்.

## 26

வழக்கம்போல் துணிகளை உலர்த்த மாடிப்படி படியேறப் போனவள், ''இதுதான் சமயம், மதுராவை சம்மதிக்க வைத்து விடலாம்...'' என்ற குரல் கேட்டு அப்படியே நின்று விட்டாள்.

மெல்ல சுவர் விளிம்புப் பக்கம் பார்த்தாள்.

கிணற்றடி சுவர் பக்கமாய் அந்த மூவர் கூட்டணி!

உதயா, கௌரி, கிரிதரன்!

அதே போல் கிசுகிசுப் பேச்சு!

இப்படி ஒவ்வொரு முறையும் ஏதோ உளவாளி போல் பேச்சுக்களை ஒட்டுக் கேட்பது.. தவறு.. அது அநாகரீகமான செயல் என மனம் உறுத்த ஒரு நிமிடம் தயங்கி நின்றாள்.

மறுகணமே எதிரான எண்ணம் ஒன்று கிளம்பி ஓடியது.

ஒட்டுக் கேட்பது தவறு என்பது போல் அவர்கள் இப்படிக் கிசுகிசு பேச்சு பேசுவதும் தவறுதானே? ஒருவரை



பழி வாங்குவதுபோல் ரகசியமாய் திட்டம் தீட்டுவதும் அநாகரீகமான செயல்தானே?

அவர்கள் இப்படி தரம் தாழ்ந்து செய்யும்போது அதை முறியடிக்க இப்படி ஒட்டுக் கேட்டு விஷயத்தை அறிவதில் தப்பில்லை என மனது தைரியம் பெற... மெல்ல ஓசைப்படாமல் அதே இடத்தில் நின்று காதுகளைத் தீட்டினாள்.

வழக்கம்போல் உதயாவின் குரல்தான் கணீரென முதலில் ஒலித்தது.

''இதுதான் சமயம். மதுராவை சம்மதிக்க வைத்து விடலாம். புரிந்து கொள்ளுங்கள்...'' என்று சொல்லிக் கொண்டிருந்தாள் உதயா.

''எதை வைத்து இவ்வளவு உறுதியாய்ச் சொல்கிறாய்?'' கேட்டவள் கௌரி.

''ஒன்றை கவனித்தாயா? இப்போதுதான் மதுரா காலை கன்ஸல்டன்ஸி, மதியம் தமிழ் வகுப்பு என பல மணி நேரத்தை கிரிதருடனே கழிக்கிறாள். அப்படிக் கழிக்க வேண்டிய சூழ்நிலையும் ஏற்பட்டு இருக்கிறது. ஆக இதுதான் மதுராவின் மனதை மாற்ற சரியான சமயம்...''

''ஆமாம்.. ஆமாம்... பாதி நேரம் மதுரா என்னுடன் தான் இருக்கிறாள். நானும் அவளை பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன்...'' சட்டென கிரிதரன் குறுக்கிட்டு சொல்ல உடனடி பதிலடி கொடுத்தாள் உதயா.

''அட.. நீ மட்டும் பார்த்தால் போதாது. அவளையும் உன்னைப் பார்க்கும்படி வைக்க வேண்டும்.''

''அது.. எப்படி?''

''மக்கு மாதிரி.. கேட்காதே! ஒரு பெண்ணைக் கவர சுவாரஸ்யமாய் நகைச்சுவையாய் பேச வேண்டும். அப்படிப் பேசினால் எப்பேர்ப்பட்ட பெண்ணும் உன்னைப் பார்த்து இளித்துதான் ஆக வேண்டும். புரிகிறதா?''

''புரிகிறது.. புரிகிறது...''

''என்ன புரிகிறது?''

''முதலில் மதுராவிடம் நகைச்சுவையாய் பேசி இளிக்க வைக்கிறேன்...''

தலையிலடித்துக் கொண்டு கௌரி பேசுவது கேட்டது.

''அண்ணா, நீ.. பார்க்கத்தான் வாட்ட சாட்டமாய் இருக்கிறாய்.. ஆனால் சரியான குமுட்டை! உனக்கு காதல் பற்றி சொல்லிக் கொடுக்க இனி புதுசாய் காதலர் கலைக் கல்லூரி ஒன்றுதான் ஆரம்பிக்க வேண்டும்.''

''அப்படியா..?'' என்றான் அவன் அதற்கும்.

உதயா கோபப்படுவது தெரிந்தது.

''என்ன.. அப்படியா.. என்கிறாய்? முதலில் இந்த டியூப் லைட் மாதிரி பேசுவதை நிறுத்து. இனி நீ சந்திக்கும் ஒவ்வொரு நொடியும் முக்கியமானது. இது ஒரு நல்ல சந்தர்ப்பம். தேவேந்திரன் இடைஞ்சல் இல்லாமல் மதுரா தனியாகத்தான் இருக்கிறாள். நீ.. என்ன செய்வாயோ.. தெரியாது அவளிடம் நல்ல பெயர் மட்டும் எடுத்து விடு. மற்ற விஷயங்களுக்கு நான் ஒரு பெரிய திட்டமும் வைத்திருக்கிறேன்.''

''திட்டமா..? என்னிடம் சொல்லவே.. இல்லையே?''

''சொல்கிறேன் கௌரி. மதுரா விஷயத்தில் நாம் மட்டும் முயற்சி செய்தால் போதாது. பெரியவர்களை



விட்டு வேறு விதமான முயற்சியையும் ஆரம்பித்து விட வேண்டும்.''

''பெரியவர்களை வைத்தா?''

''ஆம்.. நம் வீட்டுப் பெரியவர்கள்.. அதாவது.. நம் அம்மா.. பெரியம்மா.. இவர்களை வைத்து மதுராவின் தந்தையிடம் கிரிதரனுக்கு மதுராவை கட்டிக் கொடுப்பது பற்றிய பேச்சை ஆரம்பித்து விடுவோம். அவர் சதாசிவம் மாமா நல்லவர். பெரியம்மாவும் அம்மாவும் சொன்னால் தட்டவே மாட்டார். உடனே சம்மதித்து விடுவார். அவர் சம்மதித்து விட்டால் போதுமே..? மதுராவுக்கும் வேறு வழி இருக்காது. தேவேந்திரன் வேறு இங்கு இல்லை. அதனால் அவள் சாக்கு போக்கு சொல்லாமல் சம்மதம் சொல்லித்தான் ஆக வேண்டும்...''

உதயா முடிக்கவில்லை.

''சூப்பர்... பிளான்! அருமையான திட்டம்!''

கௌரியும் கிரிதரனும் குதிக்காத குறையாய் உற்சாகக் குரலில் சொல்வது கேட்டது.

''உதயா... உன் திட்டம் பிரமாதம். ஆனாலும் நீ இவ்வளவு புத்திசாலியாய் இருப்பாய் என நான் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. ரியலி.. யூ.. ஆர்.. வெரி க்யூட்..!''

கிரிதரன் உதயாவுக்கு புகழாரம் செய்ய அதையும் வெட்டினாள் அவள்.

''இந்தப் புகழ் பாடும் பேச்சை, ஐஸ் வைக்கிற பேச்சை என்னிடம் காட்டாதே. மதுராவிடம் போய் காட்டு. அவள்தான் உன் பேச்சில் மயங்கி விழ வேண்டும்.''

''புரிகிறது உதயா. கண்டிப்பாய் செய்கிறேன்..''

கௌரி மறுபடியும் பரபரத்தாள்.

''உதயா, நீ சொல்வதைப் பார்த்தால் நம் அம்மாக்களை வைத்து விஷயத்தை மாமாவிடம் கொண்டு சென்றால் வேலை சுலபமாகிவிடும் போல் தெரிகிறதே!''

''அப்படித்தான் கௌரி. உண்மையில் மிகக் கச்சித மான திட்டமும் அதுதான். கிரிதரனும் நாமும் பேசி மது ராவை சம்மதிக்க வைப்பதை விட பெரியவர்கள் பேசினால்.. மதுராவால் தட்ட முடியாது. அவள் சம்மதித்து தான் ஆக வேண்டும்.''

''உதயா.. நீ சொல்வதைப் பார்த்தால் மதுராவுக்கு சம்மதம் சொல்வதைத் தவிர வேறு வழி எதுவும் கிடை யாதே...''

''கிடையாதுதான். ஆனால்...''

''ஆனால்.. என்ன?''

''கரடி.. போல் அவன் தேவேந்திரன் திடீரென இங்கு வந்து விடக்கூடாது. வந்தால்.. அவ்வளவுதான்.. எல்லாம் தலை கீழாய் மாறி விடும்...''

''புரிகிறது. தேவேந்திரன் ஒருபோதும் வர மாட்டான். அவன் வராதபடி பார்த்துக் கொள்கிறேன்.''

''அதை எப்படி இவ்வளவு உறுதியாகச் சொல்கிறாய்..? உன்னால் கிரிதரன் வருவதை அப்படி எதை வைத்து தடுக்க முடியும்?''

உதயாவின் கேள்விக்கு கிரிதரன் கணைத்துக் கொண்டு பேசுவது கேட்டது.

''அவன் வருவதை தடுக்க... நானும் உன் போல் ஒரு சூப்பர் பிளான் வைத்திருக்கிறேன்.''



''சூப்பர் பிளானா..? என்ன சொல்கிறாய்?''

''அதாவது உதயா.. தேவேந்திரனுக்கு இனி எள்ளள வும் மதுரா பற்றி நினைப்பு வரக்கூடாது. அதற்காக நான் திட்டம். போட்ட ஒரு வழி...''

''அந்த வழிதான் என்னவோ..? சொல்லுங்கள் அண்ணா..!''

கௌரி கிண்டலடிப்பது போல் கேட்டாலும் கிரிதரன் சீரியஸாகத்தான் பதில் சொன்னான்.

''என்னுடைய திட்டப்படி தேவேந்திரனிடம் போன் செய்து மதுராவும் அவள் தந்தையும் திரும்ப அவர்களது சொந்த ஊருக்கே திருச்சிக்கே சென்று விட்டதாய் கூறி விடுவேன். தேவேந்திரனும் அதை நம்பி விடுவான். மதுரா பற்றி நினைப்பதையே மறந்து விடுவான்.''

கிரிதரன் சொன்னதைக் கேட்டு மிகவும் உற்சாகமான வர்களாய் உதயாவும் கௌரியும் கைதட்ட ஆரம்பித்து விட்டனர்.

நடந்த பேச்சுக்கள் முழுவதையும் ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்த மதுரா, ''அடப் பாவிகளா..!'' என்பது போல் வாயில் கைவைத்தபடி அதிர்ச்சியானாள்.

## 27

மதுரா தான் அறைக்கு வந்தவளுக்கு ஒன்றும் ஓடவில்லை. உதயா, கௌரி, கிரிதரன் ஆன மூவர்

கூட்டணி. இவ்வளவு தூரம் வந்து விட்டார்களா? இவ்வளவு விபரீதமாய் திட்டம் தீட்ட ஆரம்பித்து, கிரிதரனை எப்படியாவது தனக்கு கட்டி வைக்க எந்த விபரீதத்தையும் செய்யத் தயாராகி விட்டார்களே!

இப்போது என்னதான் செய்ய?

இவர்களது விபரீத திட்டத்தை முறியடிக்க தேவேந்திரனை தொடர்பு கொள்வதுதான் ஒரே வழி! அவனிடம் விரிவாய் இவர்களது சதிச் செயலைச் சொன்னால்.. புரிந்து கொள்வான்.

எப்படியாவது இந்த இக்கட்டில் இருந்து நம்மைக் காப்பாத்தி விடுவான்!

ஆனால்.. அவனிடம் தேவேந்திரனிடம் விஷயத்தைச் சொல்வது.. அவளைத் தொடர்பு கொள்வது எளிது அல்லவே.

அந்த கிரிதரனிடம் தான் அவனது முகவரி, தொலைபேசி எண் எல்லாம் இருக்கிறது. அதை எப்படி வாங்குவது?

நேரிடையாய் போய்க் கேட்டால் கிரிதரன் தரவா போகிறான்?

முகவரி தன்னிடம் இல்லவே.. இல்லையென ஒரேடியாய் மறுத்து விடுவானே!

இருந்தாலும் ஒரு நப்பாசையில் அன்று காலை அவன் அலுவலகத்திற்கு வேலைக்குப் போனவள் கிரிதரனிடம் வேண்டுமென்றே பற்களைக் காட்டினாள். இளித்தபடி பேசிப் பார்த்தாள்.

''உங்கள் நண்பர் தேவேந்திரனுடைய.. முகவரி, தொலைபேசி எண் உங்களிடம் இருக்குமே.. அதைக் கொஞ்சம் தருகிறீர்களா?'' எனத் துணிந்து கேட்டும் விட்டாள்.

கிரிதரனோ அவளை உற்றுப் பார்த்தவாறு பதறினான்.

''அவன்.. முகவரி.. தொலைபேசி.. எண்.. உனக்கு எதற்கு?'' என்றான்.

''அது.. அது.. தமிழ்.. பாடத்தில்.. ஒரு சந்தேகம் அவரிடம் விளக்கம் கேட்க வேண்டும்...''

கிரிதரன் கைகளைக் கட்டியபடி முன்னால் வந்து கொண்டான்.

''எனக்கும் தமிழ் பாடங்களில் எல்லா நுணுக்கங்களும் தெரியும். உன் சந்தேகத்தை என்னிடம் கேள்...'' எனவும் மதுராவுக்கு எரிச்சல் கூடியது.

முகத்தைத் திருப்பியபடி விறுவிறுவென அங்கிருந்து அகலப் போனாள் அவள்.

''ஒரு நிமிடம் மதுரா.. உன் சந்தேகம் என்ன?'' என்னிடம் கேட்கக் கூடாதா?''

முன்னால் வந்து வழி மறித்தான் கிரிதரன்.

இவன் முகத்தில் இரண்டு போடு போட்டால் சரியாகி விடுவான். விலாசத்தையும் தந்து விடுவான் என கொதிப்பாய் நினைத்தவள் நிமிர்ந்து அவனை முறைக்கவே செய்தாள்.

''ஐயோ! சொல் மதுரா உன் சந்தேகம்தான் என்ன?''

மறுபடியும் கெஞ்சாத குறையாய் கேட்டான் கிரிதரன்.

இவனது மூக்கை சரியாக உடைக்க வேண்டுமே என எண்ணினாள் மதுரா.

''அது... அது.. சந்தேகம்.. தமிழ் பற்றி.. அல்ல... வேறு ஒன்று பற்றி... ஸார்...''

''வேறு ஒன்றா?''

''ஆம்.. காதல்.. காதல் பற்றி... ஸார்...''

''என்ன காதலா?''

அலறாத குறையாய் கிரிதரன் அதிர்வதை வெகுவாக ரசித்தவள், ''தேவேந்திரன் என்னிடம் தனது காதல் பற்றி சொல்லியிருக்கிறார்...'' என்றாள்.

''என்ன தேவேந்திரன் சொல்லியிருக்கிறாரா.. என்ன.. என்ன அப்படிச் சொன்னான்?''

வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு மதுரா பேசினாள்.

''அவர் தனக்கு ஒரு காதலி இருப்பதாகவும் தான் அவளை மனப்பூர்வமாய் நேசிப்பதாகவும் பல தடவை என்னிடம் சொல்லியிருக்கிறார்.''

''அப்படியா? என்னிடம் சொல்லவே.. இல்லையே! யார் அந்தக் காதலி?''

கிரிதரன் கேட்டதும் சட்டென யோசனைக்குப் போன மதுரா சமாளித்துப் பேச ஆரம்பித்தாள்.

''அது.. அந்தக் காதலி.. பற்றி நேரிடையாய் பெயரைச் சொல்லாமல்.. சிலேடையாய்.. பூடகமாய்ச் சொன்னார்...''

''அது... என்ன பூடகமாக..? கொஞ்சம் புரியும்படி சொல்...''

''அதாவது ஸார்..'' என கொஞ்சம் இழுத்த மதுரா மேலும் கொஞ்சம் யோசித்துவிட்டு, ''அவரது காதலி வர்ணனையாய் கூறி விவரித்திருக்கிறார். அதைச் சொல்லட்டுமா?''



''ம்ம்... சொல்லு...''

''அதாவது... அவள் தேவேந்திரனின் காதலி பெரிய அழகியாம். ரதி போல் அழகு அவளுக்காம். கண்களில் அழகாக மை வைத்திருப்பாளாம். கன்னக்குழிச் சிரிப்பால் பார்ப்போரை எல்லாம் மயக்குவாளாம். இப்படி புதிர் போல் என்னிடம் நிறையச் சொல்லி இருக்கிறார் தேவேந்திரன்...''

மதுரா சொல்லச் சொல்ல கிரிதரனின் முகம் மாறி இறுகித்தான் செய்தது.

''அப்படியா..? தேவேந்திரன் அப்படியா உன்னிடம் சொன்னான்?''

''அப்படியேதான் ஸார்...''

கிரிதரன் குனிந்து இம்முறை மதுராவின் முகத்தை உற்றுப் பார்த்தான்.

''சரி மதுரா, அந்தப் பெண்.. அப்படி தேவேந்திரன் வர்ணித்த காதலி யார் என்று உனக்குத் தெரியுமா? நீ கண்டு பிடித்தாயா?''

கிரிதரன் ஆவலாய் கேட்டதற்கு உதடுகளைப் பிதுக்கினாள் அவள்.

''ம்ஹூம்! எவ்வளவோ முயன்று பார்த்தும் கண்டு பிடிக்கவே முடியவில்லை ஸார்...''

''அப்படியானால் தேவேந்திரனிடமே யார் அது என்று கேட்டு விட வேண்டியதுதானே...?''

''ம்ம்... அதையும் கேட்டுப் பார்த்தேன். ஆனால்...''

மதுரா இழுக்க எரிச்சலாய் அவளைப் பார்த்தான் கிரிதரன்.

''ஆனால்... என்ன? சொல்லு!''

''தேவேந்திரன் மறுத்து விட்டார். அது பற்றி சரியான சமயம் வரும்போது சொல்வாராம். அதுவரை நான் அமைதி காக்க வேண்டுமாம்..''

''அப்படியா?''

''அப்புறம் இன்னொன்றும் சொன்னார்.''

''என்ன?''

''அந்தக் காதலி பற்றி அவர் வெளிப்படையாய் அறிவிக்கும்போது எல்லோருக்கும் ஷாக் அடித்த மாதிரி அதிர்ச்சி ஏற்படுமாம். தாங்கிக் கொள்ள முடியாமல் தவிப்பார்களாம்...''

''ஓஹோ! அப்படி வேறா?''

''அதான்.. அதனால்தான்.. அந்த தேவேந்திரன் காதலி பற்றி யார்.. எனத் தெரிந்து கொள்ள ஆவலாய் இருக்கிறது.. ஸார்.. நீங்கள் அவரது முகவரியை தொலைபேசி எண்ணைக் கொடுத்தால் நானே விசாரித்து தெரிந்து கொள்கிறேன்...''

மதுரா சொல்லச் சொல்ல எரிந்து விழுந்தான் கிரிதரன்.

''அதெல்லாம் ஒன்றும் வேண்டாம். நானே விசாரித்து தெரிந்து கொண்டு பின் உன்னிடம் சொல்கிறேன். நீ போய் வேலையைப் பார்..!''

சிடுசிடுத்த முகத்துடன் கிரிதரன் சொல்ல அவனை முடிந்தவரை எரிச்சல் படுத்தி விட்ட திருப்தியில் சிரிப்புடன் அங்கிருந்து அகன்றாள் மதுரா.



# 28

மறுநாள் விடிந்ததும் இதே சிந்தனையாய்த்தான் அலைந்தாள் மதுரா.

எப்படியாவது கிரிதரனிடம் இருந்து அந்த தேவேந்திரனின் முகவரியை தொலைபேசி என்னை வாங்கிவிட வேண்டும் என்று.

என்ன செய்ய..? என தீவிரமாய் யோசித்தாள்.

கிரிதரன் இனி ஒரு போதும் தர மாட்டான். நேர்வழியில் கேட்டு பிரயோஜனமில்லை.

குறுக்கு வழியில்தான் வாங்க வேண்டும். அது எப்படி?

அவள் யோசிக்க.. மின்னலாய் அந்த வழி புலப்பட்டது.

கிரிதரன் இது போன்ற முகவரிகளை, தொலைபேசி எண்களை ஒரு டயரியில் தான் எழுதி வைப்பது வழக்கம்.

அந்த டயரி மட்டும் கிடைத்து விட்டால் போதுமே!

அந்த மஞ்சள் நிற டைரியை அவள் எப்போதும் வீட்டிலிருக்கும் அவனது அறையில் உள்ள பீரோவில் பத்திரப் படுத்தி வைப்பதை மதுரா பலமுறை கவனித்திருக்கிறாள்.

அதை மட்டும் எடுத்து விட்டால் போதும்!

எல்லா வேலையும் சுலபமாகிவிடும்.

யோசித்த மதுரா மதியம் பாட்மிட்டன் விளையாட என கிரிதரன், உதயா, கௌளரி மூவரும் பக்கத்து பள்ளிக்கூட

மைதானத்திற்கு கிளம்பிச் செல்வதை அறிந்திருக் கிறாள்.

ஆகையால் அதுவே கிரிதரனின் ரூமைக் குடைய சரியான நேரம் என முடிவெடுத்தாள்.

தனது திட்டத்தை மேலும் தாமதிக்காமல் அன்று மாலையே மூவரும் பாட்மிட்டன் விளையாடச் சென்றதும் கிரிதரனின் அறையை நோக்கிக் கிளம்பினாள்.

நல்லவேளையாய் ரூமில் யாரும் இல்லை. அவள் எதிர்பார்த்த விதமாய் ரூம் கதவு லாக் செய்யப்படாமல் திறந்தே இருக்க.. மெல்ல பூனையாய் நழுவி உள்ளே நுழைந்தாள் மதுரா.

ஐந்து நிமிடம் கூட ஆகவில்லை.

புக் ஷெல்ப்பில் புத்தகங்களுக்கு இடையே இருந்த மஞ்சள்நிற டயரியை கண்டு பிடித்து விட்டாள்.

அதை ஆவலாய் எடுத்துப் பிரித்தாள்.

''உள்ளே அவர் எதிர்பார்த்த மாதிரியே தேவேந்திரனின் முகவரி தொலைபேசி எண்கள்.''

கண்கள் பிரகாசிக்க டயரியை மூடிக் கொண்டு விறுவிறுவென வெளி வந்தார்.

இன்னும் யாரும் வரவில்லை. யாரும் பார்க்கவில்லை!

வந்தது போலவே அமைதியாய் நழுவினாள்.

தன் ரூம் பக்கம் போனாள்.

கதவைச் சாத்திக் கொண்டு டயரியைப் பார்த்தவள்.. நெம்பரைப் பத்திரப்படுத்திக் கொண்டாள்.

அன்று இரவு ஒன்பது மணி வாக்கில் ஊரடங்கிய வேளையில் மெல்ல தொலைபேசியை எடுத்து நெம்பரைச் சுழற்றினாள்.



கொஞ்ச நேரத்தில் தொலைபேசி உயிர் பெற்றது.

''பேசியது.. தேவேந்திரனே தான்!'' என்ன ஒரு ஆச்சரியம்..! என வியந்தே போய்விட்டாள்.

அவள் ஆச்சரியத்தை அதிகப்படுத்தும் வண்ணம் தான் தேவேந்திரனும் பேசினான்.

''யார்.. அது..?'' என அவன் கேட்டதும்,

''மதுரா...'' என்றாள் உற்சாகமாக.

ஆனால் தேவேந்திரனிடம் எந்த உற்சாகமோ.. பரபரப்போ இல்லை. மிகச் சாதாரணமாகவோ பேசினான்.

''ஓ.. மதுராவா.. என்ன விஷயம்?'' என்றான் சுருக்க மாக.

''தேவேந்திரன், நீங்கள்... நீங்கள்.. ஏன் போக வேண் டும்? உடனே திரும்பி வாருங்கள்.''

மறுபுறம் அவன் கடகடச் சிரிப்பு சிரிப்பது கேட்டது.

''ஓ நோ.. மதுரா! சூழ்நிலை காரணமாக நான் திரும்பி வரும் நிலையில் இல்லை. ஆனால்...''

''சொல்லுங்கள்.''

''வேறு ஒரு விஷயத்திற்கு, அதில் கண்டிப்பாய் கலந்து கொள்வதற்கு நான் வருவேன். அது என்ன தெரியுமா?''

''என்ன..? நீங்களே சொல்லுங்கள்!''

''அதான் உன் வெட்டிங் மேட்டர்! உனக்கும் கிரிதரனுக்கும் நடக்கப் போகும் கல்யாணம்..!''

தேவேந்திரன் சொல்ல மதுரா அதிரத்தான் செய்தாள்.

''என்ன சொல்கிறீர்கள்? எனக்கும் கிரிதரனுக்கும் கல்யாணமா?''

''ஆமாம்...''

''யார் சொன்னார்கள்?''

''வேறு யார் கிரிதரனே தான்! கல்யாண இன்விடேஷன் கூட அடிக்க டிசைன் தயாராக்கி விட்டானாமே?''

''அப்படியா...? எனக்குத் தெரியாது...!'' என்றாள் அவள்.

''உனக்குத் தெரியாதா...? என்ன உளறுகிறாய்...?''

அவன் கோபமாய் கேட்க பதிலுக்கு அவளும் கோப மாகவே பேசினாள். கிரிதரனுடன் தனக்குக் கல்யாணம் என தேவேந்திரன் அவன் வாயாலே அப்படிச் சொல்வது அவளுக்கு எரிச்சலாகவும் இருந்தது.

''உண்மையைத்தான் சொல்கிறேன். கிரிதரனை மணமுடிக்க எனக்குத் துளியும் சம்மதமில்லை...''

''அப்படியா..?''

''அப்படியேதான்! நீங்கள் கற்பனை செய்கிற மாதிரி யெல்லாம் ஒரு போதும் நடக்கப் போவதில்லை...!''

''மதுரா...''

குரலை உயர்த்தினான் கிரிதரன்.

''ம்ம்... சொல்லுங்கள்..''

அவளும் குரல் உயர்த்தினாள்.

''ஒருவேளை வேறு வழி இல்லாமல் போய் அப்படி ஒரு இக்கட்டான சூழ்நிலை வந்தால் என்ன செய்வாய்?''

''ஒன்று செய்ய மாட்டேன்..! செத்து விடுவேன்..!'' என்றாள் மதுரா உறுதியான குரலில்.

''மதுரா, உறுதியாகவா சொல்கிறாய்?''



''ஆம் உறுதியாக, இறுதியாகச் சொல்கிறேன்! அப்படி ஒரு நிலை வந்தால்.. நான் உயிரை விட்டாலும் விடு வேனே தவிர கல்யாணத்துக்கு சம்மதிக்க மாட்டேன்..!''

உறுதியாய் தீர்க்கமான குரலில் பேசி விட்டு டக்கென போனைத் துண்டித்தாள் மதுரா!

## 29

உதயாவும் கௌரியும் திட்டம் போட்டபடி தங்கள் வேலையை ஆரம்பித்திருந்தார்கள் போலும். செண்பகம் அத்தை மெல்ல அப்பாவிடம் கல்யாணப் பேச்சை ஆரம் பித்து விட்டதை காது படவே கேட்டு விட்டாள் மதுரா.

சொன்னபடியே திட்டத்தை நடத்த ஆரம்பித்து விட்டார்களே என பயப்படத்தான் செய்தாள் மதுரா. அதிலும் முந்தைய நாள் அவன் தேவேந்திரனுடன் போனில் பேசியும் அவனிடம் தான் சொல்ல விரும்பிய விஷயங்கள் ஒன்றையும் சொல்ல முடியாமல் போனதை நினைத்து வருந்தினாள்.

அவனோ உனக்கும் கிரிதருக்கும் விரைவில் கல்யாண மாமே.. நான் கண்டிப்பாய் வருகிறேன் என உளற வேறு செய்கிறான். அவனுக்கு எப்படி தன் நிலையை புரிய வைப்பது. அவனிடம் போனில் பேசியும் பிரயோஜன மில்லையே என கவலைப்பட்டாள்.

அந்தக் கவலை ரொம்பவும் வாட்டவே அன்றும் தேவேந்திரனுக்கு போன் செய்து பேச முயன்றாள்.

அவனோ எடுத்த எடுப்பிலே அவளை மேற்கொண்டு பேச விடாமல் தடுத்தான்.

''வேண்டாம் மதுரா. இனி நாம் பேசுவது நல்ல தல்ல...'' என்றாள்.

''பேசுவது நல்லதல்லவா? என்ன உளறுகிறீர்கள்?''

''உளறவில்லை. உண்மையைத்தான் சொல்கிறேன். இனி நீ இன்னொருவரின் மனைவி என்ற அந்தஸ்தை பெறப் போகிறாய்.. இந்த நிலையில் நாம் மேற்கொண்டு பேசுவது நல்லதல்ல...'' என்று சொன்னபடி பதிலை எதிர்பாராமல் போனை வைத்து விட்டான்.

பெரும் ஏமாற்றத்தில் துடிக்கத் தான் செய்தாள் மதுரா.

யாருக்கும் அவளது இக்கட்டான நிலைமை புரிய வில்லை.

அவர்கள் பாட்டுக்கு முதலில் கல்யாண பேச்சை ஆரம்பித்தவர்கள் பின் கல்யாணத்திற்கான முகூர்த்த நாளையும் தேட ஆரம்பித்து விட்டார்கள்.

பெரியவர்களுமா இப்படி? அத்தை நொடிக்கொரு தரம், ''மதுரா நீயே என் மாட்டுப் பெண்ணாக வர நான் கொடுத்து வைத்திருக்க வேண்டும்...'' என்றெல்லாம் புகழாரம் போல் சொல்லி அவளை நோகடித்துக் கொண் டிருந்தாள்.

இவன் கிரிதரனோ அதற்கு ஒரு படி மேலே போய் கல்யாண இன்விடேஷன் டிசைன்களை எல்லாம் அவ ளிடம் காட்டி அவளுக்கு பிடித்த வர்ணங்களை தேர்ந் தெடுக்க கெஞ்சினான். என்னடா.. இது கூத்து..? என



அதிர்ந்து திரும்பிப் பார்த்தால்... இன்னொரு புறம் உதயாவும் கௌரியும் அவளது பீரோவையெல்லாம் குடைந்து, இனி இந்த பழைய சாயம் அடித்த சேலைகள் எல்லாம் வேண்டாம். புதுமணப் பெண்ணாய் ஆகப் போகிறவள் பளிச் கலர்கள்தான் உடுத்த வேண்டும். என அவளைக் கேட்காமலேயே புதுச் சேலைகளை செலக்ட் செய்து எடுத்து வந்தார்கள். பீரோவை நிறைக்காத குறை யாய் அடுக்கினார்கள்.

அவர்களின் எல்லா நடவடிக்கைகளையும் பார்த்து திகைத்து திணறத்தான் செய்தாள் மதுரா.

ஒருபுறம் அவளுக்கு ஒன்றும் புரியவில்லை.

மறுபுறம் வீட்டில் நடப்பதையெல்லாம் பார்த்து மதுராவுக்கு ஒரே ஆச்சரியம்!

பயங்கர... திகைப்பு!

அவளைக் கேட்காமலே கல்யாண ஏற்பாடுகள் பேச்சில் தொடங்கி இன்விடேஷன், டிரஸ், என ஒவ் வொன்றாய் முன்னேறிக் கொண்டிருந்தது.

யாரும் அவளது அபிப்பிராயத்தை, சம்மதத்தை கேட்கவில்லை. அவள் சம்மதித்து விட்டதாகவே முடிவு பண்ணி விட்டார்கள்!

அல்லது.. வாழ வழியில்லாமல் நம்மையே நம்பி வந்தவள்.. நாம் சொன்ன எல்லாவற்றுக்கும் பூம் பூம் மாடாய் தலையாட்டுவதைத் தவிர வேறு வழியில்லை... என நினைத்து விட்டார்களா?

அவர்கள் கஷ்டமான சூழ்நிலையில் சொந்தம் கொண்டு அணைத்து உதவியது எல்லாம் உண்மைதான். வாஸ் தவம்தான். அதற்காக.. அவளுடைய விருப்பத்தை

உணராமல் அவர்கள் பாட்டுக்கு செய்வது எந்த விதத்தில் நியாயம்?

இந்த உதயா, கௌரிதான். சிறு பிள்ளைத் தனமாய் விளையாட்டுப் போல் செய்கிறார்கள் என பார்த்தால்... வீட்டுப் பெரியவர்களாவது யோசிக்க வேண்டாம்? திருமணத்திற்கு சம்மதம்தானே.. என ஒரு வார்த்தையாவது கேட்க வேண்டும் என்பது அவர்களுக்கு உரைக்கவே இல்லையே!

மேலும் உதயா, கௌரி, கிரிதரன் மூவருக்கும் அவள் தேவேந்திரன் மீது அதீத ஈடுபாடு காட்டி பழகியது தெரியும்.. ஏன்.. அவள் அவன் தேவேந்திரனை காதலிப்பதாய்க் கூட அவர்கள் வாயாலே சொல்லி இருக்கிறார்களே!

அப்படி இருக்கும் போது நாடகங்களில், சினிமாக்களில் காட்டும் வில்லத்தனம் போன்று இதற்கு, இவர்களது போக்கிற்கு இடைஞ்சலாய் இருந்த தேவேந்திரனை ஏதேதோ செய்து இங்கிருந்து அனுப்பி விட்டு.. வஞ்சகமாய் அல்லவா வலை விரிக்கிறார்கள்?

என்ன செய்வது?

இந்த சதிச் செயல்களை எல்லாம் எப்படித் தடுப்பது?

இருந்த ஒரே வழி.. தேவேந்திரன் தான்!

அவனும் சூழ்நிலை புரிந்தும் புரியாதது போல் கைவிரித்து விட்டான்!

ஒரு கணம் அவன் ஏன் இப்படி பயந்தாங்கொள்ளி போல் பிரச்சினைகளை சந்திக்காமல் விலகி ஓட வேண்டும்? என கொதிப்பாய் நினைத்தாள்.



ஆனால்.. அவளுக்கு அவனது சூழ்நிலையும் புரிந்தது. நெருங்கிய உயிர் நண்பன் ஒருபுறம். அந்த நண்பனின் சொந்தமான முறைப் பெண் மறுபுறம். இந்தச் சூழலில் அவன் யார் பக்கம் வந்து சாய முடியும்? யாரிடம் வந்து நியாயத்தைப் பேச முடியும்?

தன்னால் நட்பிற்கும் சொந்தத்திற்கும் எவ்வித களங்கமும் வந்துவிடக் கூடாதென்றுதானே அவன் நினைப்பான்? என்ன? தேவேந்திரன் அப்படித்தான் நினைத்திருக்கிறான். அதனாலே இங்கிருந்து வாய் பேசாமல் நழுவி யாருக்கும் இடைஞ்சல் இல்லாதபடி எங்கேயோ ஒளிந்து கொண்டான்.

ஆக.. மாட்டிக் கொண்டவள்.. அவள்தான். அவள் மட்டுமே!

இவள்.. என்ன செய்து விடுவாள் என அந்தத் தைரியத்தில்தான் உதயாவும் கௌரியும் தலை கால் புரியாமல் குதிக்கிறார்கள்? இவளைக் கேட்காமலே எல்லா ஏற்பாடுகளையும் செய்ய ஆரம்பித்து விட்டார்கள்...

கடவுளே! இது... எதில் போய் நிற்கும்?

கல்யாணத்திலா..?

மணப்பெண்ணாய் மணமேடையில் இப்படி வலுக்கட்டாயமாக எல்லாவற்றையும் செய்து உட்கார வைத்து விடுவார்களா? அவளும் குனியக் குனிய எல்லாவற்றையும் குனிந்த தலை நிமிராமலே ஏற்றுக் கொள்வாளா? பலியாடு போல் கிரிதரன் தாலியைக் கட்ட கழுத்தை நீட்டி விடுவாளா?

யோசிக்கும்போதே எல்லாம் பெரும் அபத்தமாய் மதுராவிற்குத் தோன்றியது. ஆனால் எல்லாம் கற்பனை

யல்லவே..! நிஜமாய்... நிஜமாய் அல்லவா ஒவ்வொன றாய் அவள் கண் முன்னே நடந்து கொண்டிருக்கிறது?

அவளது சூழ்நிலைக்காக.. அவள் எல்லாவற்றையும் பொறுத்துக் கொள்ள வேண்டுமா? விருப்பமில்லாமல் கிரிதரனை மணப்பதற்கு தலையாட்டித்தான் ஆகணுமா?

அப்படி ஒரு திருமணம் நடந்து வாழ்க்கை ஆரம்பித் தால் அது நன்றாகவா இருக்கும்? மனதில் ஒருவனை வைத்துக் கொண்டு ஒன்றுமே இல்லாதது போல் இன்னொருவனுடன் சிரித்துப் பேசி குடும்பம் நடத்துவது அவளால்தான் முடியுமா?

அதெல்லாம் நினைத்துப் பார்க்க முடியாத விஷய மாயிற்றே!

ஆமாம்.. இதற்கெல்லாம் பக்கத்தில் உறுதுணையாய் நின்று அவளைப் பாதுகாக்க வேண்டிய தேவேந்திரன் ஏன் ஓடி ஒளிந்து கொண்டான்?

என்ன.. காரணம்?

ஒருவேளை.. அவள் வெளிப்படையாய் சினிமாக் களில் வருவது போல், "ஐ லவ் யூ! நான் உன்னை காதலிக் கிறேன்! என்றெல்லாம் வசனம் பேசி வெளிப்படையாய் தனது காதலை தெரிவிக்காததினாலா..?

அதனால்... அவன் அவள் வைத்திருந்த தீவிரக் காதலைத்தான் ஒருவேளை புரிந்து கொள்ளவில்லையா?

அப்படி.. அவளது காதலை புரிந்து கொள்ளாத அளவுக்கு தேவேந்திரன் ஒன்றும் மடையன் இல்லையே!

பின்.. எதற்காக இப்படியெல்லாம் நடக்க வேண்டும்?

யாரும் அவள் நிலையைப் புரிந்து நடக்கும் விஷயங் களை தடுப்பது போல் தெரியவில்லையே..!



மதுராவுக்கு ஒன்றும் ஓடவில்லை.

நடப்பதெல்லாம் தலைக்கு மேல் வெள்ளம் போன கதைதான்!

இனி அவளால் ஒன்றும் செய்ய முடியாதோ?

பித்துப் பிடித்தவள் போல்தான் இரண்டு மூன்று நாள் அலைந்தாள்.

எந்தவித முன்னேற்றமும் இல்லாமல் நெருக்கடி கூடிக் கொண்டே தான் இருந்தது.

கிரிதரனுக்கும் அவளுக்கும்.. எப்படி.. எந்த மண்ட பத்தில் வைத்து கல்யாணத்தை நடத்துவது யார் யாரை.. முக்கிய.. வி.ஐ.பி.க்களாய் அழைப்பது, இன்னிசை கச்சேரி, பிரபல ஆர்கெஸ்ட்ரா போன்று எதுவும் ஏற்பாடு செய்ய வேண்டுமா.. என ஒவ்வொன்றாய் பட்டியலிட்டு பேச ஆரம்பித்து விட்டார்கள்.

எல்லாமே... அவள் காது பட பேசினார்கள் தவிர ஒப்புக்காக ஒரு வார்த்தை கூட அவளிடம் சொல்லவும் இல்லை. கேட்கவும் இல்லை.

ஆமாம்.. மாப்பிள்ளையை முடிவு செய்துவிட்டு.. அதையே கேட்காதவர்கள் இதையா கேட்கப் போகிறார்கள்?

என்ன செய்வது..? என குழம்பித் தவித்தவள் மறுபடி யும் தந்தையைத்தான் தேடிப் போனாள்.

திருவாசகத்தை பயபக்தியோடு மனம் உருக படித்துக் கொண்டிருந்தவர் மெல்ல நிமிர்ந்து கனிவுடன் அவளைப் பார்த்தார்.

"குழப்பம் ஒன்றும் கொள்ளாதே. கண்மணி.. எல்லாம் நல்லபடியாக நடக்கும்..." என்றார் அவள் பேச்சை ஆரம்பிக்கும் முன்பாக.

''ஆனால்.. எல்லாமே.. நம்மிடம் கேட்காமலே நடக்க ஆரம்பித்து விட்டது போல் தெரிகிறதே!'' என்றாள் புருவம் உயர விழிகளின் படபடப்போடு.

சதாசிவத்துக்கு அவள் சொல்வது எல்லாம் புரியத்தான் செய்தது. அவரது முகமும் தீவிர சிந்தனைக்கு போனது.

''எனக்கும் அதுதான் புரியவில்லை அம்மா. எல்லோரும் திடீரென இந்தக் கல்யாணப் பேச்சை எடுத்துப் பேசுகிறார்கள். ரொம்பவும் தான் அவசரப்படுத்துகிறார்கள். நீதான் பார்த்து முடிவெடுக்க வேண்டும். நீ என்ன முடிவெடுத்தாலும் எனக்கு சம்மதம்தான் அம்மா!''

அப்பா இப்படிச் சொன்னதும் விருட்டென திரும்பி விட்டாள் மதுரா.

அப்பாவாவது தன் பக்கம் பேசுவார் தனக்காக முடிவெடுப்பார் என்று பார்த்தால் அவரும் நீயே முடிவெடு.. என்று அந்தப் பழியை நம் பக்கம் திருப்பி விட்டு விட்டாரே என எரிச்சலானாள்.

அன்று முழுவதும் அதே யோசனையில் பொழுதை கொதிப்பாய் கழித்தவள் மறுநாள் விடிந்ததும் முதல் வேலையாய் மூவரையும் தேடிப் போனாள்.

அவர்களை முக்கியமான விஷயம் பேச வேண்டும் என அழைத்து வந்தாள். உதயா, கௌரி, கிரிதரன் அடங்கிய மூவர் கூட்டணி எவ்வித மறுப்பும் சொல்லாமல் அவளைப் பின் தொடர்ந்து வந்தது.

''சொல்ல வேண்டியதைச் சொல்...'' என்றார்கள் மூவரும்.

மதுரா முகம் சிவந்து அனலாய் கொதித்தவள் நெருப்பாகவே சீறினாள்.



''நீங்கள் என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்...?'' என்றாள்.

''என்ன மதுரா சொல்கிறாய்?'' என்றாள் உதயா.

''புரியாதது போல் பேசாதீர்கள்...''

''முதலில் நீ புரியும்படி பேசு...'' என்றாள் கௌரி முன்னால் வந்து.

''யாரைக் கேட்டு.. இப்படி கல்யாண ஏற்பாடுகளைச் செய்கிறீர்கள்.. சொல்லுங்கள்?''

''யாரைக் கேட்க வேண்டும்?'' என்றாள் உதயா மறுபடி குரலை உயர்த்தி.

''யாரைக் கேட்க வேண்டுமா? என்ன உளறல் இது? நான் தானே மணப்பெண்.. என்னை கேட்க வேண்டாமா? என் சம்மதம் வேண்டாமா?''

''அதான் தெரிந்து கொண்டோமே..! நீ கிரிதரனை விரும்புகிறாய்.. அவனைக் காதலிக்கிறாய். அதனாலே இந்தக் கல்யாண ஏற்பாடுகள்..!''

''இல்லை! இல்லவே.. இல்லை! நான் கிரிதரனை காதலிக்கவில்லை. நான் விரும்புவது தேவேந்திரனைத் தான்! அவரைத்தான் காதலிக்கிறேன். அவரையே கட்டிக் கொள்ள விரும்புகிறேன்.''

''என்ன தேவேந்திரனையா?''

''ஆமாம் தேவேந்திரனைத்தான்.. விரும்புகிறேன்... விரும்புகிறேன்... விரும்புகிறேன்...!'' குரல் உயர உச்சஸ் தாயியில் கத்தியே சொன்னாள் மதுரா.

மறுகணம்தான் அந்த அதிசயம் நடந்தது.

மதுராவின் கத்தலைக் கேட்ட மூவரும் திடுக்கிட்டு ஸ்தம்பிப்பதற்குப் பதில் இறுக்கம் விலகியவர்களாய்.. மென்மையாய் ஆரம்பித்து கடகடவென சிரிக்க ஆரம் பித்தார்கள்.

## 30

உதயா, கௌரி, கிரிதரன் எல்லோருமே சிரிக்க ஆரம் பித்தனர். அதுவும் அடக்க முடியாமல் விழுந்து விழுந்து சிரிக்குமளவுக்கு.

மதுரா விழிகள் விரிய அதிசயித்து திகைக்கத்தான் செய்தாள்.

நாம் சொன்ன விஷயங்களுக்கு கோபம் வந்து தாம் தீம் என குதிப்பார்கள் என பார்த்தால்... எல்லோரும் சிரிக் கிறார்களே!

மூச்சு வாங்க அவள் ஆவேசப்பட்டு பேசியது அவர் களுக்கு கடுகளவேனும் உரைக்கவில்லையே! என்னா யிற்று... இவர்களுக்கு? எருமை மாட்டின் மீது மழை பெய்த கதையாய் திடீரென சொரணை இல்லாமல் போய் விட்டதா?

அவள் திகைக்க.. அவள் வியப்பை மேலும் அதிக மாக்கியபடி கௌரியும் உதயாவும் பக்கத்தில் வந்து அவளைத் தோளோடு அணைத்துப் பிடித்துக் கொண்ட வர்கள் மறுபடியும் அந்த விழுந்து விழுந்து சிரிப்பைத் தொடர்ந்தார்கள்.



சரிதான்.. நட்டு எதுவும் கழண்டு விட்டதோ..! ஆனா லும் ஒரே நேரத்தில் மூணு பேருக்குமா கழரப் போகிறது?

அவள் அதிசயமாய் மூவரையும் பார்க்க.. கஷ்டப்பட்டு சிரிப்பை அடக்கிய உதயாவும் கௌரியும், ''அட நம் பத்தாம் பசலி மதுரா.. இந்தப் பேச்சு.. பேசுகிறாளே! பேஷ்.. பேஷ்.. மதுரா மேடம்.. உங்க பேச்சு.. கேட்க.. ரொம்ப நன்னா.. இருக்கு...'' என்று சொல்லவும் தான் அவர்கள் புரிந்து, எதையோ ரசித்துச் சிரிக்கிறார்கள் என்பது அவளுக்கு உரைத்தது.

அவள் மேலும் புருவம் உயர்த்தி விழிகளை விரிக்க, போலியாய் பதறிய கௌரி, ''போதும்... போதும். மதுரா, மேடம், இதற்கு மேலும் விழிகளை விரிக்காதீர்கள். உங்கள் அழகான கருவிழிக் கண்மணிகள் தெறித்து வெளியே வந்துவிடப் போகிறது...'' என்றாள் சிரிப்பு அடங்காமல்.

மதுராவுக்கு பொறுக்க முடியவில்லை.

''இங்கு.. என்னதான் நடக்கிறது? சொல்லுங்கள்!'' என்றாள்.

''ஒரே வரியில் சொல்லட்டுமா?'' என்றாள் உதயா.

''சொல்லு...''

''இங்கு.. இவ்வளவு நாள் நடந்தது எல்லாம் எங்களது கச்சிதமான நடிப்பு...''

''நடிப்பா...?''

''அதேதான்... அந்த நாலு எழுத்து நவன்னா, டியன்னா ப்பன்னா, புவன்னா... தான்!''

''நடிப்பா? எதற்கு?''

''எல்லாம்.. உன்னை சோதிக்கத்தான்! உன்னுடைய உண்மையான மனதை அறிய நாங்கள் நடத்திய திரு விளையாடல்தான்...!''

அவர்கள் சொல்லச் சொல்ல புரியாமல் மதுராவுக்கு எரிச்சல்தான் வந்தது.

''என்ன உளறுகிறீர்கள்?'' என்றாள் கோபமாய்.

கௌரி அவள் முன்னால் வந்து கைகட்டி மூக்கைப் பிடித்து கிள்ளினாள். ''கோபமெல்லாம் படக்கூடாது. சாந்தம்... சாந்தம்.. மகாராணி. முதலில் உங்கள் ப்ரியமான மணாளனை, ராஜகுமாரனை காட்டி விடுகிறேன். செங் கனலாய் கொழுந்து விட்டு எரியும் உங்கள் கோபத்தீயை அவர் இதமாக அணைக்கட்டும்...'' என்றபடி கௌரி திரும்பி கிரிதரனைப் பார்த்தாள்.

''அண்ணா.. சஸ்பென்ஸ்.. போதும்.. மதுரா இதற்கு மேல் தாங்க மாட்டாள். ஒளிந்திருக்கும் நம் கதாநாயகரை உடனே வரச் சொல்லுங்கள்.''

மணாளன்.. ராஜகுமாரன்.. கதாநாயகன்.. ஒளிந்திருக் கிறானா.. யார் அது?

மதுரா திடுக்கிட்டுப் போய்த்தான் பார்க்க.. கிரிதரன், ''சஸ்பென்ஸ் இப்போது உடைகிறது..'' என்றபடி கைகளைத் தட்டினான். ''வாடா.. என் அருமை ராஜகுமாரா.. ஒளிந் திருந்தது.. போதும்..! நீ போட்டியில் ஜெயித்து விட்டாய். உன்னைத் தான் காதலிப்பதாய் மதுரா வெளிப்படை யாகவே சொல்லி விட்டாள்!'' - கிரிதரன் சிரித்தபடி கத்தியதும் பின்னால் சுவர் மறைவு ஒன்றில் இருந்து வந்த உருவத்தைப் பார்த்து மதுராவின் மூச்சே ஒரு கணம் நின்று விட்டது.



வெளிவந்தது... சாட்சாத்... அவளது ராஜகுமாரன்தான் தேவேந்திரன்தான்...!

ஐயோ! தேவேந்திரனா..? அவர்.. எப்படி இங்கு?

நம்ப முடியாத ஆச்சரியத்துடன் ஷாக்கடித்தது போல் தான் அவனைப் பார்த்தாள். திகைப்பு விலகாமல் பக்கத்தில் ஓடினாள்.

பக்கத்தில் சென்று நம்பாமல் அவனை உற்றுப் பார்த்தாள்.

''கிள்ளிப் பார்... நான் தேவேந்திரன்தான்!'' என்றான் தேவேந்திரன்.

''நீங்கள்.. இவ்வளவு... நேரம் இங்குதான் ஒளிந்து இருந்தீர்களா..? இவர்கள்.. அப்படிச் சொல்கிறார்கள்.. அப்படியானால்.. ஊரிலிருந்து.. எப்போது வந்தீர்கள்?''

தேவேந்திரன் தனது இதழ் விரித்த புன்னகையை பெரிதாக்கினான்.

''ஊருக்குச் சென்றால்தானே.. திரும்பி இங்கு வருவ தற்கு? நான் எங்கும் செல்லவில்லை. இங்கே.. இதே.. வீட்டில் கிரிதரன் ரூமில் ஒளிந்து தான் கிடந்தேன்..!'' என்றான் தேவேந்திரன், ''நீ போன் பேசும்போது கூட செல்போனில் பக்கத்து ரூமில் இருந்துதான் உன்னிடம் பேசினேன்!'' என்றான் மொத்தமுமாய் அவளை அதிர வைத்தவாறு.

''என்ன ஊருக்குச் செல்லவில்லையா..? கிரிதரன் ரூமில் ஒளிந்து கிடந்தீர்களா?''

''ஆமாம்.. கண்மணி. எல்லாமே.. ஓர் நடிப்பு! ஆனா லும் உன் கண்ணில் படாமல் இந்தப் பதினைந்து நாட்

களை இந்த வீட்டில் ஒளிந்தபடி கடத்துவதற்குள்.. போதும் போதும்.. என்றுதான் ஆயிற்று..''

''ஐயோ! ஒன்றுமே புரியவில்லை..! என்னைக் குழப்பு.. குழப்பு.. என்றுதான் குழப்புகிறீர்கள்..! தெளிவாக எனக்குப் புரியும்படி சொல்லுங்கள்..'' என்றாள் அவள் அதே தவிப்புடன்.

''சொல்கிறோம்... அது பெரிய கதை...'' என்றபடி தேவேந்திரன் கிரிதரனைப் பார்த்து கண் சிமிட்டியபடி, ''நீ போட்டு ஆட்டுவித்த டிராமாவை நீயே விளக்கு...'' என்றான்.

''ம்ம்... சொன்னால் போயிற்று...'' என கிரிதரனும் பதிலுக்கு கண் சிமிட்டியவன் கதை போல் நடந்தவை களை விவரிக்க ஆரம்பித்தான்.

''மதுரா... கடந்த மூன்று மாதங்களாக உன் கண் முன்னால் நடந்தது டிராமாதான். உதயா, கௌரி, நான், தேவேந்திரன் எல்லோரும் சேர்ந்து போட்ட நாடகம்தான்! அதை விவரமாகச் சொன்னால்தான் உனக்குப் புரியும். முதலில் நானும் தேவேந்திரனும் உன்னை முதன் முதலில் பார்த்த ரயில்வே ஸ்டேஷன் சம்பவத்தில் இருந்தே ஆரம்பிக்கிறேன். அன்று நீ தேவேந்திரன் நான்தான் என நினைத்துக் கொண்டு பேசினாய்.. அவன்தான் கிரிதரன் எனவும் அப்போதே நம்பி விட்டாய்.

வீட்டில் உள்ள அனைவரும் எனக்குத் தெரிந்து நீ எனது சொந்த அத்தை பெண். உன்னைத்தான் நான் கட்டிக் கொள்ள வேண்டும் என்பது போல் ஒரு மாயையே ஏற்படுத்தி இருந்தார்கள்.

அந்தச் சூழநிலையில்தான் நீ கிரிதரன் என தேவேந் திரனை நினைத்துக் கொண்டு அவனிடம் அதீத ஈடுபாடு காட்டிப் பேசினாய். பழகினாய்.



பின் அவன் கிரிதரன் இல்லை. அவன் தேவேந்திரன் என்று தெரிந்த போதும் நீ அவன் மீது ஈடுபாடு காட்டி னாய். அவனை வெகுவாய் ரசித்தாய்.

இதைக் கவனித்த உயிருக்குயிரான நண்பர்களான நானும் தேவேந்திரனும் ஒரு போட்டி வைத்தோம். அதுவும் என்ன போட்டி தெரியுமா? காதல் போட்டி...!''

''என்ன காதல் போட்டியா?''

- என்றபடி மதுரா அதிர, ''அவசரப்படாதே. முழு வதையும் கேள்..!'' என்றபடி கிரிதரன் தொடர்ந்தான்.

''காதல் போட்டிதான்! அதுவும் எப்படி? எங்கள் இருவரில் யாரை நீ விரும்புவாய் என்கிற ஒரு விளை யாட்டுத் தனமாய் போட்டி. அதாவது நானும் தேவேந் திரனும் உனக்கு காதல் வலை வீசுவோம். நீ யார் பக்கம் விழுகிறாய்.. என்பது.. எங்களுக்குள் நாங்கள் வைத்த போட்டி! இன்னும் விளக்கமாகச் சொன்னால்.. நீ சூழ் நிலைக்காக சொந்தங்கள் நிர்ப்பந்தப் படுத்தும் என்னைக் காதலிக்கப் போகிறாயா? அல்லது.. இயற்கையாக உன் மனதை தட்டி எழுப்பிய தேவேந்திரனை காதலிக்கப் போகிறாயா? என்பதுதான்! இதற்காக நாங்கள் பெட் கட்டாத குறையாய் ஒரு போட்டியைத் தொடங்கினோம். எனக்கு ஆதரவு திரட்டுவது போல் உதயாவும் கௌரியும் களத்தில் இறங்கி.. என் மேல் காதல் வரும்படி வேண்டு மென்றே சில சூழ்நிலைகளை ஜோடித்துப் பார்த்தார்கள். ஆனால் இன்றுதான் நீ தேவேந்திரனை காதலிப்பதை ஒத்துக் கொண்டாய்!

அதே நேரம் தேவேந்திரன் மேல் நீ கொண்டிருந்த காதலை உறுதிப் படுத்த கிசுகிசுப்பு பாணியில் பேசி உனது உண்மையான மனநிலையை சீண்டினர். அப்படி

சீண்டிய போதுதான் தேவேந்திரன் மீது நீ வைத்திருந்த காதல் எத்தகையது என்பதை நீ கூட உணர்ந்திருப்பாய் என நினைக்கிறேன்.

மேலும் நீ நினைப்பது போல் நான், உதயா, கௌரி மூவரும் நீ தேவேந்திரன் மேல் காதல் வைத்திருப்பதை ஆரம்பத்திலேயே உணர்ந்து விட்டோம். நாங்கள் அதற்கு எதிரியும் அல்ல. தேவேந்திரன் என் உயிர் நண்பன் மட்டும் அல்ல... எங்கள் குடும்பத்து உறுப்பினர் மாதிரித் தான் அவனும் அதே போல் உதயா, கௌரிக்கும் அவன் தேவேந்திரனும் உடன் பிறவா அண்ணன் தான்!

நாங்கள் மூவரும் விளையாட்டுத்தனமாய் சீண்டி உன் காதலை ரசித்தோம். குடும்பச் சூழ்நிலைக்காக... காதலைச் சொல்லாமல் எவ்வளவு காலம் உன்னால் தாக்குப் பிடிக்க முடியும் எனவும் நினைத்தோம். ஆனால் இன்றுதான் நீ வெளிவந்தாய். தேவேந்திரனைக் காதலிப்பதை வெளிப் படையாய் சொல்லி இருக்கிறாய்.

ஆனால்.. நீ.. சரியான கல்லுளி மங்கினி என்றுதான் சொல்ல வேண்டும். ஒரு பக்கம் தேவேந்திரன் மேல்.. உள்ள காதலை விடாமல்... மறுபக்கம் குடும்பச் சூழ் நிலையை புரிந்து கொண்டு.. யார் மனதையும் புண் படுத்தாமல் அதற்கேற்றாற் போல் நடந்து கொண்டு... மிக நன்றாக பாலன்ஸ் செய்தாய். கடைசி வரை சுயநலம் கொள்ளாமல் அதே நேரத்தில் உன் காதலையும் விட்டு விடாமல் நடந்து ஜெயித்தும் காட்டி விட்டாய். உனக்கு.. மட்டுமல்ல.. தேவேந்திரனோடு இணையப் போகும் உங்களது காதலுக்கும்.. எனது.. இல்லை... இல்லை.. எங்களது இனிய நல் வாழ்த்துக்கள்!''



கிரிதரன் சொல்லியபடி தனது உரையை முடிக்க, உதயாவும் கௌரியும் பக்கம் வந்து அவள் கைகளைப் பிடித்தனர். ''எங்களை மன்னித்து விடு மதுரா. சும்மாவாக ஒரு விளையாட்டுத்தனமாய்த்தான் உன்னைச் சீண்டி அப்படியெல்லாம் நடந்து கொண்டோம். எங்கள் மீது கோபமில்லையே..?'' என்ற போது மதுரா தன் கோபம் எல்லாம் நீங்கியவளாய் அழகுப் புன்னகையை பெரிதாக் கினாள்.

அன்பொழுக... அவர்கள் இருவரையும் கட்டிக் கொண்டாள்.

கட்டிப் பிடித்த அவளை விடுவித்த அவர்கள் இரு வரும், ''என்ன கூத்து... இது? இனி நீ கட்டிப் பிடிக்க வேண்டியது என்னை அல்ல.. மிஸ்டர் தேவேந்திரன்.. ஹி.. இஸ்.. வெயிட்டிங்...'' என்றபடி அவளை தேவேந் திரனை நோக்கி ஏறக்குறைய தள்ளியே விட்டனர்.

தடுமாறி சிரிப்புடன் தன் பக்கம் வந்த மதுராவை அதற்காக காத்திருந்தவன் போல் தாவி அணைத்துக் கொண்டான் தேவேந்திரன்.

அவன் அப்படி அணைத்ததும் கிரிதரன் திரும்பி உதயாவையும் கௌரியையும் பார்த்தவாறு, ''ரெடி ஜூட்.. இனி நமக்கு இங்கு வேலை இல்லை. கிளம்புவோம்..!'' என சைகை செய்ய.. வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு ஓசையில்லாமல் மூவரும் இடத்தை காலி செய்தனர்.

தேவேந்திரன் அவர்கள் சென்றதை உறுதிப்படுத்தி விட்டு மதுராவை பிடித்திருந்த தனது அணைப்பை இறுக்கியவன் காதல் பார்வையை அவள் மீது பதிக்க சினமாய்த் தான் அவனை ஏறிட்டாள் மதுரா.

''முதலில் இந்த அணைப்பை விடுங்கள்.... பெரிதாய் அணைக்க வந்து விட்டாராக்கும்...'' என்றாள் சீறலாய்.

தேவேந்திரனோ.. அந்த சீறலுக்கு கொஞ்சமும் அசராமல் அவளை மேலும் இறுகப் பிடித்து அவளது பட்டான கன்னத்தில் மெல்ல தன் இதழ்களை ஒற்றி யெடுத்தான்.

''இவ்வளவு நடந்திருக்கிறது. அனல் பறக்கும் கோபம் இல்லாமலா இருக்கும். அதை கொஞ்சம் தணிக் கிறேன்...'' என்றபடி மீண்டும் அவளை நோக்கி குனிய அவனை தடுத்தவள் முதலில் எனது கேள்விகளுக்கு பதில் சொல்லுங்கள்..'' என்றாள்.

''ம்ம்.. கேளுங்கள்... மேடம்...'' என்றான் அவன் பவ்யமாய்.

''அவர்கள்தான் லூசுத்தனமாய் விளையாட்டுப் போல் ஒரு நாடகம் போட்டால் நீங்கள் எப்படி அதற்கு ஒப்புக் கொண்டீர்கள். அதைச் சொல்லுங்கள்..?'' என்றாள் சீறல் குறையாமல்.

''ஓ.. நீ அதைச் சொல்கிறாயா?'' என்றபடி தேவேந் திரன் இதழ்களை விரித்து தனது வசீகரப் புன்னகையை மீண்டுமொருமுறை காட்டியவன், ''நடந்த நாடகம் முழுவதும் எதற்கு தெரியுமா?'' என்றான.

''எதற்கு?''

''நீ.. யாரை காதலிக்கிறாய் என்பதைக் கண்டு பிடிக்கத்தான்...''

- சிரிப்பு பொங்க அவன் சொன்னாலும், அடங்காத வளாய் தனது அழகான தலையைச் சாய்த்தவள் அவனை முறைக்கத்தான் செய்தாள்.



''நல்ல.. ஆராய்ச்சி! ஏன் உங்களுக்குத் தெரியாதா? வாய்விட்டு சொன்னால்தான் புரியுமா?''

குரல் உயர மதுரா கேட்க... தலையசைத்தான் தேவேந் திரன்.

''ஐயோ..! முதலில் இந்த கோபத்தைக் குறை. மதுக் கண்ணு என்னதான் கோபத்தில் உன் அழகு ஜொலித் தாலும் இந்தக் 'கனல்' பறக்கும் அழகை.. நான் அப்படியே ரசித்துப் பார்க்க கொஞ்சம் பயமாய்த்தான் இருக்கிறது.''

அவன் சிணுங்கலாய்ச் சொல்ல.. செல்லமாய் கையை ஓங்கி அதட்டினாள் அவள். ''இந்த ஐஸ் வைக்கிற வேலை யெல்லாம் என்னிடம் வேண்டாம். என் கேள்விக்கு முதலில் பதில் சொல்லுங்கள்...'' என்றாள் கறாராய்.

''கேளுங்கள் மேடம்.''

''நான் யாரை காதலிக்கிறேன் என்று தெரியாததாலா இந்தப் போட்டி?''

''நிச்சயமாக அப்படித்தான். நீ யாரைக் காதலிக்கிறாய் என்று உறுதியாய்த் தெரியாதது ஒரு பக்கம், யாரைத் தான் காதலிப்பாய் என்பது ஒரு பக்கம், சூழ்நிலைக்காக உன் நிலையை மாற்றிக் கொள்வாயா என்பது ஒரு பக்கம். என எல்லாவிதத்திலும் ஒரு சந்தேகம். ஒரு கேள்வி. அந்தக் கேள்விக்கு விடை காணத்தான் இந்தப் போட்டி..!''

''சரி.. இதற்கு அவர்கள்தான் ஏற்பாடு செய்தார்கள் என் றாலும் என்னுடைய உணர்வுகளில் விளையாட நீங்களும் எப்படி ஒத்துக் கொண்டீர்கள்? எப்படி சம்மதித்தீர்கள்?''

மதுராவின் கேள்விக்கு தேவேந்திரன் ஒரு கணம் நெளியத்தான் செய்தான். ''தவறுதான் கண்மணி. ஆனால் இந்த ஊடலில் ஒரு சுவாரஸ்யம் கிடைக்கும் என்பதால்

ஒத்துக் கொண்டேன். ஒரு புறம் நமக்கு தவிப்பாக இருந்தாலும்.. அதிலும் ஒரு இனிமை தென்பட்டது தானே?''

''இனிமையா..? அப்படித் தவித்தது இனிமையாகவா உங்களுக்குத் தெரிகிறது?'' என கண்கள் விரிய சினமானவள், ''என்னுடைய தவிப்பு.. நான் பட்ட வேதனை எனக்குத் தான் தெரியும்..'' என்றபடி குரல் கம்ம அவளை ஒருமுறை நெஞ்சார அணைப்பு செய்து விடுவித்தான் அவன்.

அவள் புரியாமல் மேலும் விழிகளை மலர்த்த, ''என்ன அப்படிப் பார்க்கிறாய்? இது போன்ற நெஞ்சார அணைப்பு ஒன்று செய்துதானே.. என் காதலை உனக்குத் தெரிவித்தேன். உன் காதலையும் நான் அறிந்தேன்...'' என்றான் பீடிகையாய்.

அவள் மதுராவும் புருவம் உயர்த்தினாள்.

''உங்கள் காதலை தெரிவித்தது சரி. அது.. என்ன என் காதலை நீங்கள் உணர்ந்தது?''

அவள் இழுக்க சிரித்தான் தேவேந்திரன்.

''புரியவில்லையா..? உன்னை திடுதிப்பென இழுத்து அப்படி நெஞ்சார அணைப்பு செய்தபோது நீ அதை எவ்வித எதிர்ப்பும் காட்டாமல் அனுமதித்தாயே.. அந்தக் கணத்தில்.. அப்போதே புரிந்து கொண்டேன். நீயும் என் மீது உள்ளுக்குள் தீவிரமான காதலை கொண்டிருக்கிறாய்.. என..'' என்றவன், ''என்ன.. நான் சொல்வது சரி தானே?'' என அவள் முகம் நிமிர்த்த, குங்குமமாய் சிவந்தபடி குனியப் போனாள் அவள்.



''இந்த வெட்கமெல்லாம் என்னிடம் ஆகாது.'' என்றபடி தனது இதழ்களை வேகமாய் அவள் கன்னங்களுக்கு அவன் கொண்டு செல்ல முயல, அவசரமாய்த் தடுத்தவள், ''இன்னுமொரு கேள்வி...'' என்றாள்.

''அட.. கேள்விகள் முடியவில்லையா? எதுவானாலும் கேள் கண்மணி..'' என்றான் சன்னமாய்.

''இந்த நாடகக் கூத்து.. நீங்கள் நடத்திய காதல் போட்டி பெரியவர்களுக்குத் தெரியுமா? அவர்கள் அறியத்தான் நடந்ததோ?''

''ஐயையோ...'' என தேவேந்திரன் பதறியவன், ''இந்த விளையாட்டு பற்றி அவர்களுக்கு எதுவும் தெரியாது. அவர்களுக்கு தெரிந்த விஷயம் ஒன்றே ஒன்றுதான்.''

''அப்படியா..? அது.. என்ன?''

''நீ.. என்னை.. காதலிப்பது.. நான் உன்னை விரும்புவது. எல்லாம் அவர்களுக்கும் தெரியும்.''

''தெரியுமா.. எப்படி?''

''எல்லாவற்றையும் கிரிதரன் விரிவாய் விளக்கமாய் சொல்லி விட்டான். அவர்களுக்கு புரியவும் வைத்து விட்டான். அவர்களும் சம்மதித்து விட்டார்கள்.''

''நிஜமாகவா? அவர்களுக்கு ஒன்றும் வருத்தம் இல்லையே?''

''நிச்சயமாக இல்லை.. கண்மணி. அவர்களுக்கு மட்டுமல்ல.. உதயா, கௌரி, கிரிதரன் மூவருக்குமே உன் முடிவில் எவ்வித வருத்தமும் கிடையாது. ஏனென்றால் அவர்கள் எப்போதும் என்னை வேறு நபராய் நினைத்ததில்லை. பிரித்துப் பார்த்ததில்லை. குடும்பத்து உறுப்பின

ராகவே என்னை கருதி வந்தார்கள். அதனாலே நம் முடிவை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டார்கள். கல்யாண மண்டபம், முகூர்த்த நாள், அழைப்பிதழ் டிசைன் என அவர்கள் பார்க்க ஆரம்பித்ததும்... நம் இருவரின் திருமணத்தை நடத்தத்தான்.''

தேவேந்திரன் சொல்லச் சொல்ல.. அவளுக்கு எல்லாம் புரிந்தது. தன் தலையை செல்லமாய் தானே ஒரு குட்டு குட்டியவள், ''அட, அசடு போல் ஒன்றையும் புரிந்து கொள்ளாமல் நான்தான் இருந்திருக்கிறேன்..!'' என நாணி உதடு கடித்து குனிந்தாள் அவள்.

அவள் வெட்கப்படும் அழகை வியந்து ரசித்தவன் அவள் முகம் நிமிர்த்தி நெற்றியில் முத்தமிட்டு மேலும் சிவக்க வைத்தான்.

அப்படியே அவனது பரந்த நெஞ்சில் முகம் பதிய ஒட்டிக் கொண்டவள் மை விழிக் கண்களை மெல்ல மூடினாள். தேவேந்திரன் தன் பிடியை மேலும் இறுக்கினான். இனிமைக் கனவுகளில் சஞ்சரிக்க ஆரம்பித்தனர் இருவரும்.